Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

بسم الله الرحمن الرحيم

# அல்ஹஸனாத்

இஸ்லாமிய கலாசார மலர்

வெளியீடு

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி
Sri Lanka Jama'ath-e-Islami
77, Dematagoda Road,
Colombo-09.
Sri Lanka.
Phone-586030, 687081 692760.

அச்சுப் பதிவு

ஐ. பி. ஸி. அச்சகம்
320, தெமட்டகொட வீதி
கொழும்பு-9 (இலங்கை)
தொலைபேசி: 698771

விலை விபரம்

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ரூபா | 7-50 |
| வருடசந்தா | ரூபா | 100.00 |

(உள்நாடு)

| | |
|---|---|
| இந்தியா, பாகிஸ்தான், மாலை தீவு, சிங்கப்பூர், மலேசியா | 300.00 |
| மத்திய கிழக்கு நாடுகள் | 350.00 |
| ஏனைய நாடுகள் | 400.00 |


உள்ளே..... பக்கம்

இஸ்லாமிய சட்டத்தின் சிறப்பியல்புகள் 3
முன்னோடி - ஷஹீத் செய்யித் குதுப் (ரஹ்) 5
இல்லற வாழ்க்கை 7
ஜமாஅத் இன்றி இஸ்லாம் இல்லை 9
பாபரி மஸ்ஜித் விவகாரம் 13
குவைத் ஈராக் விவகாரம் 15
வளைகுடா பிரச்சினை 17
ஹிஜாப் கல்வி முயற்சிகளுக்கு தடையில்லை 19
இஸ்லாமிய அறிவியல் 24
மற்றும் பல.

விசுவாசிகளே! இஸ்லாத்தில் பூரணமாக நுழைந்து விடுங்கள். (அல்குர்ஆன் 2:208)

1990 ஒக்டோபர் / நவம்பர் 7. ஆகிர் 1411

ஆசிரியர் கருத்து

## இன்றையத் தேவை

இலங்கையில் இஸ்லாமிய தஃவாப் பணிகளில் ஈடுபடும் அமைப்புகளின் தொகை பெருகிவருவது ஒரு வகையில் மகிழ்ச்சியூட்டுகிறது. ஆனால் ஒவ்வொரு அமைப்பையும் சேர்ந்தவர்கள் இஸ்லாத்தைப்பற்றிக் கொண்டுள்ள விளக்கத்திற்கேற்ப தஃவாத் துறையில் அவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள், கையாளும் வழி முறைகள் சாதனங்கள் என்பவற்றில் பலத்த வேறுபாடு காணப்படுவது பெரும் இடைஞ்சலாக அமைந்து விடுவது கவலை தருகிறது.

இஸ்லாமிய தாஈகள் இஸ்லாத்தின் இலட்சியங்களையும் 'தீனை' நிலை நாட்ட ('இகாமதுத் தீன்') உதவும் வழி முறைகளையும் அதற்குத் துணையாக அமையும் சாதனங்களையும் பற்றித் தெளிவான விளக்கம்—பிரஞ்ஞை—உள்ளவர்களாக இருந்த போது தஃவாபணி மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப் பட்டது. வெற்றியும் கண்டது. நபிமார்களின் காலம் முதல் இன்றுவரை இஸ்லாமிய தஃவாப் பணிகளில் ஈடுபட்டு வெற்றி கண்டவர்களது வரலாறு இதற்குப் போதிய சான்றாகும்.

உணர்ச்சியூட்டும் பேச்சு, எழுத்து, வரலாற்றுச் சான்றுகள், கதைகள் என்பவற்றையே பலர் இப்போது தஃவாவின் பிரதான உத்திகளாகக் கருதுகிறார்கள். இதனால் மக்களின் தேவைகளுக்கும் பிரச்சினைகளுக்கும் மதிப்பளித்து அவற்றில் அவர்களுக்கு உதவுதல், இஸ்லாமிய இலட்சியங்களையும் நிறுவனங்களையும் நடைமுறைப்படுத்த உதவும் திட்டங்களையும் செயல் முறைகளையும் ஆராய்ந்து அவற்றைச் செயல்படுத்தத் திட்டமிடல், அனைத்திலும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணல் என்பன போன்ற 'பாரமான' உத்திகள் பலருக்குப் பிடிப்பதில்லை. இவற்றைப்பற்றிச் சிந்திப்பதையும் அதற்காக காலத்தையும் சக்தியையும் செலவிடுவதையும் பாவச்செயல்களைப் போல கருதுவோரும் இல்லாமலில்லை!

தஃவாவை மக்கள் முன்வைக்கக் கையாளும் வழிமுறை தஃவாவின் முக்கியமான ஒரு பகுதியாகும் என்பது உணரப் படாததே இதற்கான காரணம் எனலாம்.

பெரும்பாலான மக்களின் வாழ்வின் சகல துறைகளிலும் பூரண ஆதிக்கம் செலுத்தும் ஜாஹிலிய்யத்தான கருத்துக்களையும் அவற்றின் வழியாக வந்த நம்பிக்கைகள், கலாசார பழக்க வழக்கங்கள், நடைமுறைச் சட்டதிட்டங்கள், நிர்வாக அமைப்புகள் போன்றவற்றையும் ஒழித்து இஸ்லாமியக் கருத்துக்களின் அடிப்படையில் முழுவாழ்க்கையையும் மாற்றியமைப்பது ஒரு சுலபமான காரியமல்ல.

எனவே, வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து ஒதுங்கி நின்று கொண்டு உணர்ச்சி மிக்க பேச்சு, எழுத்து வாயிலாகவும் இஸ்லாமியக் கருத்துக்கள் சிலவற்றை மக்கள் மத்தியில் மேலோட்டமாக விளக்குவதன் மூலமாகவும் இந்தப்பெரும் போராட்டத்தைக் கொண்டு நடத்தி வெற்றியும் காணலாம் என்று நினைப்பது வெறும் பகற் கனவேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாத்துக்கும் ஜாஹிலிய்யத்துக்குமிடையில் நடைபெறும் போராட்டத்தின் தன்மைகள்; பரிமாணங்கள், தாக்கங்கள் என்பனவற்றை தாஈகள் முதலில் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். அடுத்து எப்போதும் இஸ்லாத்தின் நலனைக் கருத்திற்கொண்டு அதை வளர்த்து வலுப்படுத்தப்பயன்படும் வழிமுறைகளையும் இனங்கண்டு பிடிவாதமில்லாது அவற்றைப் பயன் படுத்த வேண்டும்.

ஜாஹிலிய்யத்தான பிழையான கருத்துக்களை வளர்க்க மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகள், வகுக்கப்படும் திட்டங்கள், அவற்றைச் செயல்படுத்தக் கையாளும் வழிமுறைகள், பயன் படுத்தப்படும் சாதனங்கள் என்பனவே மக்களிடம் அக்கருத்துக்களின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைகின்றன. அதேவேளை, அறிவுக்கு நேர சத்தியமானவையும் நடைமுறை சாத்தியமானவையுமான இஸ்லாமிய கருத்துக்களும், செயற்றிட்டங்களும் மக்கள் மத்தியில் போதிய அளவு எடுபடாது போவதற்கான பிரதான காரணமும் இஸ்லாமிய தாஈகளிடம் இத்தகைய ஏற்பாடுகள் காணப்படாததேயாகும்.

இஸ்லாமிய தஃவாப் பணிக்காக அல்லாஹ் தெரிவு செய்த மாதிரிக்கு, ''நீங்கள் அறிவு பூர்வமாகவும் அழகான உபதேசம் மூலமாகவும் உங்கள் இரட்சகனின் வழிக்கு (மக்களை) அழையுங்கள் .....'' (16:125) என்று கட்டளையிட்டிருப்பது ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும்.

எனவே இஸ்லாத்தின் இலட்சியங்களையும் அவற்றை அடைய உதவும் சரியான படிமுறைகளையும் சாதனங்களையும் பற்றிய தெளிவு இஸ்லாமிய தாஈகளிடம் காணப்பட வேண்டியதே இந்நாட்டில் இஸ்லாமிய தஃவாவின் வளர்ச்சிக்கு அவசியமான இன்றையத் தேவையாகும்.

''அவர்களுக்காக, பலத்தையும் போர்க் குதிரைகளையும் உங்களால் சாத்தியமான அளவு நீங்கள் ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள்...'' (8:60)

# அந்நியரை வெளியேற்றுங்கள்

குவைத்மீது, ஈராக் மேற்கொண்ட ஆக்கிரமிப்பை பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு உடனடியாக இதில் தலையிட்டு குவைத்தின் இறைமை பாதுகாக்கப்படவும், ஈராக் இராணுவம் அந்தப் பூமியைவிட்டு வெளியேறவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் எமது இயக்கம் வேண்டுகிறது. உரிய காலத்தில் மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாவிட்டால் எதிரிகளின் சதித்திட்டங்கள் முஸ்லிம் நாடுகளில் வெற்றி பெறும் வாய்ப்புக்கூடும் என்பதையும் ஜமாஅத் ஆழ்ந்த கவலையுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

சவூதி அரேபியாவில் அமெரிக்க துருப்புக்கள் கொண்டுவந்து குவிக்கப்படுவது முஸ்லிம்களைப் பெரிதும் அதிர்ச்சியடையச் செய்துள்ளது. இந்த நடவடிக்கை அந்நாட்டின் புனிதமிக்க தலங்களில் இஸ்ரேலியர்களின் தலையீடு ஏற்பட நிச்சயமாக வழி வகுக்கும் என்பதால் உலக முஸ்லிம்கள்யாவரும் அனைத்துவிதமான கருத்து வேறுபாடுகளையும் மறந்து இந்தவிடயத்தில் கவனஞ் செலுத்த வேண்டும். அந்நிய படைகளை வெளியேற்ற உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அரபு இஸ்லாமிய நாடுகளை அனைத்து முஸ்லிம்களும் நிர்ப்பந்திக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி உலக முஸ்லிம்கள் யாவரையும் கேட்டுக் கொள்கிறது.

**மௌலானா காழி ஹுஸைன் அஹ்மத்**
அமீர், ஜமாஅதே இஸ்லாமி பாகிஸ்தான்

# இஸ்லாமிய உம்மத்துக்கு பேராபத்து

சமாதானத்தை விரும்பும் குவைத்தை தனது இராணுவ பலத்தால் ஈராக்கிய ஜனாதிபதி ஆக்கிரமித்தது முழு முஸ்லிம் உம்மத்தையும் ஓர் பேராபத்தான நிலைக்குத் தள்ளிவிட்டது. ஈராக்கின் ஆக்கிரமிப்பு சர்வதேச சட்டவிதிகளையும் அனைத்து விதமான தார்மீக நியாயங்களையும் மீறிய ஒரு செயலாகும்.

ஜனாதிபதி சத்தாம் ஹுஸைன் அவர்கள் தனது நாட்டுக்கும் குவைத்துக்குமிடையில் உள்ள பிரச்சினைகளை வளைகுடா நாடுகளின் கூட்டமைப்பு, அரபு லீக், இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பு என்பனவற்றிடம் சமர்ப்பித்து நியாயம் கோரியிருக்கலாம். ஆனால் அவர் அதைச் செய்யத் தவறியதோடு ஆக்கிரமித்த மூன்றாவது நாளிலேயே அதைத் தனது நாட்டின் ஒரு மாகாணம் என்றும் பிரகடனஞ் செய்துவிட்டார். இதுவும் அவரது அராஜகப் போக்கிற்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது.

**பேராசிரியர் குலாம் அஃலம்**
அமீர், ஜமாஅதே இஸ்லாமி
பங்களாதேஷ்

(32ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய சட்டத்தின் சிறப்பியல்புகள்

## ஜாஹிலிய்யா சட்டங்கள் இனியும் வேண்டுமா?

இஸ்லாத்தைத் தவிர மற்றொன்றை எவரும் மார்க்கமாக விரும்பினால் அது ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது. அவன் இறுதி நாளில் நட்டவாளியாகவே இருப்பான். (3 : 85)

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களின் இயல்புகளும் மனிதன் வகுத்துள்ள சட்டங்களுக்குமிடையேயுள்ள முக்கியமான வித்தியாசங்களை இங்கே கவனிப்போம்.

### (1) அடிப்படை உயிரோட்டம்

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களில் நாம் மேலே கூறிய உயிரோட்டத்தைப் பூரணமாய்க் காணலாம். ஏனெனில் இஸ்லாமிய அமைப்பு முறை பொதுவான தனிப்பட்ட சட்டங்களிலும் இந்த உயிரோட்டத்துக்கு முக்கிய இடம் கொடுக்கிறது. இதன் மூலம் மனிதன் தன் ஒழுக்கம், பண்பாடு, பழக்க வழக்கம், கொடுக்கல் வாங்கல்கள், மற்றவர்களோடுள்ள தொடர்புகள், செய்யும் செயல்கள், போக்குகள் எல்லாவற்றிலும் இஸ்லாமியப் போதனைப்படி இயங்க வேண்டும் என்பது இஸ்லாத்தின் போதனை. இஸ்லாமிய ஷரீஅத் அமைப்பு இஸ்லாமிய ஏவல்களையும் விலக்கல்களையும் பொறுத்து அமைந்திருக்கின்றன. அதாவது இஸ்லாமியக் கொள்கைகளும் ஏவல்களும் விலக்கல்களும் மனிதனின் உள்ளத்தைத் தொட்டுக் கொண்டே இருக்கின்றன. எனவே அதை அவன் ஒதுக்க முடியவில்லை.

உலகில் காணப்படும் ஏனைய சட்டங்கள் இப்படி அமையவில்லை. அவற்றில் எங்கேயாவது ஒருசமய அம்சம் இருக்குமாயின் அதற்குப் பக்கத்திலே நாஸ்திகர்களுக்கான அம்சங்கள் சட்ட அமைப்பாளரின் அல்லது ஆட்சியாளரின் விருப்பத்தை ஊட்டியவையாய் இருக்கும். ஆகவே இந்தச் சூழலில் அதில் உயிர்த்துடிப்பு மிகவும் குறைவாகவே இருக்கும்.

ஐரோப்பிய நாடுகளில் சட்டங்கள் யாவுமே ரோமன் சட்டங்கள் என்பதை நாம் அறிவோம். இந்நாடுகளில் கிறிஸ்துவ சமயம் தோன்றி வளர்வதற்கு முன்பே ரோமன் சட்டங்கள் வேரூன்றி விருந்தன. ஆகையால் கிறிஸ்தவம் வந்தபோது சட்ட அமைப்பில் அதற்கு முக்கிய இடம் இருக்கவில்லை. அத்துடன் இச்சமயம் விசேட சட்டங்களைக் கொண்டுவரவில்லை. எனவே அவ்வுலக சட்ட வல்லுனர்கள் தங்கள் சட்டங்களில் இச்சமயத்தின் போதனைகளுக்கு குறிப்பிடத்தக்க இடத்தைக் கொடுக்கவில்லை. இதன் காரணமாக இச்சமயத்தின் தாக்கத்தை ரோமன் சட்டங்களில் காண்பது கடினமாயிருக்கிறது.

### (2) பண்பாட்டுக் கண்ணோட்டம்

சமூகத்தின் உயிர்நாடி போன்ற அருங்குணங்களைச் சட்ட அமைப்பின் அடிப்படையாகக் கவனிக்கிறது இஸ்லாம். ஆகையினால் இஸ்லாமிய சட்டங்கள் அருங்குணங்களைப் பேண ஆசைப்படுகிறது. ஆகையால் நற்பண்புகளுக்கு மாறுசெய்யும் செயல்களை அச்சட்டங்கள் தண்டிக்கின்றன.

ஆனால், மனிதர்கள் இயற்றிய உலக சட்டங்கள், மனித பண்பாட்டைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை. அதன் கோட்பாடுகளுக்கமைய நிலைகள் சமூகத்தையோ தனிநபரையோ கவலையை பாதித்தாலும் அதைப்பற்றி எவருக்கும் கவலையில்லை. உதாரணமாக விபசாரத்துக்காக இன்றைய சட்டம் தண்டிப்பதில்லை. சம்பந்தப்பட்ட இருவரில் ஒருவர் மற்றவரை வற்புறுத்தினார் என்று குற்றஞ் சாட்டப்பட்டால் அல்லது சுயவிருப்பமில்லாமல் அதில் இறங்க வற்புறுத்தப்பட்டார் என காரணம் காட்டப்பட்டால் மட்டுமே தண்டனை கொடுக்கப்படுகிறது. ஆனால் இஸ்லாம் அப்படியல்ல எந்த நிலைமையிலும் விபசாரத்துக்குக் கடுந்தண்டனைதான் விதிக்கிறது. ஏனெனில் இந்தக் குற்றம் மனிதப் பண்புக்கு கேடு விளைவிக்கிறது என்பது இஸ்லாத்தின் வாதம். மனிதன் இயற்றிய சட்டங்களில் அனேகமானவை மது அருந்தியவரைத் தண்டிப்பதில்லை. மதுவருந்தியவன் மற்றொருவருக்குத் தொந்தரவு செய்தால் மாத்திரமே தண்டனை கொடுக்கும். அப்படியானால் வெறும் மயக்க நிலைக்கு வருதல் குற்றமல்ல என்பதுதான் பொருள். ஆனால் இஸ்லாமிய சட்டம் இதை ஏற்கவில்லை. மதுவருந்தல் மனிதனின் தனி வாழ்க்கைக்கும் தீமையே என்பதனால் அது குற்றமே என்று தண்டிக்கிறது. அருந்தியவனுக்கு மயக்கம் ஏற்படாவிட்டாலும் சரியே. ஏனெனில் இந்த வேலையை ஒழுக்க அடிப்படையிலேயே நோக்குகிறது இஸ்லாம். ஒழுக்கம் பேணுவதன் மூலமே ஆரோக்கியமும் மானமும் பொருளும் உயிரும் அமைதியும் ஒழுங்கும் பாதுகாக்கப்பட முடியும்.

இஸ்லாமிய சட்டங்கள் ஒழுக்கங்களைப் பேணுவதில் அக்கறை கொள்ளக் காரணம் இஸ்லாம் ஒழுக்கத்தையும் உயர் பண்புகளையும் வற்புறுத்தி ஒரு பண்பட்ட சமூகத்தை வளர்க்க விரும்புகிறது. இந்நிலை மாற்ற இஸ்லாம் இன்றும் விரும்பவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வென்றால் அதன் கருத்து. இன்றும் என்றும் ஒழுக்கத்தால் மேம்பட்ட ஒரு சமூகத்தையே இஸ்லாம் [illegible] விரும்புகிறது என்பதாகும்.

ஏனைய சட்டங்கள் ஒழுக்க அம்சங்களைப் பற்றி அக்கறை கொள்ளவில்லையென்றால் அதற்குக் காரணம், அச்சட்டங்கள் சமயப் பண்பாட்டின் அடிப்படையில் இயற்றப்படாமையே. மனிதர்கள் இயற்றிய சட்டங்கள் எப்பொழுதும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராய் இருக்கின்றன. சட்ட அமைப்பில் ஈடுபடுவோரின் மனப்போக்கும் இவர்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியோரின் மனப்போக்கும் சட்டங்களில் பிரதிபலிக்கின்றன. இச் சட்டங்கள், பண்பாட்டு ஒழுக்க அம்சங்களிற் பலவீனம் பெற்றிருப்பது இயல்புதான். எனவே இத்தகைய மனிதனின் சட்டங்களைப் பின்பற்றும் ஒரு நாட்டில் நற்பண்புகள் தடைசெய்யப்பட்டு தீய பழக்கங்கள் சட்டமானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

## (3) தோற்றுவாயின் அடிப்படை

இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்களின் தோற்றுவாய் அல்லாஹ்வே. ஏனெனில் அச்சட்டங்களின் அடிப்படையான இஸ்லாம் அல்லாஹ்வால் அருளப்பட்டது. அவனே அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்:

> "நிச்சயமாக அல்லாஹ்விடம் ஏற்றுக்கொள்ளப்பட்ட மார்க்கம் இஸ்லாமே" (3:19)
>
> "இஸ்லாத்தைத் தவிர மற்றெதனையும் எவரேனும் மார்க்கமாக விரும்பினால் அது ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அவன் இறுதிநாளில் நஷ்டவாளியாகவே இருப்பான். (3:85)

ஆனால் மனிதன் இயற்றிய சட்டங்களின் தோற்றுவாய் மனிதனே.

இஸ்லாமிய சட்டங்கள் அல்லாஹ்வின் சட்டங்களாயிருக்கின்றமையால் இரு பயன்கள் விளைகின்றன:-

ஒன்று: குற்றவாளியும் நீதிபதியும் இச்சட்டங்களை மதிக்கிறார்கள், ஏனெனில் இவர்கள் இருவருமே இச்சட்டங்கள் மனிதனுடையவையல்ல; சர்வ வல்லமையுள்ள அல்லாஹ்வின் சட்டங்கள் என்பதை நம்புகின்றார்கள். இந்த நம்பிக்கையே இச் சட்டங்களுக்குக் கட்டுப்படும்படி மனிதனைத் தூண்டுகின்றது. ஏனெனில் அவ்வாறு கட்டுப்படுதல் இம்மையில் நன்மை தருவதுபோல் மறுமையிலும் நற்பேறு தருகின்றது. இதை மீறுவது இங்கு தண்டனை தருவதுபோன்று மறுமையிலும் கொடிய தண்டனையைத் தருகின்றது. எனவே சட்டங்களை அல்லாஹ்வுடன் சம்பந்தப்படுத்தியமையால் மக்கள் அவற்றை மதிக்கவும் பேணவும் செய்கின்றனர். இவ்வாறு சமயமும் அவற்றைக் கௌரவித்துப் பின்பற்றுவோரைக் கொண்டே காக்கப்படுகின்றது. எனவே இஸ்லாமிய சட்டங்கள் மதிக்கப்பட்டு பேணப்படும் அளவுக்கு இஸ்லாத்தின் மகிமையும் உலகில் வளரும் என்பதில் ஐயமில்லை. அப்படியே இச்சட்டங்களை ஏற்று நடப்போரின் வாழ்வும் சிறப்படையும்.

இரண்டு: இஸ்லாமிய சட்டங்கள் என்றும் நிலை பெற்றிருக்கும். சட்டத்தை அமுல் நடத்திய ஆட்சியாளர் மறைந்தாலும் சட்டங்கள் அப்படியே இருக்கும். முடியாட்சியாயினும் குடியாட்சியாயினும் கூட்டாட்சியாயினும், இவை எதுவும் சட்டங்களைப் பாதிக்கமாட்டா. ஏனெனில் சட்டங்கள் நேரடியாக சன்மார்க்கத்தோடு தொடர்புடையன. மன்னர்களோடு அல்லது ஆளாதிபதிகளோடு அல்ல.

ஆனால், ஏனைய சட்டங்களில் இந்த நிலையைக் காண முடியாது. ஒரு தலைவர் அல்லது மன்னர் தீட்டிய சட்டங்கள் அப்படியே மற்றவர்களுக்கும் பிடிக்கப்போவதில்லை. எனவே அது மாற்றப்பட்டே தீரும். சட்டங்களை இயற்றியோர் தங்கள் விருப்பு வெறுப்புக்களை அடிப்படையாகக்கொண்டு பெற்றுக் கொண்ட அறிவு அனுபவத்தை வைத்து இயற்றிய சட்டங்கள், பின்வருவோர் சட்டவல்லுநருக்குப் பிடிக்காவிட்டால், ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. நாட்டில் ஏற்படும் பல்வகையான அசம்பாவிதங்களுக்கும் இது காரணமாகலாம். இதனால் அமைதியற்ற நிலையும் உருவாகலாம்.

பல எதிர்க்கட்சிகள் சட்டங்களை எதிர்க்கவும் கண்டிக்கவும் ஊர்வலம் நடவடிக்கைகளை மேற்கொள்வதை நாம் இன்று காண்கிறோம். மனிதன் இயற்றிய சட்டங்களை அமுல் நடத்தப்படும் நிலையின் இது நடக்கத்தான் செய்யும். ஏனெனில் ஒவ்வொரு மனிதனின் ஆக்கத்திலும் குறைகளை இடமுண்டு. இவனுடைய ஆய்வின்படி அவனுடைய சட்டத்தில் பல குறைகள் தென்படலாம்.

இன்று உலக நாடுகள் பலவற்றில் ஏற்படும் மாற்றங்களும் போராட்டங்களும், மனிதனுடைய சட்டங்கள் பூரணமானவையல்ல என்பதற்குத் தக்க சான்றுகளாய் அமைந்துள்ளன. இதற்கு முக்கியமான காரணம் அந்நாட்டுச் சட்டங்களில் உயிர்த் துடிப்பில்லாமையே. இன்றும் சில காலத்தில் அச் சட்டங்கள் வெறும் கருத்தாக்கங்களாக மாறிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

---

மூலம்: அப்துல் காதிர் அவ்தா (ரஹ்)

தமிழில்: மௌலவி ரூஹுல் ஹக்

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியத்துக்காக ஷஹீதான

# செய்யித் குத்ப் (ரஹ்)

—ஷிஹாப்

ஷஹீத் செய்யித் குத்ப் (ரஹ்) அவர்கள் 1951ல் அல்-இக்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தில் சேர்ந்தார். அவ்வியக்கத்தின் தஃவாப் பணிகளை தெளிவுபடுத்தி விரிவுபடுத்தும் முயற்சி அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. அத்தோடு 1954 முதல் இயக்கத்தின் மாசிகையான அல்இக்வானுல் முஸ்லிமூனின் பிரதம ஆசிரியராகவும் ஆனார். 1951—1965ல் இவரது முக்கியமான நூல்கள் பல வெளிவந்தன. ஃபீ ழிலாலில் குர்ஆன் என்ற சிறந்த தப்ஸீரை எழுதும் முயற்சியை 1958ல் ஆரம்பித்தார். 1965ல் அல்குர்ஆன் முழுவதற்கும் 60 பாகங்களில் தப்ஸீர் எழுதி முடித்தார். அது தற்போது ஆறு பாகங்களாக வெளிவந்துள்ளது. அரபுமொழியில் உள்ள அந்தத் தப்ஸீர் வேறு சில மொழிகளிலும் பூரணமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதன் சில அத்தியாயங்கள் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## செய்யிதும்—மௌதூதியும்

மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்களின் நூல்களில் அவர்களின் தப்ஸீரான தப்ஹீமுல் குர்ஆன் தலைசிறந்தது. அதேபோல செய்யித் (ரஹ்) அவர்களின் நூல்களில் ஃபீ ழிலாலில் குர்ஆன் என்ற தப்ஸீர் மிகவும் விஷேடமானது. மௌதூதிக்கும் செய்யிதுக்குமிடையே நிலவும் மிகவும் நெருங்கிய கருத்தொற்றுமைக்கு ஃபீ ழிலால் ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும். ஜிஹாத் பற்றி மௌதூதி எழுதிய ஒரு நூலின் அறபு மொழிபெயர்ப்பை செய்யித் தனது தப்ஸீரில் முழுமையாக எடுத்தாண்டுள்ளார். அநேகமான குர்ஆன் வசனங்களுக்கும் இருவரும் ஒரேவிதமான விளக்கம் தந்துள்ளார்கள். தாருஷ் ஷுரூக் என்ற பிரசுரத்தார் வெளியிட்டுள்ள ஃபீ ழிலாலில் குர்ஆனின் பதிப்புக்களின் அடிக்குறிப்பு இருவருக்கும் ஒத்தகருத்துள்ள அநேகமான இடங்களைப்பற்றிய அடிக்குறிப்புக்களைத் தருகிறது.

செய்யித் (ரஹ்) அவர்களின் இதர நூல்களில் அஸ்ஸலாமுல் ஆலமிய்யு வல் இஸ்லாம், ஹாதத் தீன், அல்முஸ்தக்பிலு லிஹாதத்தீன், ஃகஸாஇஸுத் தஸவ்வுரில் இஸ்லாமிய்யி, என்பவையும் 1953—1964க்கிடையே எழுதப்பட்டன.

## சிறையில்

எகிப்தின் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த அப்துல் நாஸரைக் கொலை செய்யச் சதிசெய்தார்கள் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில் பல்லாயிரக்கணக்கான இக்வான்கள் 1954ல் கைதுசெய்யப்பட்டனர். அவர்களில் செய்யித் அவர்களும் ஒருவர். இவருக்கு பதினைந்து வருட கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இக்காலத்திலேயே செய்யித் குத்ப் அவர்கள் மிகவும் அதிகமான நூல்களை எழுதினார். இதிலிருந்து அவரது சிறைவாழ்க்கை நாஸரின் கருத்துக்களுக்குச் சிறையாக அமைந்ததன்றி செய்யிதுக்கு சிறையாக அமையவில்லை என்று தெரிகிறது.

சிறையில் அவர்கள் எழுதிய நூல்கள் யாவும் இஸ்லாம் சிறக்கவேண்டுமானால் முழு அளவிலான இஸ்லாமிய சமூகம் உருவாக வேண்டும். இதற்கு குர்ஆன், ஸுன்னாவின் ஆட்சி நடாத்தும் இஸ்லாமிய அரசு அமைக்கப்பட வேண்டும் என்று விளக்கினார். மேலும் முஸ்லிம்கள் அல்லாஹ் அல்லாதவர்களுக்கு அடிமையாவதைத் நிறுத்து முஹம்மத் (ஸல்) அவர்களைப் போல முற்றுமுழுதாக அல்லாஹ்வையே ஏக எஜமானனாகவும் ஆட்சி அதிகாரம் உள்ளவனாகவும் ஏற்கவேண்டும். இவ்வாறு நம்பி வாழ்வதற்குத் தடையாக அமையும் அனைத்தையும் எதிர்த்து நின்று அவற்றை இல்லாதொழிக்கவேண்டும் என்று மிகவும் ஆவேசத்தோடு வலியுறுத்தினார்.

ஜாஹிலிய்யத்தான நாஸரிசம் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறுவதையும் முஸ்லிம் பெயர் தாங்கிய ஆட்சியாளர்களும் அவர்களின் அடிவருடிகளும் அதையொட்டி மேற்கொள்ளும் முயற்சிகளைக் கண்டும் காணாதவர்களைப்போல உலமாக்கள் கைகட்டி வாய்பொத்தி இருப்பதை அவர் கண்டித்தார்.

அல் அஸ்ஹர் போன்ற கலைக்கூடங்கள், ஜாஹிலிய்யத்துக்கு நேருக்குநேர் முகங்கொடுத்து வெற்றி காணும் உலமாக்களை உருவாக்கவேண்டும். இதற்கு உதவும் வகையில் அதன் காலங்கடந்த பாடத்திட்டத்தை ஒதுக்கிவிட்டு இஸ்லாமிய அடிப்படையிலான உயிரோட்டமுள்ள புதிய பாடத்திட்டம் வகுக்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

## விடுதலை

செய்யித் குத்ப் சிறைவாசம் அனுபவித்து வந்தபோதிலும் வெளியுலகில் எகிப்துக்கு அப்பால் வேறுபல நாடுகளிலும் அவரது புகழ் பரவிவந்தது. ஏற்கனவே அவர் வெளியிட்டிருந்த இஸ்லாமிய நூல்களைப் படித்த பலர் அவரது தலைமையை

ஏற்று இஸ்லாமிய சமூக அமைப்புக்காகவும் முயற்சியில் தீவிரமாக உழைத்து வந்தார்கள். குறிப்பாக ஸிரியாவிலும் ஈராக்கிலும் இக்வான்களுக்கு நல்ல செல்வாக்கிருந்தது. எனவே ஈராக்கின் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த அப்துஸ்ஸலாம் ஆரிப் எகிப்து அப்துல் நாஸரிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க பத்தாண்டு சிறைவாசத்தின் பின்னர் 1964ல் செய்யித் குதுப் விடுதலை செய்யப்பட்டார்.

வெளியில் வந்த செய்யித் குதுப் எவ்வித கட்டல் குறைத்ததுமின்றி முன்போல இஸ்லாமிய ஷரீஅத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்வதிலேயே மக்களுக்கு விமோசனம் உண்டு. அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கும் சமூக சுபீட்சம் காணவும் இதுவொன்றே வழி என்பதை விளக்கி தொடர்ந்தும் அவர் எழுதினார். கடந்த பல வருடங்களாக முன்வைத்த கருத்துக்களின் சாரத்தை இரத்தினச் சுருக்கமாகவும் ஆணித்தரமாகவும் விளக்கும் 'மஆலிம் பித்தரீக்' என்ற நூல் அவரது கடைசி ஆக்கமாக அமைய வேண்டும் என்பது அல்லாஹ்வின் நாட்டமாக இருந்ததுபோலும். 1965ல் அவர் இதை வெளியிட்டார்.

## மீண்டும் சிறையில்

"மஆலிம் பித்தரீக்" அரசுக்கெதிராக மக்களைத் தூண்டுகிறது. நாஸரையும் அவரது ஆட்சி முறையையும் ஜாஹிலிய்யத்தின் புது உருவங்கள் என்று கிண்டல் செய்கிறது என்பன போன்ற பல குற்றச்சாட்டுக்கள் இதன் ஆசிரியரான செய்யித் குதுப் மீது சுமத்தப்பட்டன. இவற்றின் அடிப்படையில் அவர் மீண்டும் சிறையிலடைக்கப்பட்டார். இராணுவ விசாரணையின் போது அவர்மீது மேற்படி குற்றச்சாட்டுக்களை அரசு நிரூபித்தது. அவருக்கு மரண தண்டனையும் தீர்மானிக்கப்பட்டது.

இராணுவ நீதி மன்றத்தின் தீர்ப்பைப் புன்முறுவலுடன் செய்யித் குதுப் ஏற்றுக் கொண்டார். அவர் நாஸரிடம் மன்னிப்புக் கேட்டு கைமொப்பமிட்டால் விடுதலை செய்யப்படுவார் என்று செய்தி சொல்லி அனுப்பியதோடு அதற்கு அவரைத் தூண்டும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நான் ஒரு மனிதனைத் திருப்திப்படுத்தி அல்லாஹ்வின் கோபத்தைப்பெற முடியாது. அவ்வாறு செய்வது தனது சுபாவுக்கு மாற்றமானது என்று அவர் கூறியதோடு தனக்கு அல்லாஹ் விதித்துள்ள சஹாதாவை மனப்பூர்வமாக தான் ஏற்றுக்கொள்வதாக அவர் கூறிவிட்டார்.

## மாற்றுக் கோரிக்கை

ஆயினும் இராணுவ நீதி மன்றம் இந்த நூற்றாண்டு கண்ட தலைசிறந்த முஸ்லிம் சிந்தனையாளர்களில் ஒருவரும் எழுத்திலும் பேச்சிலும் நேர்மை மிக்கவரும் கொள்கைக்காகவே வாழ்ந்தவருமான செய்யித் குதுப் மீது மரண தண்டனையை விதிக்க நாஸரின் இராணுவம் தீர்ப்பு வழங்கியது என்ற செய்தி பரவியதிலிருந்து அரபுலகில் மட்டுமன்றி முஸ்லிம் நாடுகள் அனைத்திலும் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழும் இலங்கை போன்ற நாடுகளிலும் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டது. அறிஞர்களும் வாலிபர்களும் முஸ்லிம் பொது மக்களும் பல நாடுகளில் ஆட்சியாளர்களும் கூட இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கண்டித்து உடனடியாக அதை மாற்றவேண்டும் என்று குரல் எழுப்பினர்.

பாகிஸ்தான் ஜமாஅதே இஸ்லாமி, அவாமிலீக் என்பனவும் வேறுபல அரசியல் சமய சமூக அமைப்புக்களும் பிரித்தானியாவில் இஸ்லாமிய இயக்கங்களின் சம்மேளனம், லண்டனில் அல்ஜுமுஆ அல் இஸ்லாமிய்யா, டியுனிஷியாவில் அதன் சட்டசபையும் அந்நாட்டு முப்தி அவர்களும், சூடான் பாராளுமன்றம், மொரோக்கோவின் அல் இஸ்திக்லால் அரசியல் கட்சி, ஈராக் உலமாசபை என்பன முன்னணியில் நின்று செய்யித் குதுப் அவர்களை விடுதலை செய்யுமாறு நாஸரிடம் கோரிக்கைவிட்டன. உலகின் வேறுபல நாடுகளையும் சேர்ந்த உலமாக்களும் அறிஞர்களும் இஸ்லாமிய நிறுவனங்களின் பொறுப்பாளர்களும் இவ்வாறு கெஞ்சிக் கேட்டார்கள். பல இடங்களில் நாஸருக்கெதிராக ஆர்ப்பாட்டங்கள் நடந்தன.

செய்யித் குதுப் அவர்களை விடுதலை செய்யுமாறு கேட்டு இலங்கையிலிருந்தும் பல தந்திகள் அனுப்பப்பட்டன

## ஆயுள் எல்லை

"அல் பிக்ர்" என்ற பெயரில் டியுனிஷியாவிலிருந்து வெளிவந்த ஒரு சஞ்சிகையில் செய்யித் அவர்கள் 1959ல் பின்வருமாறு எழுதியிருந்தார்கள்:-

"அடுத்த நிமிடம் நான் இறக்க நேரும் என்று தெரிந்தாலும் நான் மரணத்தைப்பற்றிப் பயப்படமாட்டேன். ஒளிமயமானதும் ஆற்றல் மிக்கதுமான வாழ்க்கையோடு ஒப்பிடுகையில் என்பார்வைக்கு மரணம் என்பது ஓர் அற்பமான விடயமாகவே தெரிகிறது.....நாம் ஒரு கொள்கைக்காக வாழ்ந்தால் நமது வாழ்க்கை மிக்க ஆழமும் அதிக நீளமும் உள்ளதாக அமைந்து பரந்துவிளங்கும். வாழ்க்கையைப் பற்றிய இந்தக் கண்ணோட்டம் எமது வாழ்நாளில் நாம் கழிக்கும் ஒவ்வொரு வினாடியும் ஒவ்வொரு மணித்தியாலமும் ஒவ்வொரு நிமிடமும் மிக்க பயனுள்ள முறையில் கழிக்கப்பட உதவுகின்றது. இதனால் நாம் மனத்திருப்தியடைய முடிகிறது. உண்மையில் வாழ்நாளை ஒருவன் வருடங்களைக் கொண்டு கணிக்கக்கூடாது. உணர்வுகளின் அடிப்படையிலேயே அதைக் கணிக்கவேண்டும். ஏனெனில் வாழ்க்கையென்பது ஒருவன் தனது வாழ்வின் இலட்சியங்களை உணர்ந்து செயல்படுவதாகும்.

(37ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இஸ்லாமியக் குடும்பம்

# இல்லற வாழ்க்கை

நேர்மையான ஒரு சமுதாயக் கட்டுக்கோப்பை உருவாக்குவதில் வெற்றி கண்டால் மாத்திரமே இஸ்லாம் எதிர்பார்க்கும் மேலோங்கிய கலாசாரமும் நாகரீகமும் தோன்ற முடியும். ஒரு நேர்மையான சமுதாயம் உருவாவதற்கான அடிப்படைக் காரணியாக ஒழுங்கமைக்கப்பட்ட குடும்ப அமைப்பாகும். கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் புனிதமான விவாக உறவிலேயே குடும்பவாழ்க்கை ஆரம்பமாகின்றது. கணவனும் மனைவியும் இல்லற வாழ்க்கையின் ஒழுங்கு முறைகளையும் கடமைகளையும் முற்றாகப் புரிந்துகொண்டு இல்லற வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளை அனுஷ்டிப்பதில் பொறுமையும் உளத்தூய்மையும், ஈடுபாடும் கொண்டு இல்லற வாழ்வின் கடமைகளை நிறைவேற்ற வேண்டும். இல்லற பந்தத்தை நிரந்தர மகிழ்ச்சியுடையதாகவும் இன்பம் பொங்குவதாகவும் பரிணமிக்கச் செய்வது மேற்கூறிய அம்சங்களிலேயே தங்கியுள்ளது. கணவன் சம்பந்தப்பட்ட பின்பற்றவேண்டிய ஒழுங்குமுறைகளையும் கடமைகளையும் முதலில் கவனிப்போம். இரண்டாவதாக மனைவி அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்குமுறைகளையும் கடமைகளையும் கவனிப்போம்.

### நன்னுறவு

1. வாழ்க்கையில் உங்கள் மனைவியைச் சிறப்பாக நடத்துங்கள்.

அவளுக்கு நீங்கள் செய்யவேண்டிய கடமைகளைத் தாராள மனப்பான்மையுடனும் நியாய சிந்தையுடனும், விரும்பத்தக்க முறையிலும் நிறைவேற்றுங்கள். உங்கள் மனைவியோடு தொடர்பான சகல விடயங்களிலும் அவ்வாறாகவே நடந்துகொள்ளுங்கள். அல்லாஹ் கூறுவதாவது:

“அவர்களோடு நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள்” (4:19)

“இறைதூதர் (ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின்போது (ஹஜ்ஜதுல் விதாஃ) திரண்டிருந்த பெரும் மக்கள் கூட்டத்தின் முன்னிலையில் இறைதூதர் (ஸல்) அவர்கள் உபதேசம் செய்யும்போது அவர்கள் ஆண்களுக்குப் பின்வருமாறு கட்டளையிட்டார்கள்!

“மக்களே! கேளுங்கள்! பெண்கள் விடயத்தில் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள். அவர்கள் உங்கள் கைதிகள் போன்றவர்களாவர். அவர்கள் வெளிப்படையாக கீழ்ப்படியாவிட்டாலன்றி அவர்களைக் கடுமையாக நடத்த உங்களுக்கு உரிமையில்லை. அவர்கள் கீழ்ப்படியாதுவிடின் படுக்கையறையில் அவர்களிடமிருந்து பிரிந்து (தனியாக) இருங்கள். நீங்கள் அவர்களைத் தண்டித்தால் படுகாயங்கள் ஏற்படாது பார்த்துக்கொள்ளுங்கள். அவர்கள் மனம் திருந்தி கீழ்ப்படிந்துவிட்டால் அவர்களை இம்சிக்கக் காரணம் தேடாதீர்கள் கவனமாகக் கேளுங்கள்! உங்கள் மனைவியர் மீது உங்களுக்குச் சில உரிமைகள் உண்டு. அவ்வாறே உங்கள் மீது உங்கள் மனைவியருக்கும் சில உரிமைகள் உண்டு. உங்கள் படுக்கைகளை நீங்கள் விரும்பாத ஒருவர் மாசுபடுத்தாமல் பாதுகாக்க அவர்கள் உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளார்கள். அவ்வாறே நீங்கள் விரும்பாத ஒருவர் உங்கள் வீட்டினுள் அத்துமீறிப் பிரவேசிப்பதையும் அவர்கள் தடுக்க வேண்டும். மேலும் கேளுங்கள்! அவர்களுக்குச் சிறந்த முறையில் உணவளிக்கவும் நல்ல உடைகளை வழங்கவும் நீங்கள் கடமைப்பட்டிருக்கின்றீர்கள்” (ரியாளுஸ்ஸாலிஹீன்)

அதாவது ஒப்பற்ற நெருக்கமுள்ள விவாக உறவுக்கும், இதயங்களின் ஒன்றிணைப்புக்கும், நட்புறவு உணர்விற்கும் பொருத்தம் கூடியவாறு உணவு, உடை வசதிகளைச் செய்துகொடுங்கள்.

### மதித்தல்

2. உங்கள் மனைவியைப் பற்றி உள்ளத்தில் இயன்றளவு நல்லெண்ணம் இருக்க வேண்டும்.

அவர்களிடம் கனிவு, சகிப்புத் தன்மை, தாராளமனப்பான்மை ஆகிய பண்புகளைக் கடைப்பிடித்து அவளோடு இணைந்து வாழுங்கள். அவள் ரூப வசீகரமோ, கூரிய அறிவோ இல்லாதவளாகவும் நற்பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், வீட்டுப்பணிகளில் திறமையோ நல்லுணர்வோ குறைந்தவளாகவும் இருப்பின் அக்குறைபாடுகளையும் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுங்கள். அவளிடம் இருக்கும் நற்பண்புகளுக்காகவேனும் பெருந்தன்மை, தாராள சிந்தை, கவுரவம், என்பவற்றால் ஒரு சுமுகமான உறவைப் பேணுங்கள். அல்லாஹ் கூறுவதாவது:

“இணக்கத்தில் நன்மையுண்டு”

மேலும் விசுவாசிகளின் மீது விதித்துள்ளதாவது.

“அவர்களை நீங்கள் வெறுத்த போதிலும் சரியே! ஏனென்றால் நீங்கள் வெறுக்கும் ஒன்றில் அல்லாஹ் அநேக நன்மைகளை வைத்திருக்கலாம்.” (4:19)

இதே விடயம் இறைதூதர் (ஸல்) அவர்களின் ஹதீஸ் ஒன்றின் மூலம் பின்வருமாறு தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

“ஒரு விசுவாசி தனது பயபக்தியுள்ள மனைவியை வெறுக்கக் கூடாது. அவர் தனது மனைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீன் ஒரு வழக்கத்திற்காக அவளை வெறுத்தாலும் அவளுடைய நடத்தையின் வேறு சில அம்சங்களுக்காக அவளை விரும்பலாம்''

உண்மையிலேயே எந்தப் பெண்ணிடத்திலும் ஏதாவதொரு பலவீனம் இருக்கும். அவளிடம் இருக்கும் ஏதாவது ஒரு குறைபாட்டின் காரணமாக கணவன் அவளைப் பகைத்துக் கொண்டு வெறுக்கத் தலைப்பட்டால் அத்தம்பதிகள் இனிய இல்லறம் நடத்த முடியாமற் போய்விடும். ஆண்பிள்ளை தாராளமனப்பான்மையுடன் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்து தனது மனைவியுடன் இணங்கி வாழ முயல வேண்டும். அந்தப் பெண்மணியின் காரணமாக இறைவன் அந்த மனிதன் எண்ணிப் பார்க்கக்கூட முடியாத அருள்கொடைகளை அவனுக்கு வழங்கக்கூடும். உதாரணமாக இப் பெண்மணியிடம் உன்னதமான சன்மார்க்க விசுவாசமுள்ள நடத்தை, ஒழுக்கநெறிப்பண்புகள் காணப்படக்கூடும்; அவற்றிற்கு வெகுமதியாக அல்லாஹ் அக்குடும்பத்துக்கே அருட்கொடைகளை அள்ளிச் சொரியக்கூடும். அல்லது இப்பெண்மூலமாக பிறக்கும் ஒரு பரிசுத்த ஆத்மா முழு மனித குலத்துக்கும் பயனுள்ளதாக இருந்து தந்தைக்கு வாழ்நாள் முழுவதும் பயனளிக்கக்கூடிய ஸதகத்துல் ஜாரியா (நிரந்தர தர்மம்) வாகப் பரிணமிக்கக்கூடும். அல்லது அப்பெண்மணி அந்த மனிதனின் ஒழுக்கத்தைச் சீர்படுத்தி அவன் சுவர்க்கத்தை அடைய உதவக் கூடும்; அல்லது அவனுடைய மனைவிக்கு இறைவன் பெருஞ் செல்வமாகிய அருட்கொடையை நிர்ணயித்ததன் காரணமாக அவனுக்கு அன்னபாக்கியத்தையும் செல்வத்தையும் இறைவன் அருட்கொடைகளாக வழங்கக்கூடும். பெண்ணில் காணப்படக்கூடிய ஒரு குறைபாட்டினைக் காரணமாக வைத்து உங்கள் தாம்பத்திய வாழ்க்கையைத் தான் தோன்றித்தனமாகப் பாழாக்கிக்கொள்ளாதீர்கள். அதற்கு மாறாக வீட்டில் ஓர் அமைதியான இன்பகரமான சூழலை ஏற்படுத்தப் புத்திசாலித்தனத்தோடு முயற்சி செய்யுங்கள்.

### பலவீனம்

3. மனைவிக்கும் நன்மையும் அன்பும் கலந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்கள் மனைவியின் தவறுகள், மடத்தனமான செய்கைகள், கீழ்ப்படியாத மனப்பான்மை ஆகிய குறைகளையும் மறந்துவிடுங்கள். பெண்கள் புத்திசாலித்தனம், பொது அறிவு ஆகியவற்றில் குறைபாடும் பலவீனமும் கொண்டவர்களாவர். அவர்களிடம் மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடிய மனோபாவமும் காணப்படும். எனவே அவளைப் பொறுமை, சாந்தம், இரக்கம் பாசம், பற்று என்பவற்றின் மூலம் வசீகரிக்க முயலுங்கள். பொறுமை அடக்கம் என்பவற்றின் மூலமாக அவளோடு இணங்கி வாழுங்கள். இறைவன் பின்வருமாறு கட்டளையிடுகின்றான்:

''விசுவாசிகளே! உங்கள் மனைவிகளிலும் உங்கள் சந்ததிகளிலும் நிச்சயமாக உங்களுக்கு விரோதிகளும் இருக்கின்றனர். ஆகவே, அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள். அவர் (களின் குற்றங்)களை நீங்கள் சகித்து புறக்கணித்து மன்னித்துவிட்டால், நிச்சயமாக அல்லாஹ்வும் மிக்க மன்னிப்போனும் மிக்க கிருபையுடையோனுமாக இருக்கின்றான். (64:14)

இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறுவதாவது:

பெண்களோடு நல்லபடியாக நடந்துகொள்ளுங்கள். பெண்கள் விலாவெலும்பிலிருந்து சிருஷ்டிக்கப்பட்டவர்கள்; விலாவெலும்பின் மேலே வளைவானது. எனவே, நீங்கள் அந்த வளைவை நேராக்க முனைந்தால் அது முறிந்து விடக்கூடும், எனினும் நீங்கள் அதனை அப்படியே விட்டுவிட்டால் வளைவு அப்படியே இருக்கும். எனவே பெண்கள் விடயத்தில் நல்ல முறையில் நடந்துகொள்ளுங்கள். (புகாரி, முஸ்லிம்)

### மிக்க நல்லவர்

4. உங்கள் மனைவியைக் கனிவாக நடத்தி அவள் மீது அன்பையும் பாசத்தையும் காட்டுங்கள். இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறுவதாவது:

''பரிபூரண விசுவாசம் கொண்ட விசுவாசிகள் யாரெனில் சிறந்த பழக்க வழக்கங்கள் கொண்டவர்களே! தம்மின் மனைவிமாரை இவர்களுள் நல்லமுறையில் நடத்துபவர்களே உங்கள் மத்தியில் மிக நல்லவர்களாவர்.'' (திர்மிதி)

கனிவு, இனிய நெஞ்சம் ஆகிய தன்மைகளை விட்டுவேறு சிறந்த முறையில் மதிப்பிடலாம். மக்கள் தொடர்ந்து தங்கள் குடும்ப அங்கத்தவர்களோடு இணைந்து வாழ்வதால் வீட்டின் தயக்கமற்ற சுபாவ சூழலிலேயே மனிதனின் உண்மையான மனோபாவமும் ஒழுக்க நடத்தையும் முழுமையாக வெளிப்படுகின்றன. உண்மையிலேயே தங்கள் குடும்ப அங்கத்தவர்களிடம் பரிவு, இரக்கம், பாசம் என்பவற்றோடு நடந்து தமது வீட்டார்களை ஆதரித்து, அனுதாபம் காட்டி, அன்போடு அரவணைக்கப் பரிபூரணமான விசுவாசமுள்ள விசுவாசிகளால் மாத்திரமே முடியும்.

ஹஸரத் ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிப்பதாவது: ''நான் றசூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய இல்லத்தில் எனது தோழியர்களுடன் பொம்மைகளை வைத்து விளையாடிக்கொண்டிருப்பேன். அப்போது அண்ணல்நபி (ஸல்) அவர்கள் இல்லத்துக்கு வந்தால் எனது தோழியர்கள் எழுந்து வீட்டின் மூலை முடுக்குகளில் ஒளிந்துகொள்வார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எனது தோழியர்களை ஒவ்வொருவராகத் தேடி என்னோடு சேர்ந்து விளையாட அனுப்பி வைப்பார்கள்'' (புகாரி, முஸ்லிம்)

ஒருமுறை நபி காலத்தில் ஹஸரத் சபிய்யா (றழி) நாயகியவர்களின் ஒட்டகை இடறி உட்கார்ந்துவிட்டது. [illegible]

(25ம் பக்கம் பார்க்க)

**ஜமாஅத் இன்றி இஸ்லாம் இல்லை**

# கூட்டுவாழ்க்கையின் நன்மைகள்

அஷ்ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி

அந்த ஒரு நாளில் சில முகங்கள் வெண்மையாகவும், சில முகங்கள் (துக்கத்தால்) கருத்து (வாடிய) திருக்கும். எவர்களுடைய முகங்கள் கருத்து (வாடி) இருக்கின்றனவோ, அவர்களை (நோக்கி) நீங்கள் விசுவாசங் கொண்டபின் (அதனை) நிராகரித்துவிட்டீர்களா? ஆகவே, நீங்கள் நிராகரித்ததன் காரணமாக நரக வேதனையைச் சுவைத்துப் பாருங்கள் என்று கூறப்படும். எவர்களுடைய முகங்கள் (மகிழ்ச்சியால் பிரகாசமுள்ள) வெண்மையாக இருக்கின்றனவோ அவர்கள் அல்லாஹ்வின் அருளில் தங்கிவிடுவார்கள். அவர்கள் அதில் என்றென்றும் தங்கிவிடுவார்கள். (3 : 105-106)

முஸ்லிம்களின் உள்ளமும் உணர்வும் ஒன்றாய் இருந்திடவேண்டும். அவர்கள் ஒரே கொள்கையைப் பின்பற்றும் ஒரே இலட்சியத்தினராய் இருந்திட வேண்டும் என்பவை இஸ்லாத்தின் அடிப்படைகள். முஸ்லிம்கள் தங்களுக்குள் நல்ல உறவுகளை, இறுக்கமான உறவுகளை நிலை நாட்டிடவேண்டும். முஸ்லிம்கள் தங்களுக்குள் நல்லதொரு பிணைப்பை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும் என்பது கடமையாகவே ஆக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக மனிதர்களின் ஒற்றுமை என்பது அவர்கள் அனைவரும் தங்கள் ஒரே தலைவர் தங்களுக்குள் எந்த வேற்றுமையும் இல்லை என்ற அடிப்படையிலேயே ஏற்பட வேண்டும். இதற்காக இஸ்லாம் வலுவான அடிப்படைகளை அமைத்தே தந்துள்ளது. முஸ்லிம்கள் தங்களை ஒரே இறைவன் என்ற கொள்கையைக்கொண்டே இனங்கண்டு கொள்ளவேண்டும். அப்போதுதான் அவர்களின் உறவு முறை நிரந்தரமாக நிலைத்து நிற்கும். இறைவன் ஒருவனே என்ற முழக்கமே இஸ்லாத்தின் நுழைவாயில். இந்த அடிப்படையில் முஸ்லிம்கள் அனைவரும் ஒரே எண்ணமும் சிந்தனையும் இலக்குமுடையவர்களாக இருப்பார்கள். இதுவே இஸ்லாமிய சமுதாய அமைப்பு என்றென்றும் நிலைத்து நிற்கும் என்பதற்கான உத்திரவாதம்.

### வேறுபாடு

நன்மையைத் தனித்துச் செய்திடும்போது கிடைக்கின்ற நற்கூலிக்கும் ஒரு மனிதன் அந்த நற்செயலை பலருடன் சேர்ந்து செய்திடும்போது கிடைக்கும் நற் கூலிக்கும் நிறைய வேறுபாடுகள் உண்டு.

வைகறை தொழுகையின் இரண்டு ரகஅத்களையும் அல்லது நண்பகல் தொழுகையில் நான்கு ரகஅத்களையும் எடுத்துக்கொள்ளுங்கள்; இவற்றை ஒரு மனிதன் தனித்தும் தொழலாம் அல்லது கூட்டாகவும் தொழலாம். வெளிப்படையாக பார்க்கின்றபோது இரண்டின் வெளிப்படும் அங்க அசைவுகளில் எந்த மாறுபாடுமில்லை. ஆனால் இவற்றையே மனிதன் கூட்டாக ஜமாஅத்தோடு தொழுதால் கிடைக்கின்ற கூலி இருபது முதல் இருபத் திரண்டு மடங்கு அதிகமாகக்கிடைக்கின்றது.

உண்மையில் தொழுகைகளைக் கூட்டாக ஜமாஅத்தோடு நிறைவேற்றுங்கள் என்பதற்கு அதிக நற்கூலியை வழங்கி மனிதனை சமுதாயத்தோடு கலந்துவாழ வழங்குகின்றது இஸ்லாம். மனிதன் சமுதாய வட்டத்திலிருந்து ஒதுங்கி இருப்பதை இஸ்லாம் விரும்பவில்லை. மனிதன் சமுதாயத்தோடு கலந்து வாழ்வதையே இஸ்லாம் விரும்புகின்றது. மனிதன் தன் சிந்தனை முழுவதையும் தன்னைச் சுற்றியே சுழல விடுவதை இஸ்லாம் வெறுக்கின்றது; கூட்டு வாழ்க்கையிலிருந்து பிரிந்து நின்று மனிதன் தன் சொந்த இலாப நஷ்டங்களைப்பற்றி மட்டும் சிந்திப்பதை இஸ்லாம் கண்டிக்கின்றது. நபி மொழியொன்று இதனை இவ்வாறு அறிவுறுத்துகின்றது.

மூன்று விஷயங்கள் இருக்கின்றன, இவை குறித்து எந்த முஸ்லிமின் இதயத்திலும் பொறாமை எழுவதில்லை. அவை எடுத்த காரியத்தில் அக்கறை காட்டுதல், முஸ்லிம்களின் நல்வாழ்வில் நாட்டம் காட்டுதல், கூட்டு வாழ்வில் ஈடுபாடு கொள்ளுதல் ஆகியவையாகும். ஏனெனில் இந்த மூன்றும் அமையப்பெற்றவரின் இறைவணக்கங்கள் அனைத்தும் எல்லா மனிதர்களின் நல்வாழ்வையும் கருத்திற்கொண்டே அமைந்து விடுகின்றன. (பஸ்ஸார்)

முஸ்லிம்களை சமுதாய அமைப்போடு இறுகப் பிணைத்திடுவதற்காகவே ஐந்து நேர தொழுகையும் 'ஜமாஅத்'தோடு கூட்டாக கூடி நின்று நிறைவேற்ற வேண்டுமென இஸ்லாம் பணித்துள்ளது. முஸ்லிம்கள் தாங்கள் தினமும் நிறைவேற்றிடவேண்டிய கட்டாயக் கடமையாகிய தொழுகைகளைக் கூட்டாகத்தான் நிறைவேற்றிடவேண்டும். தகுந்த காரணங்களின்றி கூட்டாக சேர்ந்து தொழுவதைப் புறக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைந்திடக் கூடாது. புறக்கணித்தால் புறக்கணிப்பவர்கள் தண்டனைக்குள்ளாக்கப்படுவார்கள். கிராமங்களிலே அங்குமிங்குமாக வாழ்பவர்கள் வாரத்தில் ஒரு நாள் வெள்ளிக்கிழமைக் கூட்டுத் தொழுகையை நிறைவேற்றிட வேண்டும். இரண்டு பெருநாள்களின்போது இதைவிட பெரியதொரு கூட்டுத் தொழுகைப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தப் பெருநாள் தொழுகைகள் நகரின் வெளியே, திறந்த வெளியில் எல்லா முஸ்லிம்களும் சேர்ந்து நிறைவேற்றிட வேண்டும். கூட்டமைப்பின் பலன்களை நிறைவாக அறுவடை செய்திடும் எண்ணம் எல்லா முஸ்லிம்களும் இந்தத் தொழுகையில் கலந்திட வேண்டுமெனப் பணிக்கப்பட்டுள்ளார்கள். பெண்களும்கூட கலந்து கொள்ளவேண்டும் எனப் பணிக்கப்பட்டுள்ளார்கள்.

இதனை விடவும் பெரியதொரு கூட்டுத்தொழுகை முஸ்லிம்களின் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. இந்தக் கூட்டுத் தொழுகையில் உலகம் முழுவதுமுள்ள முஸ்லிம்கள் ஒன்று கூடுகின்றார்கள். அது தான் புனிதமிக்க ஹஜ் கடமை. இந்த ஹஜ் கடமையின்போது முஸ்லிம்கள் ஒன்றாய்க் குழுமிட வேண்டிய காலம், நேரம், இடம் என்பன துல்லியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் வெவ்வேறு இனம், கோத்திரம், நிறம் பிரதேசம் இவற்றைச் சார்ந்தவர்கள் ஒரு நாளில் ஒரே இடத்தில் சங்கமிப்பது நிச்சயமாக்கப்பட்டுள்ளது.

சமுதாய அமைப்பிலிருந்து விடுபட்டு தனித்து வாழ்வதை இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் கடுமையாக எச்சரித்துள்ளார்கள். வீட்டில் தங்கி விடுவதாக இருந்தாலும்; பயணம் மேற்கொள்வதாக இருந்தாலும் கூடிக் கலந்து கட்டமைப்பாகவே வாழ வேண்டும் என இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் கட்டளைப் பிறப்பித்துள்ளார்கள்.

ஸஅத் பின் முஅவ்வியா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் அறிவித்ததாக பின்வரும் நபிமொழியை அறிவிக்கின்றார்கள்.

''மனிதர்கள் ஒருவராக அல்லது இருவராக இருக்கும்போது ஷைத்தான் பின்னால் போய்விடுகின்றான். ஆனால் அவர்கள் மூன்று பேராக இருந்தால் அவனால் அவர்களைத் துன்புறுத்த இயலுவதில்லை'' (மாலிக்)

ஒருமுறை இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் வழி நடத்திச்சென்ற பயணக்கூட்டம் ஓரிடத்தில் முகாமிட்டது. இரவின் தூங்கும்போது பயணிகள் பிரிந்து பிரிந்து தனித் தனியாகப் படுத்துக் கொள்வதால் சற்று வசதியாக ஓய்வெடுத்துக்கொள்ளலாம் என்பதே அப்பயணிகளின் நோக்கமாகும். அவர்கள் பிரிந்து படுத்திருப்பதைப் பார்த்தால் அவர்களுக்குள் எந்தத் தொடர்புமே இல்லாததுபோல் இருந்தது. இதனை இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் விரும்பவில்லை, அங்கீகரிக்கவுமில்லை.

அபூ ஸஃலபா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்; முகாமிட்டபோதெல்லாம் மக்கள் தனித் தனியாகப் பள்ளத்தாக்குகளில் முகாமிட்டுக்கொள்வது வழக்கம். இதனை பார்க்கும் போதெல்லாம் இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொல்வார்கள்.

''நீங்கள் இவ்வாறு பிரிந்து இருப்பது ஷைத்தானின் யுக்திகளில் ஒன்றாகும்'' இறைவனின் தூதர் (ஸல்) அவர்களின் இந்த எச்சரிக்கைக்குப் பின்னர் முஸ்லிம்கள் எங்கே முகாமிட்டாலும் சேர்ந்தே இருப்பார்கள். சேர்ந்து நெருங்கிப்படுத்தே ஓய்வெடுப்பார்கள் எந்த அளவிற்கு நெருங்கிப் படுத்திருப்பார்கள் என்றால்; ஒரே போர்வையைக் கொண்டே அவர்களைப் போர்த்திவிடலாம்.

(அபூதாவூத்)

மனிதர்களிடையே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் சகோதரத்துவத்தையும் நிலவச் செய்வதற்கு இதுவே சிறந்த வழி.

## ஒற்றுமையின் பலன்கள்

மக்கள் உரிமையோடு ஒட்டிக்கொண்டு அதில் நிலைத்திருக்கவில்லை என்றால், ஷைத்தான் அவர்களைப் பல்வேறு கூறுகளாகப் பிரித்து போட்டுவிடுகின்றான். அருளாளனின் அடிமைகள் ஒன்று சேர்ந்து வாழ்ந்தால் ஷைத்தான் அவர்களை எதுவும் செய்ய முடியாதவனாக ஆகிவிடுகின்றான். மறுமையின் நற்பேறுகள் நம்பிக்கை கொண்டவர்களை தவறவிட்டால் இவற்றையெல்லாம் அடிப்படையாகக்கொண்டு முஸ்லிம்கள் சிறு சிறு விஷயங்களுக்காகச் சண்டையிட்டு மடிவதும், பொறுப்புகளையும், கட்டுகளையும் வளர்த்திடுவதும் ''அறியாமை'' காலத்துப் பண்பாடுகளாகும்; இவை எல்லாம் நம்பிக்கை இல்லாதவர்களின் கொடிய குணங்களாகும்.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

''என்னுடைய மரணத்திற்குப் பின் நிராகரித்தவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு விடாதீர்கள். இன்னும் நீங்கள் உங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளாதீர்கள். (திர்மிதி)

இதன் தெளிவான பொருள் என்னவெனில் இரத்தம் சிந்தும் போர்கள்—நிராகரித்தவர்கள்—இறைவனை மறுத்தவர்கள்—ஆகியோரின் வாழ்க்கை வழியாகும்; ஏனெனில் இவர்கள் பல நூறு கூட்டங்களாகப் பிரிந்து வாழ்ந்தார்கள்.

இஸ்லாம் மனிதர்களின் சிந்தனையில் எதிர்படும் கருத்து வேறுபாடுகளுக்கு அனுமதியளித்தே இருக்கின்றது. ஆனால், ஒரு நியதியை, உண்மை எது என்பதைக் கண்டு பிடித்திடவே இந்தக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து வேறுபாடுகளின் நோக்கமாக இருந்திட வேண்டும். கருத்து வேறுபடுபவர்கள் உண்மை எது என்பதைக் கண்டு கொண்டதும் அதனை ஏற்றுக் கொண்டு தன்னை திருத்திக்கொள்ளத் தயாராக இருந்திடவேண்டும். அத்தோடு அந்த உண்மை காட்டும் வழியில் வழி வாழ்ந்திடவும் தயாராக இருந்திடவேண்டும்.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்:

ஆட்சியாளர் தானே ஒரு முடிவை எடுத்தால் அந்த முடிவு சரியான முடிவாக இருந்தால் அவர் இரட்டிப்புச் சன்மானத்திற்கு உரியவராகி விடுகின்றார். ஆனால் அவருடைய முடிவு தவறானதாக இருந்தால் அவர் ஒரே ஒரு சன்மானத்திற்கு உரியவராகின்றார். (புகாரி)

இங்கே நாம் ஒன்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளவேண்டும். அதாவது மனிதனின் சிந்தனையின் இலக்கு என்னவாக இருக்கின்றதோ அதைப் பொறுத்தே இறைவன் வழங்கும் சன்மானமும் வெகுமதியும் அமைகின்றது. உண்மை இவ்வாறிருக்க மனிதன் ஏன் குறுகலாகவும் கோணலாகவும் தன்னுடைய சிந்தனையை ஓட்டிட வேண்டும்? இறைவன் விசாலமான நேர் வழியை எடுத்துத் தந்திருக்கும் போது மனிதன் ஏன் தன்னுடைய சிந்தனையை முடமாக்கி, வெறுப்பையும் காழ்ப்பையும் வளர்த்துக் கொண்டு சண்டையிட்டு மடியவேண்டும்?

கருத்து வேறுபாடுகளுக்கு எப்படி இஸ்லாம் இடம் தந்து ஏற்றுக்கொண்டது என்பதை எடுத்துக் காட்ட இதோ ஓர் எடுத்துக்காட்டு.

இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் ஒரு முறை மதீனாவைவிட்டு வெளியே சென்று முஜாஹிதீன்களை பார்த்து நீங்கள் உங்கள் (அஸர்) மாலைத் தொழுகையை பனீ குறைழாவில் தொழுங்கள் என கட்டளை இட்டார்கள். தோழர்களில் சிலர் மாலைப் பொழுதுக்குள் பனீ குறைழா போய்ச் சேர்ந்து விடுவோம். ஆகவே அங்கே அஸர் தொழுகையை தொழுங்கள் என இறைவனின் தூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக எடுத்துக் கொண்டார்கள்; ஆனால் அவர்கள் பனீ குறைழா போய்ச் சேருவதற்குள்ளாகவே அஸர் தொழுகையின் காலம் வந்து விட்டது. எனவே தொழுகையை நிறைவேற்றி விட்டார்கள். இதற்கு நேர்மாறாக இன்னும் சில தோழர்கள் இறை தூதரின் இந்த அறிவிப்பின் வெளிப்படையான பொருளை அப்படியே எடுத்துக் கொண்டு அஸர் தொழுகையை (களா) காலங்கடந்த தொழுகையாக பனீ குறைழாவில் நிறைவேற்றினார்கள். இவர்கள் இரண்டு கூட்டத்தாரும் தந்த விளக்கங்களைப் பெருமானார் (ஸல்) அவர்கள் அப்படியே எடுத்துக்கொண்டார்கள். இவர்கள் இரண்டு கூட்டத்தாரையும் எதிரியை எதிர்ப்பதில் ஒரே அணியினராக ஆக்கிக் காட்டினார்கள் அண்ணலெம் பெருமானார் (ஸல்) அவர்கள்.

அறிவார்ந்த அறிஞர்களிடையே இருந்து வரும் அத்தனை கருத்து வேறுபாடுகளையும் இஸ்லாம் இந்த அடிப்படையிலேயே அனுமதிக்கின்றது. கருத்து வேறுபாடுடையவர்கள் நேர்வழியைக் கண்டுபிடிக்க அதன்படி தங்களது நித்திய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும் என்ற ஆர்வமும் அக்கறையும் உடையவர்களாக இருந்திட வேண்டும். எண்ணத்தில் நோக்கத்தில் இந்தத் தூய்மை இருந்திடும் வரை ஆயிரம் கருத்து வேறுபாடுகள் எழுந்திட்டாலும் ஆபத்து ஏதும் வந்து விடாது.

ஆனால், கருத்து வேறுபாடுகளின் கருவாக பொறாமையும், வெறுப்பும், தனக்குத் தான் எல்லாம் தெரியும் என்ற ஆணவமும் இருந்திடுமேயானால் இம்மையிலும் மறுமையிலும் அழிவே மிஞ்சும். மார்க்கத்தின் மாண்பு கெட்டுப்போகும்.

---

## அல்ஹஸனாத்துக்கு ஆக்கங்களை அனுப்புவோர் கவனத்திற்கு

சிறந்த கட்டுரை, கவிதை இஸ்லாமியச் சிறுகதை, துணுக்குகள் சமூகப்பிரச்சினைகள் பற்றிய விளக்கம், விமர்சனங்கள் போன்ற பயனுள்ள ஆக்கங்களை அல்ஹஸனாத் வரவேற்கிறது.

சொந்தப் பெயரும் முகவரியும் குறிப்பிடப்படாத எந்த ஆக்கமும் அல்ஹஸனாத்தில் பிரசுரிக்கப்பட மாட்டாது. ஆகவே புனைப் பெயரில் எழுதுவோரும் சொந்தப் பெயரையும் முகவரியையும் இணைப்புக் கடிதத்தில் குறிப்பிட வேண்டும் என்பதைக் கவனிக்கவும்.

ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய தாஈகளுக்கு

# இனங்காணும் திறன் வேண்டும்

அஷ்ஷெய்க் நாதிர் நூரி, குவைத்

முஃமின்கள் தங்களின் குற்றம் குறைகளை அறிந்து அவற்றைத் தவிர்த்து நடப்பதில் அதிக ஆர்வம் காட்ட வேண்டும். அவர்கள் ஏற்றுள்ள பொறுப்புக்களை முறைப்படி நிறைவேற்ற உதவும் வகையான நடவடிக்கைகளில் அக்கறை காட்டி நடந்து கொள்ளவேண்டும். அறிவு பூர்வமாகவும் தூய எண்ணத்துடனும் முஸ்லிம்களின் நலனையும் ஐக்கியத்தையும் காக்கப்பாடுபடவேண்டும். இத்துறைகளில் முன்னோடிகளாயிருப்போர் மற்ற முஃமின்களுடன் மனம்விட்டு அன்பாகப் பழகுவதும் அவர்களின் பிரச்சினைகளில் அக்கறை கொள்வதும் அவர்களின் சுகதுக்கங்களில் பங்கு கொள்வதும் அவசியமாகும். அல்லாஹ் அனைவரையும் சூழ்ந்திருக்கிறான். (மனிதர்களின்) கண்களின் சூதுகளையும் இருதயங்களில் மறைத்திருப்பவற்றையும் அவன் அறிகிறான்.

முஸ்லிம் மக்கள் மனம் சோர்ந்து இலட்சியம் தவறி பிழையான வழியில் (மோசம்) கொண்டு காலத்தைப் பாழ்படுத்திவிட்டார்கள் என்றும் அவர்களது இயக்கங்களும் அமைப்புக்களும் கூட இப்படியே இருக்கின்றன என்றும் காணும் சமூக நலன் நாடுவோர் கோபமேலிட்டால் மக்களைத் திட்டித் தீர்த்து விடக்கூடாது. இயக்கங்களையும் அமைப்புக்களையும் மோசமாக விமர்சனம் செய்து அவை இயங்கவிடாமல் ஆக்கிவிடக்கூடாது. மாறாக மக்களை அன்போடு அணுகவேண்டும். எந்த மோசமான நிலையிலும்கூட அவர்களை ஐக்கியப் படுத்தி முன்னேற்றமான வழியில் இட்டுச் செல்லலாம் என்பதில் நம்பிக்கை தளர்ந்து விடக்கூடாது. மக்கள் மீது நம்பிக்கையற்று அவர்களின் அமைப்புக்களையும் குலைப்போராக ஆகிவிடக் கூடாது அத்தகையவர்களுக்கு ஆதரவளிக்கவும் கூடாது.

அவர்கள் உங்களுடன் வந்திருந்தால் ஒழுங்கீனத்தைத் தவிர வேறு எந்த நன்மையையும் அவர்கள் உங்களிடம் ஏற்படுத்தியிருக்க மாட்டார்கள். விஷமத்தை ஏற்படுத்தும் நோக்கத்தில் உங்கள் மத்தியில் ஒழுங்கீனங்களையும் ஏற்படுத்தியிருப்பார்கள் (இத்தகைய கொடியவர்களுக்குச்) செவிசாய்ப்போரும் உங்கள் மத்தியில் இருக்கிறார்கள். ஆனால் அல்லாஹ் இத்தகைய அக்கிரமக்காரர்களை நன்கறிகிறான் (9:47) என்ற நிலையில் அமைந்து விடவும் கூடாது.

இவ்வாறான மோசமான தன்மையுள்ளவர்கள் சமூகத்தில் எப்போதும் இருப்பார்கள். உண்மையான விசுவாசிகள் இத்தகைய கொடியவர்களைச் சரியான சந்தர்ப்பத்தில் இனங்கண்டு கொள்வது அவசியமாகும்.

"(நபியே) நாம் விரும்பினால் உண்மையாகவே அவர்களை உங்களுக்கு (பிரத்தியட்சமாக)க் காண்பித்து விடுவோம். (அப்போது) அவர்களுடைய முகபாவனைகளைக் கொண்டே நீங்கள் அவர்களை நிச்சயமாக அறிந்து கொள்வீர்கள். அவர்களின் (கபடமான) பேச்சின் போக்கைக் கொண்டும் நீங்கள் அவர்களை நிச்சயமாக அறிந்து கொள்வீர்கள். (நம்பிக்கையாளர்களே) அல்லாஹ் உங்களுடைய செயல்களை நன்கறிகிறான்" (47:30) என்று அல்லாஹ் கூறியிருப்பதுபோல அத்தகையவர்களை அவர்களது முகபாவம், சுபாவம் நடவடிக்கைகள் என்பவற்றால் உரிய நேரத்தில் இனங்கண்டு கொள்ளவேண்டும். முஸ்லிம்களின் நண்பர்களும் சமூக நலன் நாடுவோரும் யார் என்பதை அறிந்து அவர்களை அரவணைத்துக் கொள்ளவேண்டும். அவர்களின் எதிரிகள் யார் காரணத்தை விளங்கி அவர்கள் செய்யும் சதிகள் எவை என்று தெரிந்து எச்சரிக்கையாக நடந்து கொள்ளவேண்டும்.

வெளித்தோற்றத்தைக் கண்டு ஏமாந்து விடுவதும் மிகவும் இலகுவாக ஏமாற்றப்படுவதும் எமது ஆசைகள் அபிலாசைகள் என்பவற்றை மற்றவர்களைப்போல பாசாங்கு செய்வோருக்கு பணிந்து நடப்பதும் கூடாது. எவ்வளவுதான் இருந்தாலும் இத்தகையவர்கள் நமது எதிரிகள் தான். அவர்கள் காட்டும் அன்பும் அனுதாபமும் பற்றும் பாசமும் வெறும் ஏமாற்று வித்தைகள் மட்டுமே. ஆகவே நாம் எப்போதும் மிக்க விழிப்புள்ளவர்களாகவும் ஆழ்ந்த சிந்தனையுடையோராகவும் சரியான மதிப்பீடுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். போலியான தோற்றங்களைக் கண்டு மயங்கிவிடாது யதார்த்த நிலையினை தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

இவர்கள் தான் சமூகத்தின் முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக அமைந்தவர்கள். எனவே இவர்களை இனங்காண்பதவசியம். இதற்குவேண்டிய தகைமையும் திறமையும் உள்ளவர்கள் நமக்கு மத்தியில் காணப்படவேண்டும். சமூகத்தின் சீர்குலைவுகளை சீர்செய்து முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்ல இவர்களால் மட்டுமே முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதவிக்கு வர ஓர் உபாயமாகும்

# பாபரி மஸ்ஜித் விவகாரம்!

● ஏ. அஸீஸ் நிஸாருத்தீன்

இந்திய உத்தர பிரதேஷ் மாநிலத்திலுள்ள அயோத்தியில் முதலாம் முகலாய மன்னரான ஜஹீருத்தீன் ஷா பாபர் என்பவரால் கட்டப்பட்டதாக கூறப்படுவதே இந்த மஸ்ஜித்!

பாபரி மஸ்ஜித் நிலைக்கொண்டுள்ள அயோத்தியில் ராமர் பிறந்ததாகவும் அங்கிருந்த கோயிலை இடித்து தகர்த்துவிட்டு மன்னர் பாபர் 'பாபரி மஸ்ஜிதை' நிர்மாணித்ததாகவும் குற்றம் சாட்டி பள்ளிவாசலை இடித்து அதே இடத்தில் ராமருக்கு கோவில் கட்ட வேண்டும் என்று ஹிந்துக்கள் கோரி வருகின்றனர்.

இன, வகுப்பு, சாதி கலவரங்களுக்கு பெயர் பெற்ற இந்தியாவிற்கு இப்பிரச்சினை எப்படி இருக்கும் என கேட்கவேண்டியதில்லை. முஸ்லிம்கள் மீது துவேஷத்தை வாரி இறைக்கும் விஸ்வ ஹிந்து பரிசத், ஆர். எஸ். எஸ். போன்ற இயக்கங்கள், இதற்காகவே 'ராம ஜென்ம பூமி மீட்பு இயக்கம்' என்று ஓரணியில் திரண்டிருக்கின்றன.

தற்போதைய இந்திய அரசு எதிர் நோக்கும் பிரச்சினைகளில் பாபரி மஸ்ஜித் முக்கிய இடத்தைப் பெறுகிறது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு எழுப்பிய கலவரங்களாக வெடித்து தணிந்து வரும் வேளையில் பாபரி மஸ்ஜித் விவகாரம் சூடுபிடிக்கிறது.

அரசியல் ஆதாயத்திற்காகவே தங்களின் கட்சிக் கொடிகளை அசைத்துத் திரியும் குறுகிய உள்ளம் கொண்ட சிலர், பெரும்பான்மை ஹிந்துக்களின் ஆதரவை திரட்ட இந்த விவகாரத்தை பயன் படுத்தி வருகின்றனர்.

பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி, ஹிந்துக்கள் மத்தியில் கோயில் கட்டியே தீர வேண்டும் என்று கோரும் போராட்ட ஊர்வலம் நடாத்தி குட்டையைக் குழப்பி வருகின்றார். அதற்கு மாறாக வி. பீ. சிங், நீதி மன்ற தீர்ப்பு வரும்வரை தான் எதற்கும் அசைந்து கொடுக்கப் போவதில்லை என்று உறுதியாக கூறுகிறார். மாறாக யாரும் நடவடிக்கை மேற்கொண்டால் அதிகாரத்தைப் பயன் படுத்தி அதனைத் தடுப்பதாகவும் எச்சரித்திருக்கிறார்.

1990 அக்டோபர் மாதம் 30ம் திகதி கோவிலுக்கான அடிக்கல்லை நாட்டவேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி களத்தில் குதித்து ஆதரவு திரட்டிக்கொண்டிருக்கிறது. பாபரி மஸ்ஜித் விடயமாக சுமார் 40 வருடங்களாக நீதி, நியாய அடிப்படையில் தீர்வொன்றை எதிர்பார்க்கும் முஸ்லிம்கள் இன்னும் நீதி மன்ற தீர்ப்பிலேயே நம்பிக்கை வைத்து பொறுமையாக இருக்கின்றார்கள். எந்தவித ஆதாரமுமின்றி யூகத்தின் அடிப்படையில் 'பாபரி மஸ்ஜித் பிரச்சினையை கிளப்பிய ஹிந்துக்கள் இப்போது நீதிமன்ற தீர்ப்பை எதிர்பார்க்காமல் சட்டம், ஒழுங்கு, நீதி, நியாயம் எல்லாவற்றையும் குழி தோண்டி புதைத்துவிட்டு வன்முறையின் மூலம் கோயில் கட்ட நினைக்கின்றார்கள். அதற்கான திகதியையும் தீர்மானித்து விட்டார்கள்!

கி. பி. 1528ல் கட்டப்பட்ட இந்த பள்ளிவாசல் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதிவரை முஸ்லிம்களால் ஐவேளை தொழுகை நடாத்தி அலங்கரிக்கப் பட்டுக் கொண்டு இருந்தது. 1949ம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதி இஷாத் தொழுகைக்கு பிறகு, நடு இரவின் யாருமில்லாத வேளையில் ஹிந்துக்கள் சிலர் மஸ்ஜிதுக்குள் நுழைந்து ராமர், சீதையின் விக்கிரகங்களை பள்ளிவாசல் மிம்பர் மேடையில் வைத்தனர். பிறகு, மஸ்ஜிதுக்குள் தெய்வீக அற்புதமாக விக்கிரகங்கள் தோன்றியதாக ஹிந்துக்கள் மத்தியில் கதைவிட்டனர். ஆயிரக்கணக்கானோர் ஆரவாரத்தோடு மஸ்ஜிதினுள் நுழைந்தனர்........

ராமர் உலகில் வாழ்ந்தாரா? அதற்கான சான்றுகள் உள்ளனவா? அயோத்தியில் தான் பிறந்தாரா? ராமரின் கோவில் இடிக்கப்பட்டுத்தான் பாபரி மஸ்ஜித் நிர்மாணிக்கப்பட்டதா? என்பன போன்ற கேள்விகளுக்கு வரலாற்று ரீதியாக ஆதாரம் முன்வைப்பதற்கு சக்தியில்லாத ஹிந்து பேரினவாத இயக்கமான விஸ்வ ஹிந்து பரிசத்தும் அதைப் போன்ற இயக்கங்களும் ஹிந்து மக்களிடம் துவேஷ வெறியையூட்டி பாபரி மஸ்ஜிதை பறித்தெடுக்கப் பார்க்கின்றன.

அயோத்தியில் ராமருக்கு கோவில் எதுவும் இருக்கவில்லை. அதனை இடித்து மன்னர் பாபர் மஸ்ஜிதைக் கட்டவில்லை என்பது வரலாற்று ரீதியாகவும், அகழ்வாராய்ச்சி அடிப்படையிலும் சந்தேகமின்றி நிரூபிக்கப் பட்டிருக்கின்றன. இது விடயமாக ''பாபரி மஸ்ஜித் ராம ஜன்ம பூமியா?'' என்ற நூலில் குறிக்கப்பட்டுள்ள ஒரு சில தகவல்களை பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் சர்வப்பள்ளி ராதா கிருஷ்ணனின் மைந்தரும், வரலாற்றுப் பேராசிரியருமான எஸ். கோபால் அவர்களின் கருத்துப்படி அயோத்தியிலுள்ள பெரும்பாலான ராமர் கோவில்கள் கி. பி. 18ஆம் நூற்றாண்டிற்குப் பிறகுதான் கட்டப் பட்டன. கி. பி. 16ம் நூற்றாண்டில் வாழ்ந்த முதலாம் முகலாய மன்னர் ஜஹிருத்தீன் பாபர், ராமர் கோயிலை இடித்தார் என்பதற்கு எவ்வித ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை என்றும் பேராசிரியர் கோபல் கூறியுள்ளார். சென்னையிலுள்ள ''இந்தியன் ஸ்கூல் ஓப் சோசியல் சயன்ஸ் (Indian School of Social Science) நிறுவனம் 1989 டிசம்பர் 18 அன்று நடத்திய கருத்தரங்கில் பேசுகையில் அவர் மேலும் கூறினார்:

''மத்திய காலம் வரை அயோத்தியில் ராமப் பாரம்பரியத்தைவிட சைவப் பாரம்பரியமே முக்கியத்துவம் பெற்று இருந்தது. அயோத்தியிலுள்ள ராமர் கோயில்களில் பெரும் பாலானவை கி. பி. 18 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தான் கட்டப்பட்டுள்ளன.

''ஒரு காலத்தில் கோயில் அமைந்திருந்த இடத்தில் தான் பாபரி மஸ்ஜித் கட்டப்பட்டது என்ற வாதத்திற்கு ஆதரவாக இதுவரை எவ்வித ஆதாரமும் கிடைக்கவில்லை. அயோத்தியிலேயே 30க்கும் மேற்பட்ட இடங்களை சுட்டிக் காட்டி அங்குதான் ராமர் பிறந்ததாகக் கூறப் படுகிறது.

''ஒரு முஸ்லிம் மன்னராக இருந்த பேரரசன் பாபர் கோவிலை இடித்தார் என்பதற்கு எவ் வித ஆதாரமும் இதுவரை கிடைக்கவில்லை...!
(ஆதாரம் Indian Express சென்னை வெளியீடு பதிப்பு 21-12-89)

பிராமண சமூகத்தைச் சேர்ந்த, ஹிந்து மதத்தின் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கையில் எவ்வித குறைபாடும் காணமுடியாத பேராசிரியர் சர்வப் பள்ளி கோபால் அவர்களும் அயோத்தியில் ராமருக்கு இருந்த கோவிலை பாபர் இடித் தார் என்பதை ஆணித்தரமாக மறுத்துள்ளார். (பாபரி மஸ்ஜித் ராம ஜன்ம பூமியா? பக்கம் 24)

கி. பி. 1528ல் கட்டப் பட்ட இந்த பள்ளி வாசல் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 22ம் திகதிவரை முஸ்லிம்களால் ஐவேளை தொழுகை நடாத்தி அனுசரிக்கப்பட்டு கொண்டு இருந்தது. 1949ம் ஆண்டு டிஸம்பர் 22ம் திகதி இஷாத் தொழுகைக்கு பிறகு, நடு இரவில் யாருமில்லாத வேளையில் ஹிந்துக்கள் சிலர் மஸ்ஜிதுக்குள் நுழைந்து ராமர், சீதையின் விக்கிரகங்களை பள்ளிவாசல் மிம்பர் மேடையில் வைத்தனர். பிறகு, மஸ்ஜிதுக்குள் தெய்வீக அற்புதமாக விக்கிரகங்கள் தோன்றியதாக ஹிந்துக்கள் மத்தியில் கதைவிடப்பட்டு ஆயிரக் கணக்கானோர் ஆரவாரத்தோடு மஸ்ஜித் அருகில் குழுமினர்.

பள்ளிவாசலுக்குள் விக்கிரகங்கள் வைக்கப் பட்ட செய்தியை அறிந்த அக்கால இந்திய பிரதமர் நேரு இத்தவறை நிவர்த்திக்குமாறு உத்தர பிரதேஷ் முதல்வருக்கு அறிவித்தார். ஆயினும் எதுவும் நடக்கவில்லை. எனவே 1949 டிஸம்பர் 23ம் திகதி மாலை 5 மணிக்கு சக்தி வாய்ந்த ஒரு பூட்டு மூலம் மஸ்ஜிதின் பிரதான நுழைவாயில் மூடப்பட்டு நீதி மன்றத்தின் பொறுப்பின் கீழ் கொடுக்கப்பட்டது. பாபரி மஸ்ஜிதை முஸ்லிம்களிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும் என பல கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதும் ''நீதி மன்றம் இறுதித் தீர்ப்பு கூறிய பின்னரே முடிவு எடுக்கப்படும்,'' என்று முஸ்லிம் களுக்கு பதில் கூறப்பட்டது. ஆனால் கடந்த 40 வருடங்களாக நீதிமன்றம் தீர்ப்பை வழங்கவில்லை.

மஸ்ஜிதுக்குள் கள்ளத்தனமாக சிலைகளை வைத்ததோடு நில்லாது சிலைகளுக்கு பூஜை செய்ய வும், பூஜை செய்வதை நுழைவாயிலுக்கு வெளியே நின்று தரிசிக்கவும் ஹிந்துக்களுக்கு அனுமதி வழங் கப்பட்டது. ஆனால் முஸ்லிம்கள் பள்ளிவாசலுக்கு அருகில் செல்லக் கூட அனுமதிக்கப்படவில்லை!

1949 முதல் பாபரி மஸ்ஜித் வழக்கு நீதி மன் றத்தில் முடங்கிக்கிடந்தது. விஷ்வ ஹிந்து பரிசத் என்ற ஹிந்து வெறியாட்ட இயக்கம் 1984 செப்டம் பர் 25ம் திகதி சீதை பிறந்ததாக கூறப்படும் நேபாளத்திலுள்ள ஜனக்பூரிலிருந்து அயோத்தி வரை ''ராம ஜன்ம பூமி மீட்பு'' ரத யாத்திரையை நடாத்தியது. 1984 அக்டோபர் 7ம் திகதி பாபரி மஸ் ஜிதின் பூட்டை உடைத்து அதனை முழு கோவிலாக மாற்ற 'பூட்டை உடை' போராட்டமும் ஆரம்பிக் கப்பட்டது. நீண்ட காலமாக பூட்டப்பட்டிருந்த பாபரி மஸ்ஜிதின் பூட்டு உடைக்கும் சதிப் போராட் டத்தின் மூலம் ஹிந்து பக்தர்களுக்கு திறந்து விடப் பட்டது. சதிப் போராட்டத்தில் வெற்றி பெற்ற விஷ்வ ஹிந்து பரிசத் மஸ்ஜித் நின்று கொண்டிருக் கும் இடத்தில் ராமருக்கு பிரமாண்டமான ஆலயம் எழுப்பத் திட்டமிட்டது.

1989ம் ஆண்டு ஜனவரியில் அலஹாபாத்தில் நடைபெற்ற 'விராத் சாந்தி' சம்மேளனத்தில், அயோத்தியில் ராமருக்கு ஆலயம் எழுப்ப நான்கு கட்ட நடவடிக்கை திட்டம் தீட்டப்பட்டது. இத் திட்டத்தை செப் 30-1989ல் துவக்குவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

● மூன்றாம் கட்ட நடவடிக்கையாக நாடுமுழுவதும் உள்ள எல்லா நகர்களிலும் கிராமங்களிலும்

(32 பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### குவைத்–ஈராக் விவகாரம்

# ஒரு குற்றவாளியை மற்றொரு குற்றவாளி தண்டிக்க முடியாது

● அபூ ரம்ஸி

"இறைவன் எம்முடன் இருக்கின்றான்; ஜோர்ஜ் புஷ்ஷுடன் ஷைத்தான் இருக்கின்றான்; ஷைத்தான் இறைவனை வென்றுவிட முடியுமா?" இப்படி முழங்கியுள்ளார் ஈராக் ஜனாதிபதி ஸத்தாம் ஹுஸைன்!

இந்த முழக்கத்தைக் கேட்கும் எந்தவொரு முஸ்லிமும் வீர உணர்வு பெறாதிருக்க மாட்டான்; ஸத்தாம் ஹுஸைனுக்கு ஆதரவாகவும் அமெரிக்காவுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்து குரல் எழுப்பாதிருக்க மாட்டான்!

முஸ்லிம்களின் இந்த உணர்ச்சியும் ஆர்வமும் ஸத்தாம் ஹுஸைனுக்காக அல்ல. அவர் முழங்கிய முழக்கத்தில் பொதிந்துள்ள கருத்துக்களுக்கேயாகும். இத்தகைய முழக்கத்தை யார் முழங்கினாலும் அவருக்கு ஆதரவாக அனைத்து முஸ்லிம்களும் அணிதிரள்வர்; கடந்த கால வரலாறு இதற்குச் சான்று.

எனினும், இந்த உணர்ச்சிகளுக்கு அப்பால் நின்று புரிந்துகொள்ள வேண்டிய பல உண்மைகள் உண்டு; அவற்றைப் புரிந்துகொள்ள தவறும் பட்சத்தில் பிழையான முடிவுகளுக்கு வரவும் அவற்றின் அடிப்படையில் செயற்படவும் நாம் தூண்டப் படலாம்; அதனால் பின்னர் வருந்தப்பட வேண்டியும் வரலாம்.

அந்த உண்மைகள்தான் என்ன?

## ஆக்கிரமிப்பு

சென்ற ஆகஸ்ட் 2ஆம் திகதி ஈராக்கின் சுமார் ஒரு லட்சம் படைவீரர்கள் போர் விமானங்கள், தாங்கிகள் சகிதம் குவைத்தினுள் நுழைந்து அதை முற்றாக ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அங்கிருந்து கிடைக்கும் நம்பகமான செய்திகள் அனைத்தும் பெரும் கவலை தருவனவாகவே இருக்கின்றன. உலமாக்களை தேடித்தேடிக் கொலை செய்வது, பெண்கள் கேவலமாக நடத்தப் படுவது, குவைத்தியரின் உடைமைகளை கொள்ளை அடிப்பதுடன் மீதமானவற்றை அழிப்பது போன்ற தகவல்களைக் கேட்கும் எந்த முஸ்லிம் தான் கவலைப்படாதிருக்க முடியும்?

எந்தப் பிரச்சினையையும் பேசித்தீர்க்க வேண்டும் என்ற கருத்து வலுவடைந்து வரும் காலமிது. 'குவைமா' எனும் மண்ணெண்ணெய் வயல் சம்பந்தமாக ஈராக்குக்குக் குவைத்துடன் இருந்த பிணக்கை சமரசமாகப் பேசித் தீர்த்திருக்க முடியும். மாறாக முழு குவைத்தையும் ஏதோ பாணியில் ஆக்கிரமித்தது ஒரு கொடுஞ்செயலாகும். உலகின் சகல தரப்பு மக்களும் கண்டிக்க வேண்டிய பாவச்செயலாகும். ஏனெனில் இது ஒரு நாட்டின் இறைமையையும் சுதந்திரத்தையும் துச்சமாக மதித்ததன் விளைவாக உருவான பகற்கொள்ளைக்கு ஒப்பான செயல் என்பதை எவரும் மறுக்க மாட்டார்கள்.

## பழக்கப்பட்ட செயல்

ஈராக்குக்கு இது புதிய அனுபவமல்ல; ஈரானுடன் ஒரு தீவு சம்பந்தமாக அன்றும் போர் தொடுத்தது. ஆனால் ஈரான் விட்டுக்கொடுக்கவில்லை; அதனால் பல லட்சம் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். பல கோடி பெறுமதியான இரண்டு நாட்டினதும் வளங்கள் நாசமாயின; தனியார் உடைமைகள் துவம்சம் செய்யப்பட்டன.

ஆனால், சின்னஞ்சிறிய குவைத்தினால் ஈராக்கின் படைகளை சமாளிக்க முடியவில்லை. ஓரிரு தினங்களிலேயே அது முற்றாக ஆக்கிரமிக்கப்பட்டு இணைக்கப்பட்டது. அதன் பின் ஸத்தாம் ஹுஸைன் உலக அபிப்பிராயம் பற்றிக் கவலை கொள்ளாது அடுத்தவன் தோட்டத்தில் புகுந்த ஏதோ ஒன்றுபோல நடந்து வருகிறார். இவரின் இந்தப் போக்கை சரியென்று அங்கீகரித்தால் 'இறைமை, சுதந்திரம்' என்ற சொற்கள் அர்த்தமற்றதாகிவிடும்; எவரும் எந்த நாட்டையும் ஆக்கிரமிக்கலாம் என்ற நிலை உருவாகிவிடும்.

## விட்டபிழை

இத்தகைய பேராபத்தான நிலை உருவாவதற்கு குவைத் ஆட்சியாளர் மட்டுமன்றி சவூதி அரேபியா, ஐக்கிய அரபு ராஜ்ஜியங்கள் போன்றவற்றின் ஆட்சியாளரும் காரணமானவர் என்பதையும் நாம் மறுக்கவியலாது. அவர்கள் ஒரு முஸ்லிம் ஆட்சியாளரின் பண்புகளை மறந்து பெரும் சுகபோக வாழ்வு நடத்தி வருகின்றனர். இஸ்லாத்தின் எதிரிகளான மேற்கத்திய ஆட்சியாளரின் கூட்டுறவில் பகிரங்கமாக தீய செயல்களில் ஈடுபடுவதாகவும் செய்திகள் கூறுகின்றன. அவர்களுக்கு மேற்குலகின் பல ஆடம்பரமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளாக மாளிகைகள் இருப்பது மட்டுமன்றி அரபு நாடுகளின் பெரும் செல்வமும் அந்த நாடுகளின் குறிப்பாக அமெரிக்காவில் நிரந்தர வைப்புக்களாக இடப்பட்டுள்ளது. அத்துடன் எண்ணெயை வளத்தை உற்பத்தி செய்வதும் விநியோகிப்பதும் விலை நிர்ணயிப்பதும் அரபு நாடுகளின் 'ஒபெக்' நிறுவனமாயினும், அதுவும் ஒரு வகையான விதத்தில் அமெரிக்காவே மேலாதிக்கம் பெற்றுள்ள நிலை இருக்கின்றது. உண்மையில் இத்தகைய நாட்டுத் தலைவர்களின் உள்ளங்களை அமெரிக்க வெள்ளை மாளிகையே முழுமையாக ஆக்கிரமித்துள்ளது.

மறுபக்கத்தில் ஈராக் உட்பட இன்னும் சில முஸ்லிம் நாடுகளுக்கு ரஷ்யாவின் கிரெம்ளின் மாளிகையே கிப்லாவாக உள்ளது, ரஷ்யாவும் அதன் அணி சேர்ந்த நாடுகளுமே அவற்றுக்கு முன்னோடி நாடுகள்!

ஈராக்கில் மைக்கல் அஃப்லாக் என்ற கிறிஸ்தவரால் உருவாக்கப்பட்ட 'பாத்' சோஷலிசக் கட்சியே ஆட்சி நடத்துகின்றது. அதன் தற்போதைய தலைவர் சத்தாம் ஹுசைன். இக்கட்சி இஸ்லாத்துக்கு எதிரான போக்கைக் கொண்டது. கம்யூனிஸ, நாத்திக வழியில் நாட்டை நடத்திச் செல்வது இதன் குறிக்கோள். இக்கட்சியினர் ஆட்சிக்கு வருவதற்கும், வந்தபின் ஆட்சியை ஸ்திரப்படுத்திக் கொள்வதற்கும் நூற்றுக்கணக்கான உலமாக்களை கொலை செய்தனர்; ஆயிரக்கணக்கான இஸ்லாமிய ஊழியர்களை சித்திரவதை செய்து கொன்றனர்! இஸ்லாத்தின் பல துறைகளை முடமாக்கி செயலிழக்கச் செய்தனர்.

இவற்றுக்கு மத்தியில் ரஷ்யாவின் போன்று அவ்வப்போது எடுத்துக்காட்டுக்கு சில இஸ்லாமிய மாநாடுகள் நடத்தப்படுவதும், சத்தாம் ஹுசைன் தொழுவது போன்ற புகைப்படங்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதும் நாம் காணக் கூடியதே. ஆனால் உண்மை அவ்வாறன்று. கடந்த ஆப்கன் விடுதலைப் போரில் கடைசிவரை ஈராக் ரஷ்ய ஆக்கிரமிப்பாளரின் பக்கம் இருந்ததும் யாவரும் அறிந்ததே!

இவற்றின் அடிப்படையில் நோக்கும்பொழுது குவைத் ஆட்சியாளர் ஒரு வகையான குற்றவாளி எனில் சத்தாம் ஹுசைனோ மற்றொரு வகையான குற்றவாளியாவார். எனவே, ஒரு குற்றவாளியை மற்றொரு குற்றவாளி தண்டிப்பதில் எந்த வித நியாயமும் இல்லை என்பது பக்கச்சார்பின்றி சிந்திப்போர் உணர்வர்.

## விபரீதங்கள்

எது எப்படியோ தூரநோக்கின்றி சத்தாம் மேற்கொண்ட ஆக்கிரமிப்பால் விளைந்துள்ள விபரீதங்கள் ஒன்றிரண்டல்ல என்பது மட்டும் தெளிவு.

அத்தகைய விபரீதங்களுள் முதலாவதும், தலையாயதுமானதாக இருப்பது அமெரிக்கக் கொடிய நாசப் படைகள் உட்பட மேற்கத்திய படையின் பிரவேசமாகும். அவை-குறிப்பாக அமெரிக்கா இத்தகைய அருமையான சந்தர்ப்பமொன்றை எதிர்பார்த்துக் காத்து இருந்தது. அச்சந்தர்ப்பம் ஈராக்கின் ஆக்கிரமிப்பின் காரணமாக சவூதி அரேபியாவால் அமைத்துக் கொடுக்கப்பட்டு விட்டது. உடனே அசுர லோகத்தின் அமெரிக்காவும் அதன் ஆமாம் சாமி நாடுகளும் இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி கூட்டு விமானந்தாங்கிக் கப்பல்கள், போர்க் கப்பல்கள், விமானங்கள், டாங்கிகள், கவச வாகனங்கள், பயங்கர போர்க் கருவிகள் சகிதம் பல்லாயிரக் கணக்கான படைப்பிரிவினரையும், எயிட்ஸ் தொற்றுப் பரப்பி (பெண்)களையும் அனுப்பி, மற்றொரு வகையான ஆக்கிரமிப்புக்கு ஒப்பான நிலையை தோற்றுவித்துவிட்டன.

இப்படைகள் சவூதி அரேபியாவை பாதுகாப்பது என்பதாயினும், சவூதி அரேபியா உட்பட மத்திய கிழக்கின் ஏனைய முஸ்லிம் நாடுகளுக்கும் பல வகையிலும் அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளன. வெள்ளை மாளிகை அறிக்கைகளை அவதானிக்கும்போது இவை இலேசில் வெளியேறமாட்டாதென்பது தெளிவு.

அமெரிக்காவுக்கு சவூதி அரேபியாவைப் பாதுகாப்பதைவிட வேறு பல முக்கிய நோக்கங்கள் இருக்கின்றன. அவை முறையே, மத்திய கிழக்கில் தனது மேலாதிக்கத்தை அசைக்க முடியாத நிலையில் வைத்துக் கொள்வது. எண்ணெய் திரவியத்தின் ஏகபோகத்தைப் பெறுவது. முடிந்த மட்டும் அரபு நாட்டுச் செல்வத்தைச் சுரண்டிச் செல்வது, மேலும் இஸ்ரேலின் நிலைப்பாட்டுக்கும் விஸ்தரிப்புக்கும் தடையான சூழ்நிலையை பலவீனப்படுத்துவதன் மூலம் அரணாக உறுதிவாய்ந்த ஸ்திரமான நிலையை தோற்றுவிப்பது என்பன பிரதான நோக்கங்களாகும்.

எல்லாம் முடிந்த பின் அமெரிக்கா விட்டுச் செல்லும் அசிங்கங்களும் அதன் கீழ்த்தரமான ஒழுக்கக்கேடான கலாசாரமும், எயிட்ஸ் நோய்களும் அடங்கும். அமெரிக்கர் இல்லாமலே அமெரிக்காவின் இலட்சியங்களை அவை நிறைவேற்றும் சூழ்நிலை உருவாகிவிடும்.

## அகதிகள்

இரண்டாவது விபரீதம், தொழில் ரீதியாகக் குவைத் சென்ற வெளிநாட்டவர் நிலை. இன்று அத்தகைய லட்சக்கணக்கான வெளிநாட்டவர் உழைப்பின்றி, உழைத்த பணமின்றி, உண்ண உணவின்றி, இருக்க இடமின்றி, தத்தமது நாடுகளுக்குப் போக வழியின்றி, அகதிகளாகித் தமது பெட்டி படுக்கைகளுடன் அங்குமிங்கும் ஓடித்திரிகின்றனர். அந்நிலை மூலம் முஸ்லிம் சமுதாயத்திற்கும் பாதகமான கருத்துக்களை உருவாக்கி விடலாம்.

அரபு நாட்டு ஆட்சியாளர் இஸ்லாத்தைப் பற்றி அக்கறையின்றி பல முகாம்களாகப் பிரிந்து அமெரிக்காவை, பிரிட்டனை, ரஷ்யாவை 'கிப்லா'க்களாகக்

(31ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளைகுடா பிரச்சினை — இஸ்லாமிய நோக்கு

## அந்நிய படைகள் உடன் வெளியேற வேண்டும்

அறபு நாடுகளுக்கிடையிலான பிரச்சினைகளுக்கு இராணுவ முறையில் தீர்வு காணப்படுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் எதனையும் இக்வானுல் முஸ்லிமூன் இயக்கம் ஆதரிக்காது. அதே வேளை இஸ்லாமிய அல்லது வேறு எந்த வெளிநாட்டு இராணுவ தலையீடுகளையும் அது விரும்பவில்லை என்று 3-8-90லேயே நாம் பகிரங்கமாகக் கூறினோம்.

இஸ்லாமிய, அறபு நாடுகளின் பிரச்சினைகள் இஸ்லாமிய ஷரீஅத் அடிப்படையிலும் பேச்சுவார்த்தைகளின் மூலமாகவும் சமாதான முறையிலும் தீர்க்கப்படவேண்டும். வளைகுடாப் பிரச்சினையில் அமெரிக்காவின் இராணுவத் தலையீட்டுக்கு எந்த நியாயம் கற்பிக்கப்பட்டபோதிலும் நாம் அதை வன்மையாகக் கண்டிக்கிறோம். அமெரிக்காவின் இந்தச் செயல் மீண்டும் காலனித்துவ ஆட்சியை ஏற்படுத்துவதற்கான ஒரு மறைமுகமான முயற்சியும் வளைகுடா நாடுகளுக்குமட்டுமன்றி மூன்றாம் உலக நாடுகள் அனைத்துக்கும் ஓர் அச்சுறுத்தலுமாகும். இதன் மூலம் அமெரிக்கா கடந்த காலங்களில் போல ஆசிய ஆபிரிக்க நாடுகளை அடிமைப்படுத்தி அவற்றின் வளங்களைச் சூறையாட விரும்புகிறது.

அமெரிக்கா நீதியையும் நியாயத்தையும் விரும்புமானால் ரஷ்யாவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வேறு பல நாடுகளிலிருந்தும் பல இலட்சக்கணக்கான யூதர்கள் பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான பூமியில் இஸ்ரேல் குடியேற்றும் நடவடிக்கையை முழுப்பலத்துடனும் எதிர்த்திருக்கவேண்டும். மாறாக பலஸ்தீனியர்களுக்கு ஸியோனிஸ்டுகள் செய்யும் அக்கிரமங்களுக்கெல்லாம் அமெரிக்கா பணமும் பலமும் கொடுத்து பகிரங்கமாகவே ஆதரிக்கிறது. அமெரிக்கப் படையில் நியாயமான அளவு ஸியோனிஸ யூதர்களும் உள்ளனர் என்பதும், அவர்களுக்கு அமெரிக்கர்களுக்குள்ள அனைத்து உரிமைகளும் வழங்கப்பட்டிருக்கிறது என்பதும், அமெரிக்காவின் இஸ்லாமிய விரோத மனப்பான்மையையும் இரட்டை வேடத்தையும் காட்டுகிறது. முஸ்லிம்களின் புனிதஸ்தலங்களுள்ள மக்காவிலும் மதீனாவிலும் ஸியோனிஸ்ட்கள் புகுந்து அவர்கள் விரும்பும் ஸியோனிஸ ஏகாதிபத்தியத்தை விஸ்தரிக்கும் முயற்சிக்கு வழி வகுக்கும் மறைமுகமான ஒரு முயற்சி என்பதில் சந்தேகம் இல்லை.

அமெரிக்க இராணுவத்துடன் பிரித்தானியா பிரான்ஸ் போன்ற நாடுகளின் இராணுவத்தினரும், ஸஊதி அரேபியாவின் பாதுகாப்புக்கென்று கொண்டு வந்து குவிக்கப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இவர்கள் யாவரும் உடனடியாக வெளியேறவேண்டும். அங்கு ஈராக்கின் தலையீட்டைத் தடுத்து பிரச்சினைக்கு சமாதான தீர்வுகாண அறபு, இஸ்லாமிய நாடுகளின் இராணுவம் அனுப்பப்பட வேண்டும். இதைவிடுத்து இரட்டை வேடம் போடும் அமெரிக்காவும் அதன் ஆதரவாளர்களும் ஈராக் உட்பட முஸ்லிம் நாடுகள் எதிலும் தலையிடுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

முஸ்லிம்கள் யாவரும் தங்கள் உறக்கத்திலிருந்து விழித்துக் கொண்டு உண்மையான நிலையை உணர்ந்து இஸ்லாத்துக்கும் முஸ்லிம் நாடுகளுக்கு மட்டுமன்றி முழு மனித நாகரிகத்துக்கும் சவாலாக அமைந்துள்ள இச்சிக்கலான தலையீடுகளையும் முறியடிக்க இஸ்லாமிய அடிப்படையில் அணிதிரள வேண்டும் என்று அல் இக்வானுல் முஸ்லிமூன் இயக்கம் கேட்டுக் கொள்கிறது.

—முஹம்மத் ஹாமித் அபுன் நஸ்ர்
தலைவர் அல் இக்வானுல் முஸ்லிமூன் இயக்கம்

### ஸியோனிஸ்டுகளுக்கு வழியைத் திறந்து விட்டனர்

வளைகுடாப்பிரச்சினை கடந்த ஐந்து தசாப்தங்களில் ஏற்பட்ட மிகவும் மோசமான ஒரு பிரச்சினையாகும். இது மேலும் வளர்ச்சியடையுமானால் அவதானிகள் கருதுவதுபோல இது வளைகுடா நாடுகள் அனைத்தையும் பாதிக்கும் மிக மோசமான பிரச்சினையாக ஆகிவிட இடமுண்டு.

வளைகுடாப்பிரச்சினை குறித்து பொதுவாக முழு முஸ்லிம் உம்மத்தும் குறிப்பாக அறபு நாடுகளில் வாழும் எமது உம்மத்தவர்களும் பெரிதும் கவலை கொண்டிருக்கிறார்கள். சாந்தியாகவும் ஏனைய பிரச்சினைகளின்றியும் பலவருடங்களாக வாழ்ந்த வளைகுடா நாட்டு மக்களுக்கு இப்போது ஏற்பட்டுள்ள நிலை மிகவும் கசப்பானது. இதன் காரணமாக பயங்கரமான பல பிரச்சினைகளுக்கு அவர்கள் முகம்கொடுக்க வேண்டியிருப்பதோடு அவர்கள் மத்தியில் பீதியும் பயமும் நிம்மதியற்ற நிலையும் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்து வருகின்றன. அதுமட்டுமன்றி, இக்கால முறையில் எதிர்பாராத வேறு பல பிரச்சினைகளும் இந்த இஸ்லாமிய நாடுகளில் தலைதூக்க வழிபிறந்துள்ளது. அறபுகள் மத்தியில் ஐக்கியம் குலைந்து இஸ்லாமியர்களிடையே கருத்து வேறுபாடு வளர்ந்து அதன் மூலம் ஆப்கானிய ஜிஹாதும் பலஸ்தீனிய 'இன்திபாழா'வும் பாதிக்கப்படக்கூடிய பயங்கரமான சூழல் ஏற்பட்டுள்ளது. பாரிய அளவில் பொருளாதாரப் பிரச்சினைகளும் வளைகுடா நாடுகளின் அந்நிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைகளின் ஆக்கிரமிப்பும் அரபு இராணுவங்கள் ஒன்றை எதிர்க்க மற்றொன்று தூண்டப்படும் நிலையும் ஏற்பட்டுள்ளன. இதனால் ஸியோனிஸ்டுகள் மத்திய கிழக்கில் தங்களின் விருப்பத்துக்கேற்ப நடவடிக்கைகளை பட்டப்பகலில் மிகவும் துணிகரமாக மேற்கொள்ள வழி பிறந்துவிட்டது.

—அல்ஜிஹாத்
சஞ்சிகை, செப்டம்பர் / ஒக்டோபர் 1990
ஆசிரியர் கருத்திலிருந்து.

## ஈராக் படை வெளியேற வேண்டும்

ஈராக் அரசு குவைத்தின் மீது ஆக்கிரமிப்புப்போர் தொடுத்தது இஸ்லாமிய போதனைகளுக்கு நாகரீகமான மாண்புப் பண்பாடு, நடைமுறைச் சட்டதிட்டங்கள் என்பவற்றுக்கும் முற்றிலும் முரணானது. ஆண்மைக்கும் மனித கௌரவத்துக்கும் கூட மாறானது. ஆகவே ஈராக், குவைத்தை அதன் மக்களிடம் கையளித்து விட்டு உடனடியாக அங்கிருந்து தனது படைகளை திருப்பியழைத்துக் கொள்ள வேண்டும். ஈராக் தொடர்ந்தும் தன் ஆக்கிரமிப்பு முயற்சியினை மேற்கொள்வது இஸ்லாமிய உலகில் அந்நியரின் ஆதிக்கம் மேலோங்கவே வழிசெய்யும். மக்கா மதீனா மீது அந்நிய இராணுவங்களின் ஆக்கிரமிப்பு நீடிக்குமாயின் அல்லது அதற்கு வழிவகுக்கும் வகையில் ஈராக் தனது துருப்புகளை வாபஸ் பெறாது அடம்பிடிப்பானால் முஜாஹிதீன்கள் புனிதத்தலங்களைக் காப்பதற்காக ஜிஹாத் செய்ய எந்தக்கணமும் தயாராகவிருக்கிறார்கள்.

—உஸ்தாத் ஸையாப்
ஆப்கான் இஸ்லாமிய அரசின் பிரதமர்

## இராணுவ நடவடிக்கை பயங்கரமானது

வளைகுடாவில் எழுந்துள்ள பிரச்சினை மிகவும் பயங்கரமானது. இது குறித்து எமது ஜமாஅத்தே இஸ்லாமி மிகவும் கவலை கொள்கிறது. இஸ்லாமிய நாடுகளின் தலைவர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளை மறந்து எதிரிகளின் தலையீட்டை முறியடிக்க உடனடியாக முன்வரவேண்டும். இவ்விஷயத்தில் அக்கறைகாட்டாதவர்கள் அனைத்து முஸ்லிம்களின் கண்டனத்திற்கும் உரியவர்களாவார்கள். ஈராக்கின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். அதேவேளை இதற்கெதிரான இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வது முஸ்லிம்களின் நலன்களைப் பாதிக்கும். எதிரிகளுக்கே அது நன்மையாக முடியும். ஆதலால் அனைத்தையும் நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் இருதரப்பை அணைத்து முயற்சிகளும் உடனடியாக மேற்கொள்ளப்படவேண்டும் என்பதே எமது விருப்பம்.

எவரேனும் புனிதத்தலங்களின் தூய்மையைக் குலைக்கும் விதமாக அல்லது அவற்றின் பாதுகாப்புக்கு சவாலாக அமையும் முறையில் நடந்துகொண்டால் முஜாஹிதீன்கள் அவர்களுக்கு எதிராகப் போராடப் பின்நிற்கமாட்டார்கள்.

—உஸ்தாத் ஹிக்மத்யார்
அமீர், ஹிஸ்பே இஸ்லாமி

## திசை திருப்பும் சதி முயற்சி

வளைகுடாவில் ஏற்பட்டுள்ள பிரச்சினை இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின் ஏற்பட்ட மிகவும் கொடூரமான ஒரு பிரச்சினையாகும். பாலஸ்தீனில் வெற்றி பெற்றுவரும் இன்திபாழாவையும் பொதுவாக இஸ்லாமிய எழுச்சிகளையும் முறியடிக்க வென்று அமெரிக்கா அமைத்த ஏகாதிபத்தியமும் ஸியோனிஸ்ட்களும் நயவஞ்சகர்களான ரஷ்யர்களும் செய்த ஒரு சதி முயற்சி இது.

ரஷ்யாவிலிருந்து ஆயிரக்கணக்கில் யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடியமர்த்தப்படுவதையும் முஸ்லிம்களை அவர்களது மார்க்கம் ஆட்சி அதிகாரங்களையும் இல்லாதொழிக்கும் இஸ்ரேலிய ஸியோனிஸ்ட்களின் கொடுமைகளையும் நடைமுறைக முஸ்லிம்களினதும் மனிதாபிமானமுள்ளவர்களதும் கவனத்தையும் திருப்புவது இவ்வாறு சதிகள் வளைகுடாப்பிரச்சினையைத் தோற்றுவித்ததன் இலட்சியமாகும்.

—அஷ்ஷபீல்
நோர்வே பலஸ்தீன சொசைட்டி
ஆதரவாளர் சஞ்சிகை, ரபீ. அவ்வல் 1411

## அந்நிய படைகளை வெளியேற்றுவோம்

வளைகுடாப் பிரச்சினை காரணமாக எமது பல்வேறு துறைகளும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுவிட்டன. குறிப்பாக இதன் காரணமாக ஆப்கானிஸ்தானின் இஸ்லாமியப் போராட்டம் பெருமளவு பாதிக்கப்பட்டுவிட்டது எனலாம். ஈராக்கிற்கும் குவைத்துக்குமிடையே எழுந்துள்ள பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்ப்பதில் முஸ்லிம் அமைப்புகளும் குறிப்பாக இஸ்லாமிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களின் மாநாடும் தீவிரமாக முயற்சிக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்துவோம்......

முஸ்லிம்களிடையே இரு சாரார் போரிட்டுக் கொள்ள முற்பட்டால் அவ்விரு சாராரிடையிலும் சமாதானம் ஏற்படுத்த முயலுங்கள். அதன் பின்னரும் அவர்களில் ஒரு சாரார் மற்றவர்களிடத்து அநியாயமாக நடந்துகொண்டால் இவர்கள் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்றுக்கொள்ளும் வரை நீங்கள் அநியாயக்காரருடன் போரிடுங்கள்... (49:9) என்ற அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கிணங்கவே நாம் ஆப்கான் முஜாஹிதீன்களின் ஒரு பகுதி இராணுவத்தினரை வளைகுடா நாடுகளுக்கு அனுப்பத்தீர்மானித்துள்ளோம். இது எமது மார்க்

(38ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்தமான முறையில் அமைந்த

# ஹிஜாப் கல்வி முயற்சிகளுக்குத் தடையில்லை.

— சகோதரி ஸஃறுல் பௌஸியா றாஸிக் —

சீனன்கோட்டை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயம் அகில இலங்கை மட்டத்தில் ஹிஜாப் போட்டியொன்றை நடத்துவதாக அறிவித்திருந்தது. முஸ்லிம் மாணவிகளுக்கு சிறந்த கல்விப் பயிற்சியோடு நல்ல பல இஸ்லாமிய மார்க்கப் பயிற்சிகளையும் அளிப்பதில் புகழ்பெற்று விளங்கும் இக்கல்லூரியின் அதிபர் அவர்களுடன் அல்ஹஸனாத் சார்பாக நடத்தப்பட்ட பேட்டி இங்கு பிரசுரமாகிறது.

— ஆசிரியர்

● அல்ஹஸனாத் வாசகர்களுக்கு உங்களைப்பற்றி சிறிது அறிமுகஞ்செய்வீர்களா?

நான் கம்பளை ஸாஹிராக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியையும் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் பட்டப் படிப்பையும் முடித்தேன். 1972 முதல் ஆங்கில ஆசிரியராகக் கடமையேற்றேன். கம்பளை ஸாஹிரா கல்லூரியிலும் கண்டி, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள பிரதான பெண் பாடசாலைகளிலும் கற்பித்துள்ளேன்.

1983ம் ஆண்டு கல்வி டிப்ளோமா பயிற்சி நெறியை முடித்த பின் சீனன்கோட்டை முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலயத்தின் அதிபராக நியமனம் பெற்றேன்.

மாணவியாக இருக்கும் போது ஒரு பட்டதாரியாக ஆகி ஒரு பெண்பாடசாலைக்கு அதிபராக வேண்டும் என்பதே எனது குறிக்கோளாக இருந்தது. ஆசிரியர்களும் மாணவிகளும் தத்தமது கடமைகளை பொறுப்புணர்ச்சியுடன் தம் மனச்சாட்சிக்கு விரோதமில்லாத வகையில் தாமே உணர்ந்து சிறப்பாகச் செய்யக் கூடிய ஒரு சூழலை பாடசாலையில் உருவாக்குவதே எனது ஆசை. ஒரு அதிபர் என்ற வகையில் பாடசாலையில் நடைபெறும் சகல விடயங்களும் இஸ்லாமிய ஷரீஅத்துக்கு உடன்பாடான முறையில் நடைபெற வேண்டும் என்பதே எனது பிரதான குறிக்கோள்.

● அகில இலங்கை மட்டத்தில் முதன் முறையாக ஒரு ஹிஜாப் போட்டியை உங்கள் பாடசாலை நடத்துவதாக அறிந்தோம். அதன் நோக்கம் பற்றி விளக்குவீர்களா?

ஆறு வருடங்களுக்கு முன்னர் ஒரு அதிபர் என்ற ரீதியில் பாடசாலை மீலாத் விழாவை ஒழுங்கு செய்யும் பொறுப்பு முதலாவது முறையாக எனக்கு ஏற்பட்டது. வெறுமனே முஹம்மத் (ஸல்) அவர்களின் புகழ்பாடுவதாலோ, விருந்தளித்து மகிழ்வதாலோ, அன்றி வேறு போட்டிகளை வைப்பதாலோ மாத்திரம் பெருமானார் (ஸல்) அவர்களின் அன்பைப் பெற முடியாது என்பதே எனது திடமான நம்பிக்கை. பெண்கள் அன்னை பாத்திமா (றழி) அன்னை ஆயிஷா (றழி), போன்றோரின் வழிநடப்பதையே பெருமானார் அவர்கள் பெரிதும் விரும்புவார்கள். இதனைக் கருத்திற் கொண்டே நாம் வருடாந்தம் பெருமானார் (ஸல்) அவர்களின் பிறந்ததினத்தில் இஸ்லாமியப் பெண்களின் நிலை பற்றி எமது உயர்வகுப்பு மாணவிகளுக்கும் தாய்மார்களுக்கும் பயன் மிக்க கருத்தரங்குகளை நடாத்தினோம். கடந்த வருடத்திலிருந்து பர்தாவை, கண்ணுக்கான கடமைகளை செயல் ரீதியில் செய்து காட்டும் பயிற்சிப் பாசறைகளையும், செயற்திட்டங்களையும் நடாத்திவருகிறோம். இவற்றுடன் மேலதிகமாக இவ்வருடம் இந்த ஹிஜாப் போட்டியை அறிமுகம் செய்தோம். முஸ்லிம் பெண்கள் மத்தியில் ஹிஜாப் பற்றிய எண்ணத்தை மேலும் வளர்ப்பதும், அதன் மூலம் வசதியானதும் ஒழுக்கமானதுமான ஒரு ஹிஜாபைத் தெரிவு செய்து அதனை எமது பாடசாலைச் சீருடையாக ஆக்க வேண்டும் என்பதுமே இப்போட்டியை வைத்ததன் பிரதான நோக்கமாகும்.

● போட்டி பற்றிய விபரம், இது வரையுள்ள முன்னேற்றம் பற்றிச் சற்றுக் கூறுவீர்களா?

ஹிஜாபைத் தைத்து அனுப்புவதற்கு போட்டியாளர்களுக்கு இலவசமாகத் துணி வழங்குவதற்கு நான் திட்டமிட்டிருந்தேன். என்றாலும் துரதிஷ்டவசமாக உரிய வேளையில் தேவையான அளவு துணியைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. போட்டியாளர்கள் முதலில் தாம் தைத்து அனுப்பவுள்ள ஹிஜாபின் மாதிரி உருவை வரைந்து அனுப்ப வேண்டும் என நாம் கேட்டிருந்தோம். வேறு எவ்விதமான நிபந்தனைகளையும் இப்போட்டிக்கு நாம் விதிக்கவில்லை. இதுவரை 20 போட்டியாளர்கள் விண்ணப்பித்திருந்தனர்; இவற்றுள் மாதிரி திருப்தியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சு அமையால் விண்ணப்பங்கள் பிரசுரிக்கப்பட்டன. மீதிப் போட்டியாளர்களிடம் அவர்கள் வரைந்தனுப்பிய மாதிரிகளைய வெள்ளைநிறத் "செலஞ்சர்" துணியில் ஹிஜாபைத் தைத்து தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டிருந்தோம். போட்டியாளர் யாவரும் வெளியூர்களைச் சேர்ந்தவர்கள். இதுவரை எவருமே பதில் தரவில்லை. தமக்கு இலவசமாகத் துணி வழங்கப்பட்டால் தாம் பங்குபற்றுவதாக பேருவளையைச் சேர்ந்த பலரும் அபிப்பிராயப் பட்டனர்.

இன்ஷா அல்லாஹ் அடுத்த வருடமும் இப் போட்டியை நடாத்த எண்ணியுள்ளோம். அப்போது துணியை இலவசமாக வழங்க வகை செய்வதுடன் மேலும் விளம்பரம் செய்து சிறப்பாக நடாத்த ஒழுங்கு செய்யப்படும்.

● பணிதமான போட்டிகளை நடாத்த முடியுமாக இருக்கும் போது நீங்கள் இந்தப் போட்டிக்கு முக்கியத்துவம் கொடுக்கக் காரணம் என்ன?

● பெருமானார் (ஸல்) அவர்களின் பிறந்ததினத்தை நினைவூட்டும் மகத்தான ஒரு சந்தர்ப்பத்தை வெறுமனே ஒருவரின் பேச்சு, பாட்டுத் திறன்களை வளர்க்கும் சந்தர்ப்பமாக மட்டும் பயன்படுத்த வேண்டியதில்லை. எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் இத்தகைய திறமைகளை வளர்ப்பதற்கு புறம்பான பல்வேறு போட்டிகள் வருடாந்தம் நடைபெறுகின்றன. எனவே இத்தகைய சந்தர்ப்பத்தை நாம் ஒவ்வொருவருக்கும் ஆத்மீக அபிவிருத்தியை ஊக்குவிக்கும் சந்தர்ப்பமாகவும், அவர்களை பூரண முஸ்லிமாக மாற்றும் சந்தர்ப்பமாகவும் பயன்படுத்த வேண்டும் என்று கருதினோம்.

● தற்போது பாடசாலை அதிபராகவும், முன்னர் வேறு பல பாடசாலைகளில் கற்பித்த அனுபவம் பெற்றவர்களாகவும் உள்ள நீங்கள் பாடசாலை ஆசிரியைகள், மாணவிகள் ஹிஜாப் அணிவது பற்றி ஆசிரியைகளிடமும், மாணவிகளிடமும் நிலவும் முக்கியமான சாதக, பாதகமான கருத்துக்களைக் கூறுவீர்களா?

● ஒரு ஆசிரியை என்றவகையில் நான் கண்டி, கம்பளை, கொழும்பு ஆகிய இடங்களிலுள்ள பிரபலமான பாடசாலைகளில் கற்பித்துள்ளேன். அன்று நான் இஸ்லாம் கற்பிக்காத வேளையிலும், முஸ்லிம் மாணவர்களை எமது தனித்துவத்தைப் பேணி நடக்குமாறு தூண்டியுள்ளேன். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் ஹிஜாப் அணிவதில் தமக்கு விருப்பம் இருப்பதாகவும், தமது வழிகாட்டிகள் அதனை நடைமுறைப்படுத்தி தமக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டும் என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். இவ்வகையில் ஒரு அதிபர் என்ற ரீதியில் எமது ஆசிரியர்கள், மாணவர் ஆகியோர் மத்தியில் ஒரு சிறந்த முன்மாதிரியாக இருந்து அவர்களையும் ஏனையோர்க்கு முன்மாதிரியானவர்களாக மாற்றுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதையிட்டு திருப்தியடைகிறேன். சிலவேளை ஹிஜாபின் அமைப்பும், உபயோகிக்கும் துணிவகையும் உடல்நலத்திற்கு பாதகமாக அமையலாம். எமது இந்த ஹிஜாப் போட்டியின் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்று இக்குறைபாட்டை நிவர்த்திப்பதே. எமது பாடசாலையைப் பொறுத்தவரையில் மாணவர்களின் செயற்பாடுகளுக்கு ஹிஜாப் ஒரு தடையாக அமையமாட்டாது.

● முஸ்லிம் பெண்களின் தற்போதைய கல்வி நிலைபற்றி உங்கள் கருத்து என்ன?

● கடந்த காலங்களை விட முஸ்லிம் பெண்கள் இன்று கல்வித் துறையில் அதிக அக்கறைகாட்டி வருகின்றனர். குறிப்பாக ஆண்களை விட பெண்கள் கல்வித் துறையில் திறமைசாலிகளாக உள்ளனர் எனலாம். ஆம், பெண் பாடசாலைகளின் பரீட்சை முடிவுகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதனை நாம் தெளிவாகக் காணக் கூடியதாக உள்ளது.

● ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே விதமான கல்வித்திட்டமே நம் நாட்டில் உள்ளது. இதுபற்றி உங்கள் கருத்தென்ன?

● ஸ்ரீ லங்கா போன்ற ஒரு நாட்டில் வாழும் நாம் ஆண்களுக்கும் பெண்களுக்கும் புறம்பான கல்வித் திட்டங்களை எதிர்பார்க்க முடியாது. நாம் இரு பாலாரையும் ஒரே பொதுப் பரீட்சைக்கே தயார் செய்கின்றோம். எனவே பொதுவான கல்வித் திட்டம் ஒன்று போதிக்கப்படுவதில் பிழையில்லை.

● பெண்களுக்கென்று தனியான கல்வித்திட்டமில்லாதபோது நமது மாணவிகள் எந்தெந்த துறைகளில் கற்பது மிகவும் பொருத்தமும் எனக் கருதுகிறீர்கள்?

● மாணவர்களை பொதுப்பரீட்சைக்கு தயார் செய்வதுடன் மாத்திரமல்லாமல், அவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய துறைகளிலும் அவர்களுக்கு பயிற்சியளிக்க வேண்டும். பாடசாலை மாணவிகளைப் பொறுத்த மட்டில் அவர்களுக்கு நடைமுறை வாழ்க்கைக்கு அவசியமான மனையியல், ஆடை தயாரிப்பு, உடற்கல்வி, முதலுதவி முதலானவற்றைக் கற்கும் சந்தர்ப்பம் வகுப்பறைக் கற்பித்தல் மூலம் கிடைத்து விடுகிறது.

மேலும் பெண்களுக்கு சகல துறைகளிலும் பயிற்சி அளிக்கக் கூடிய ஒரு சிறந்த இடமாக பெண்சாரணிய இயக்கம் உள்ளது. முஸ்லிம்களுக்கு இது பொருத்தமில்லை என்பது சிலரது அபிப்பிராயம். ஆனால் நாம் எமது சொந்த அனுபவத்தில் இதன் நற்பயன்களைக் கண்டிருக்கின்றோம். எமது பாடசாலை பெண் சாரணியர்கள், பெண் சாரணியர்களுக்கான வருடாந்த தேசிய பாசறையில் பங்கு பற்றியபோது அவர்களுக்கு நோன்பு பிடிக்க,

(29ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌலானா மௌதூதி

# அரசாங்கத்துக்குக் கட்டுப்படல்

மேலே குறிப்பிட்ட வகையில் அமைந்த கிலாபத் நிர்வாக அமைப்பைக் கொண்டு நடத்தும் பொறுப்பை நிறைவேற்ற வேலை செய்யும் அரசுடன் ஒத்துழைத்து இஸ்லாம் அனுமதித்துள்ள துறைகளில் மட்டும் அதற்குக் கட்டுப்பட்டு நடப்பது மக்களின் கடமையாகும். மார்க்கம் அனுமதிக்காத விஷயங்களில் அதாவது அல்லாஹ்வின் ஷரீஅத் சட்டங்களுக்கு மாறுபட்ட விஷயங்களில் அரசுக்குக் கட்டுப்படக் கூடாது. பின்வரும் அல்குர்ஆன் வசனங்கள் இக்கருத்தை வலியுறுத்துகின்றன.

"நபியே! விசுவாசங்கொண்ட பெண்கள் உங்களிடம் வந்து அல்லாஹ்வுக்கு எதையும் இணை வைப்பதில்லை, திருடுவதில்லை, விபசாரம் செய்வதில்லை, தங்களின் குழந்தைகளைக் கொலைசெய்வதில்லை, தங்களது கை கால்களுக்கிடையில் பாபம் செய்து கற்பனையாக அவதூறு கூறுவதில்லை அனுமதிக்கப்பட்ட காரியங்களில் உங்களுக்கு கட்டுப்படாதிருப்பதில்லை என்று உங்களிடம் வாக்குறுதி செய்தால் அவர்களின் வைஅத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ளுங்கள்...... (60:12)

நல்ல விஷயங்களிலும் பயபக்தியானவற்றிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள், பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவேண்டாம்... (5:2)

அவர்களில் யாதொரு பாவியையோ நன்றிகெட்டவனை (காபிரை)யோ நீங்கள் பின்பற்றாதீர்கள்

(76:24)

## 10-ஷூரா-ஆலோசனை

அரசின் அலுவல்கள் முதலில் அதன் அதிகாரமான அமைப்பை ஏற்படுத்தி; அடுத்து அரசின் தலைவரையும் உலுல் அம்ர்—பொறுப்பான அதிகாரிகளையும் தெரிவு செய்வதோடு ஆரம்பமாக வேண்டும் சட்டமியற்றல் நிர்வாகம் செய்தல் போன்ற விஷயங்களில் நேரடியாக மக்களிடம் ஆலோசனை பெறல் அல்லது அவர்களிலிருந்து முறைப்படி தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளுடன் ஆலோசனை செய்தல் என்ற ஏதாவது ஒருவழியில் மும்மின்களின் கருத்தைப்பெற்று முடிவெடுப்பது கட்டாயமாகும்.

அவர்களது அலுவல்கள் அவர்கள் மத்தியில் கலந்து பேசித் தீர்மானிக்கப்படும் (42:38) என்பது அல்குர்ஆனின் வழிகாட்டுதலாகும்.

## 11-உலுல் அம்ர்களின் தகைமைகள்

அரசின் நிர்வாகப் பணிகளில் துணைபுரியும் அதிகாரிகளைத் தெரிவுசெய்யும் போது பின்வரும் தகைமைகள் கவனிக்கப்படவேண்டும்.

1. கிலாபத் அமைப்பின் அவர்களிடம் ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களைப் பற்றிய நம்பிக்கையும் அறிவும் உடையோராயிருத்தல். ஏனெனில் எந்தவொரு திட்டத்தையும் அதன் நடாத்தும் பொறுப்பை அந்தத்திட்டத்தில் நம்பிக்கையில்லாதவர்களிடம் ஒப்படைப்பது முறையற்றதாகும்.

"விசுவாசிகளே! நீங்கள் அல்லாஹ்வுக்கு அடிபணியுங்கள் அல்லாஹ்வுடைய தூதருக்கும் உங்களில் உள்ள அதிகாரிகளுக்கும் அடிபணிந்து நடவுங்கள்...

(4:59)

விசுவாசிகளே உங்களை(ப் போன்ற விசுவாசிகளை)யன்றி (விசுவாசிகள் அல்லாதவர்களை) உங்களுக்கு அந்தரங்கமானவர்களாக நீங்கள் ஆக்கிக் கொள்ளாதீர்கள்... (3:118)

விசுவாசிகளே! உங்களில் யுத்தம் புரிபவர்கள் யாரென்பதையும் அல்லாஹ்வையும் அவனுடைய தூதரையும் விசுவாசிகளையும் தவிர (வேறு எவரையும் தங்களின்) ஆப்த நண்பர்களாக (உங்களில்) எவரும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதையும் அல்லாஹ் (உங்களைச் சோதித்து) அறியாமல் நீங்கள் விட்டுவிடப்படுவீர்கள் என்றெண்ணிக் கொண்டீர்களா?... (9:16)

2. அவர்கள் அக்கிரமம் புரிபவர்களாகவோ பாவிகளாகவோ தங்கள் பொறுப்புக்களைப் பற்றி உணர்வில்லாதோரும் அல்லாஹ்வை மதிக்காமலும் அவனது சட்டதிட்டங்களைப் பேணி நடக்காதோருமாக இருக்கக் கூடாது. அவர்கள் உண்மை விசுவாசிகளாகவும் எப்போதும் நல்ல காரியங்களையே செய்யும் இறைபக்தியுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். இப்படியான தகைமைகளில்லாத ஓர் அக்கிரமக்காரன் அல்லது பாவியிடம் ஒரு நிர்வாகப் பொறுப்பு அல்லது தலைமைத்துவம் ஒப்படைக்கப்பட்டால் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் அது செல்லுபடியாகாது.

இப்ராஹீமை அவருடைய இறைவன் பல கட்டளைகளையிட்டுச் சோதித்தபோது அவர் அவை

அனைத்தையும் நிறைவேற்றினார் (ஆகையால்) நிச்சயமாக நான் உங்களை மனிதர்களுக்குத் தலைவராக ஆக்குகிறேன் என்று (அல்லாஹ்) கூறினான். அதற்கு (இப்றாஹீம்) எனது சந்ததிகளையுமா (தலைவர்களாக ஆக்குவாய்) என்று கேட்டார். (அதற்கு உங்கள் சந்ததிகளில்) அக்கிரமக்காரர்களுக்கு எனது (இந்த) உறுதிமொழி சாராது என்று கூறினான்... (2:124)

''ஈமான் கொண்டு ஸாலிஹான அமல்களைச் செய்பவர்களை பூமியில் குழப்பம் புரிபவர்களைப் போல நாம் ஆக்குவோமா அல்லது பயபக்தியோடு நடப்பவர்களைப் பாவிகளைப் போல நாம் ஆக்குவோமா?'' (38:28)

''.....எம்மைப்பற்றிய நினைவிலிருந்து எவனுடைய இதயத்தை நாம் திருப்பிவிட்டோமோ (அதனால்) எவன் தனது ஆசைகளைப் பின்பற்றி நடக்கிறானோ அவனுக்கு நீங்கள் கட்டுப்படாதீர்கள். அவனுடைய நடவடிக்கை எல்லை மீறியதாகும் (18:28)

''பூமியில் விஷமம் செய்வோரும் நலம்புரியாதோருமான (அல்லாஹ்வின் சட்டங்களை மதிக்காது) வரம்பு மீறி நடப்பவர்களின் கட்டளைக்கு நீங்கள் கீழ்ப்படியாதீர்கள் (26:151—152)

அல்லாஹ்விடம் உங்களில் மிக்க கண்ணியத்துக்குரியோர் உங்களில் பயபக்தி மிக்கோரேயாவர் (49:13)

3. அவர்கள் மந்தபுத்தியுள்ளவர்களாகவும் மடையர்களாகவுமிருக்கக்கூடாது. மாறாக நிர்வாகத்தின் பொறுப்புகளைக் கொண்டு நடத்தவும் பொறுப்புகளை உரிய முறையில் செய்யவும் உதவும் நல்ல விளக்கமும் நல்லறிவும் உடல், உள ஆரோக்கியமும் உள்ளவர்களாக அவர்கள் இருத்தல்வேண்டும்.

''(அனாதைகளின் சொத்துக்களுக்குப் பொறுப்பாளர்களாகவுள்ள நீங்கள் அவர்களில்) புத்தி குறைவானவர்களிடம் உங்கள் பொறுப்பிலுள்ள (அவர்களின்) சொத்துக்களை ஒப்படைத்து விடாதீர்கள். (4:5)

எம்மீது அவருக்கு எப்படி அரசுரிமை ஏற்பட முடியும். அவரைவிட நாங்கள் தான் அரசுபுரியும் தகுதி மிக்கவர்களாக இருக்கின்றோம். அரசாட்சிக்கு உதவும் செல்வ வளமும் அவருக்குக் கொடுக்கப்படவில்லையே என்று அவர்கள் கூறினர். அதற்கவர், நிச்சயமாக அல்லாஹ் அவரை உங்களை விட உயர்வாகத் தெரிவு செய்துள்ளான் மேலும் அறிவிலும் உடலிலும் உங்களை விட அவரை விசாலமானவராக்கியிருக்கிறான் என்று கூறினார்..... (2:247)

அவரது அரசை நாம் பலப்படுத்தி அவருக்கு ஞானத்தையும் பிரச்சினைகளுக்கு அறுதிய தீர்வு காணும் திறமையையும் கொடுத்தோம் (38:20)

''என்னை பூமியிலிருந்து கிடைக்கும் பொக்கிஷங்களுக்குப் பொறுப்பாளியாக ஆக்குங்கள் ஏனெனில் நான் அறிவுடையோனாகவும் (அவற்றைப்) பாதுகாக்கக் கூடியவனாகவுமிருக்கிறேன் என்று (யூசுப் அலை) கூறினார். (12:55)

அதனை (அல்லாஹ்வின்) தூதரிடமும் அவர்களுடைய அதிகாரிகளிடமும் தெரிவித்திருந்தால் விஷயங்களை ஆராய்ந்தறியக் கூடியவர்கள் (அதில் உள்ள உண்மையை) அறிந்து கொண்டிருப்பர். (4:83)

அறிந்தவர்களும் அறியாதவர்களும் சமமாவார்களா என்று நீங்கள் கேளுங்கள் (39:9)

4. பொறுப்புக்களை நம்பிக்கையோடும் பண நிறைவோடும் ஒப்படைக்க முடிந்த வகையில் நம்பிக்கைக் குரியவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும்.

நீங்கள் உங்கள் பொறுப்புக்களை அவற்றுக்கு ஏற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். (4:58)

● மௌலவி ஏ. எல். எம். இப்றாஹீம்

வாராந்த குர்ஆன் விளக்கம் பயான் நிகழ்ச்சி
77, தெமட்டகொடை வீதி, கொழும்பு-9

ஜமாஅதே இஸ்லாமி
தலைமையகத்தில்

ஒவ்வொரு வியாழக்கிழமை பின்னேரம்
மஃரிப் தொழுகை முதல் இஷா வரை

தகுதிவாய்ந்த உலமாக்களால்
உரைகள் நிகழ்த்தப்படுகின்றன!

அல்குர்ஆனின் அருட் கருத்துக்களை அறிந்துகொள்ள
அனைவரும் வாருங்கள்!

மறந்து விடாதீர்கள்!
உங்கள்
சந்தாவை
புதுப்பித்துக்
கொள்ளுங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் 6ம் பக்கத்தொடர்

# இஸ்லாம் விரும்பும் ஆரோக்கியமான குடும்ப அமைப்பு

—மௌலானா மௌதூதி (ரஹ்)

கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது மனைவியின் கடமையாக்கப்பட்டிருப்பதால் அவ்வவன் தனது சுதந்திர அதிகாரங்களை குடும்ப தலைவின் பக்கம் செயல்படுத்தும்படி ஏவப்படுகிறான். அத்தோடு மனைவியை அன்போடும், பண்போடும் இனிமையான பாசத்தோடும் நடத்தும்படி அவனுக்கப்படுகிறான். இஸ்லாம் திருமண பந்தத்தை உறுதியானதாக்குவதோடு அந்த பந்தமான உறவை குறைந்த அளவு நீடிப்பதற்கு எந்த அளவு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவோ அந்த அளவு அதை இனிமையாகப் பாதுகாப்பதையே குறிக்கோளாக கொண்டுள்ளது. இந்த சாத்தியக்கூறு வலிமையிழந்து, மறைந்து போகும்போது அது அனுக்கு விவாகரத்து செய்யும் உரிமையையும் பெண்ணுக்குத் தனித்திருக்கும் உரிமையையும் வழங்குகின்றது. மணவாழ்க்கை விவேசம் நிறைந்த துன்ப மயமானதாகவும், தொல்லையும் தொந்தரவும் நிறைந்ததாகவும் மாறும்போது விதிப்பந்தனைகளின் கீழ் இஸ்லாமிய நீதி மன்றங்களுக்கு திருமணத்தை செல்லுபடியாகாதவென்றாக்கும் அதிகாரத்தை வழங்குகின்றது.

## உறவினர்களும் அண்டை அயலவர்களும்

வரையறுக்கப்பட்ட குடும்ப வட்டத்திற்கு அப்பால் போதுமான அளவு பரந்து காணப்படும் சமூக எல்லை பந்த உறவும் இரத்த உறவுமுறையும் ஆகும். பொதுவான பெற்றோர்கள் அல்லது தாய்வழி அல்லது தந்தைவழி வந்த சகோதரர்கள், சகோதரிகள், உறவினர்கள் ஆகியோரை பரஸ்பர அன்பும், பாசமும் கொண்டு ஒருவருக்கொருவர் உதவி ஒத்தாசையாக இருந்து கொள்ளும்படி இஸ்லாம் பணிக்கின்றது. திருமறையின் பல இடங்களிலும் 'ஸவில் குர்பா' (நெருங்கிய உறவினர்கள்) களை நல்ல முறையில் நடத்தும்படி கூறப்பட்டுள்ளது. பெருமானார் (ஸல்) அவர்களினால் கூறப்பட்டுள்ள ஹதீஸ்களில் ஒன்றில் ஒருவரின் உறவினர்களை நல்ல முறையில் (ஸிலதுர்ரஹ்ம்) நடத்துவதைப்பற்றி வலியுறுத்திக் கூறப்பட்டு உயரிய நற்பண்புகளில் ஒன்றாகவும் கணிக்கப்பட்டுள்ளது. ஒருவன் தனது உறவினர்களைப் பகைத்து புறக்கணித்தும், அலட்சியமாகக் கருதியும் நடக்குமளவாயின் அத்தகையவனை இஸ்லாம் விரும்புவதில்லை. ஆனால், ஒருவர் தனது உறவினர்களின்பால் பாரபட்சமுடையவராகவும், வலிமையிழந்தவராகவும் நடந்துகொள்ள வேண்டுமென்று இஸ்லாம் கூறுகின்றது என்பது பொருளல்ல; ஒருவரின் உறவினரின் பக்கம் காட்டப்படும் அத்தகைய ஒருதலைச் சார்பு அல்லது பாரபட்சம், இஸ்லாம் இழிவாகக் கருதும் ''ஜாஹிலிய்யத்'' எனும் அறியாமையின் வந்து முடியும் அநீதியும் இஸ்லாத்திற்கு விரோதமான செயலுமாகும். இதே போன்றே ஒரு அரசாங்க அதிகாரி அல்லது பொது மக்களின் தர்மகர்த்தா (TRUSTEE) பொது மக்களின் பணத்தைக் கொண்டு தனது உறவினர்களுக்கு உதவி புரிவதோ அல்லது காரியஸ்தர் தீர்ப்புகளில் தனது உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் சாதகமாகத் தீர்ப்பு வழங்குவதையோ இஸ்லாம் முற்றிலும் எதிர்க்கின்றது. இத்தகைய நடத்தை இஸ்லாத்திற்கு முரண்பட்ட பாவமான காரியமாகும், நீதி பாரபட்சம் என்ற எல்லைகளைத் தாண்டாது, ஒருவர் தனது சொந்தச் செலவைக்கொண்டு தனது உறவினர்களை நியாயமான முறையில் நடாத்த வேண்டும் என்பது இஸ்லாத்தின் கட்டளையாகும்.

### அயலார்

உறவினர்களையடுத்து அண்டை அயலார்கள் இடம் பெறுகிறார்கள். திருமறை இவர்களை மூன்று கூறுகளாக வகுத்துள்ளது. (1) சொந்தக்காரர்களாயுள்ள பக்கத்து வீட்டார் (2) அந்நிய அண்டை வீட்டார் (3) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒருவரோடு வசிப்பதற்கு அல்லது சில காலத்திற்கு பிரயாணம் செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்ற தற்செயலான அல்லது தற்காலிகமான அண்டை வீட்டார். இந்த மூன்று பிரிவினர்களும் சகோதரத்துவ உணர்வு, அன்பு பாசம், நியாயம் என்பவைகளைக் கொண்டு மரியாதையுடன் உபசரிக்கப்பட வேண்டியவர்களே. ஒருவரின் சொத்தில் அவர்களுக்குப் பங்கு கொடுக்க வேண்டி ஏற்படுமோ என்று அச்சம் ஏற்படும் அளவுக்கு அண்டை வீட்டாரின் உரிமைகளை அவ்வளவு உயர்த்தி வலியுறுத்தி தனக்கு வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலம் கூறப்பட்டதாக பெருமானார் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

''எவனுடைய தொல்லைகளிலிருந்து அவனுடைய அண்டை வீட்டான் பாதுகாப்புப் பெறவில்லையோ, அத்தகையவன் இஸ்லாத்தில் நம்பிக்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டவனல்ல" என்று பெருமானார் (ஸல்) பிரிதொரு ஹதீஸில் கூறியுள்ளார்கள். மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள், "அண்டை வீட்டான் பசித்திருக்க வயிறு புடைக்க உண்பவன் உண்மையான விசுவாசியல்ல" என்பதாக. தொழுகையை தேமமாக நிலைநிறுத்தி அடிக்கடி நோன்பு பிடித்து, அடிக்கடி தர்மம் கொடுத்து வரும், ஆனால், மற்றவர்களைத் தூற்றும் ஒரு பெண்ணைப் பற்றி பெருமானார் (ஸல்) அவர்களிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது. அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அண்டை வீட்டாரைத் துயரத்தில் ஆழ்த்தும் அத்தகைய பெண்ணின் ஒதுங்கும் இடம் நரகமேயாகும் என்று கூறினார்கள். மேலும் தொழுகை, நோன்பு, தர்மம் போன்ற நற்பண்புகளைக் கொண்டிராத ஆனால் தனது அண்டை வீட்டாருக்குத் தொல்லை கொடுக்காத ஒரு பெண்ணைப் பற்றி கூறப்பட்டபோது சுவனலோகம் அப்பெண்ணுக்கு வெகுமதியாகக் கிடைக்குமாம் என்றும் பெருமானார் (ஸல்) கூறினார்கள்.

## புதைத்து விடுங்கள்

ஒரு முஸ்லிம் தனது பிள்ளைகளுக்கு பழவகைகள் கொண்டு வரும் போதெல்லாம் ஒன்று அவர் தனது அண்டை வீட்டார்களுக்கு சிலவற்றைப் பரிசாக அனுப்ப வேண்டும் அல்லது குறைந்த அளவு அதன் தோல்களை வீட்டுக்கு வெளியில் அல்லது வீட்டுக்கு முற்றத்தில் தெரியும் வண்ணம் வீசக்கூடாது. ஏனெனில் அதனால் அயலவர்கள் மனம் நோகாமலிருக்கலாம் என்பதோடு அந்தப் பண்பை அல்லாஹ் வலியுறுத்திக் கூறியுள்ளார்கள்.

இது தப்ரானி என்ற ஹதீஸ் விரிவுரையாளரினால் விவரிக்கப்பட்டுள்ள ஒரு விரிவான ஹதீஸின் ஒரு பகுதியேயாகும். அதாவது பெருமானாரின் தோழர்களில் ஒருவர் பின்வருமாறு விசாரித்தார் (இறைதூதர் அவர்களே) ஒருவனுக்கு தனது அயலவர்கள் மீதுள்ள உரிமை என்ன?" என்று வினவினார். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள் பின்வருமாறு பதிலுரைத்தார்கள். "உங்கள் பக்கத்து வீட்டான் கடன் கேட்டால் நீங்கள் கொடுக்க வேண்டும். அவர் உங்கள் உதவியை நாடினால் நீங்கள் அவருக்கு உதவி புரியவேண்டும். அவர் நோய்வாய்ப் பட்டிருந்தால் அவரைப் போய் சுகம் விசாரிக்கவேண்டும். அவர் தேவையுடையவராயிருந்தால் நீங்கள் அவருடைய தேவையைப் பூர்த்தி செய்ய முயற்சிக்க வேண்டும். அவருக்கு மகிழ்ச்சி கிட்டினால் அதை நீங்கள் பாராட்ட வேண்டும். அவருக்கு ஏதும் ஆபத்தும் நேரிட்டால் ஆறுதல் வழங்குவது உங்கள் மீது கடமையாகும். அவர் இறந்து விட்டால் அவரது சடங்கிரியையில் கலந்துகொள்ள வேண்டும். அயல் வீட்டாரின் காற்றோட்டத்தைத் தடுக்கும் வண்ணம் நீங்கள் உங்கள் வீட்டுச் சுவர்களை அந்த அளவுக்கு உயர்த்திக் கட்டிவிடக்கூடாது. அவர் இதை விரும்பினாலும் கூட நீங்கள் இதைச் செய்யவே கூடாது. உங்கள் வீட்டில் சமைக்கப்படும் சுவையான உணவின் வாசனையால் அண்டை வீட்டாரை ஏங்கச் செய்து விடக்கூடாது. அப்படி சமைத்துவிட்டால் அவருக்கு ஒரு பகுதியை அனுப்பிவிடுங்கள் உங்கள் வீட்டுக்கு. நீங்கள் பழ வகைகள் கொண்டு வந்தால் அவற்றின் சிலவற்றையும் பக்கத்து வீட்டாருக்குக் கொடுங்கள். இல்லை என்றால் அயல் வீட்டார் காணாதவாறு அவற்றை மறைத்து வையுங்கள். அத்தோடு அதே பழங்களை உங்கள் பிள்ளைகள் வெளியில் எடுத்துச் செல்லாதவாறு கவனமாக இருங்கள். ஏனெனில் உங்கள் அண்டை வீட்டுப் பிள்ளைகள் அதனைக் கண்டு ஏமாற்றமடையலாம்." என்பதே அந்த ஹதீஸ்.

ஒரு சந்தர்ப்பத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். "ஒரு மனிதனை அவனது அண்டை வீட்டான் நல்லவனாகக் கருதினால் அவன் நல்ல மனிதனாகவும், தீயவனாக கருதினால் அவன் தீய மனிதனாகவும் ஆகிவிடுகிறான்." என்பதாக, பக்கத்து வீட்டார்களை எவ்வளவு மேலாக மதிக்க வேண்டுமென்றும், அவர்களோடு எவ்வளவு இணக்கமாக நடந்துகொள்ள வேண்டுமென்றும், அவர்களுக்கு எவ்வகையிலும் துன்பம் கொடுக்கக்கூடாதென்றும் மேற்கூறிய ஹதீஸ்களிலிருந்து எமக்கு நன்றாக விளங்குகின்றது.

சுருங்கக்கூறின், அண்டை அயலவர்கள் எல்லோரும் அன்பாகவும் ஒற்றுமையோடும் நடந்துகொள்ள வேண்டுமென்றும், ஒவ்வொருவரின் மனப் புண்களிலும் துன்ப துயரங்களிலும் மகிழ்ச்சிகளிலும் பங்குகொள்ள வேண்டுமெனவும் இஸ்லாம் வேண்டுகின்றது. மற்றவர் தம் உயிர், பொருள், மரியாதை, சொத்து என்பவைகளைப் பாதுகாக்கும் அளவுக்கு அயலவர்களுக்கு மத்தியில் அவர்கள் சமூக உறவுகளையும், தொடர்புகளையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இஸ்லாம் ஏவுகின்றது. ஒரு சமூகத்தில் வாழும் இரண்டு குடும்பத்தவர் ஒரு சுவரினால் மாத்திரம் இருகூறாகப் பிரிக்கப்பட்டு, பல வருட காலமாக ஒருவரிடத்து ஒருவர் மதிப்பையும் நம்பிக்கையையும், அக்கறையும், அனுதாபமும் கொள்ளாதிருப்பார்களாயின் அந்த வகை சமூகம் ஒருபோதும் இஸ்லாத்திற்கு உட்பட்டது என்று கூற முடியாது.

## பரஸ்பர உறவு

இவைகளுக்கு அடுத்தபடியாக வருவது முழு சமூகத்தையும் பூரணப்படுத்தும் பரந்த உறவுமுறை பட்டதாகும். பொதுவான எமது சமூக வாழ்க்கையை வகுக்க இஸ்லாம் காட்டும் விஸ்தாரமான கோட்பாடுகள் பின்வருமாறு:

( 28 பக்கம் பார்க்க )

(8ம் பக்கத் தொடர்ச்சி)

யானைக் கூட்டமும் கடந்து செல்ல அவர்களிடம் வந்து பார்த்தபோது அவர்கள் அடக்கமுடியாமல் அழுது கொண்டிருந்தார்கள். இறைதூதர் (ஸல்) அவர்கள் தமது புனிதக் கரங்களாலேயே ஒரு போர்வையின் துணியால் அவர்களுடைய கவலையைத் துடைத்துவிட்டு அருகில் நின்றுகொண்டிருந்தார்கள். அவர்கள் நீண்டநேரமாக அடக்க முடியாமல் அழுதுகொண்டேயிருந்தார்கள்.

## கஞ்சத்தனம் வேண்டாம்

8. உங்கள் மனைவியின் சகல தேவைகளுக்கும் தாராளமாக வசதி செய்து கொடுங்கள்.

இவ்விடயத்தில் கஞ்சத்தனம் காட்டாதீர்கள். உங்கள் குடும்ப அங்கத்தவர்களுக்காக உங்கள் வருமானத்தை (சட்டபூர்வமான) உழைப்பை செலவிடுவதில் மகிழ்ச்சியும் ஆறுதலும் அடையுங்கள். நீங்கள் உங்கள் மனைவிக்கு உணவு, உடை எல்லாவற்றையும் வழங்கக் கடமைப்பட்டுள்ளீர்கள். அக்கடமையைச் சரியாக நிறைவேற்றுவதற்காகப் போதியளவு பணம் சம்பாதிக்கச் சுறுசுறுப்போடு உழைப்பதும் ஒரு கணவனின் மிக மகிழ்ச்சிகரமான கடமையாகிறது. இக்கடமையைத் திறந்த மனதுடனும் உற்சாகத்துடனும் நிறைவேற்றும் ஒரு இன்பகரமான சுகமாயும் அருட்கொடைகளும் வெகுமதியாகக் கிடைக்கும். இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறுவதாவது:

“நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் ஒரு தீனாரையும், ஓர் அடிமையை விடுதலை செய்ய மற்றொரு தீனாரையும், ஒரு யாசகனுக்குத் தர்மமாக மற்றொரு தீனாரையும், செலவு செய்து விட்டு உமது குடும்பத்தாரின் செலவுக்காக ஒரு தீனாரை வைத்துக்கொள்வதாகக் கருதுவோம். இவை அனைத்தும் மிக உயர்ந்த வெகுமதியையும் அல்லாஹ்வின் அருட்கொடைகளையும் தரக்கூடிய தீனார் நீங்கள் உங்கள் குடும்பத்தாருக்குச் செலவிட்ட தீனாராகும்.” (முஸ்லிம்)

## கற்றுக் கொடுங்கள்

9. சன்மார்க்கத்தில் விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களையும் பழக்கவழக்கங்களையும், உங்கள் மனைவிக்குக் கற்றுக் கொடுங்கள். அவள் இஸ்லாமிய ஒழுக்கநெறிகளைப் பின்பற்றித் தனது வாழ்க்கையைப் பண்பட்டதாக்கிக்கொள்ள வழிகோலுங்கள். அவள் ஒரு நல்ல மனைவியாகவும் நல்ல தாயாகவும், பரிசுத்தமான பக்தியுடையவளாகவும் பரிணமிக்கக்கூடியதாக அவளை இஸ்லாமிய வாழ்க்கை முறையில் பயிற்றுவித்து உருவாக்கச் சகல வழிகளாலும் முயலுங்கள்.

அல்லாஹ் கூறுகின்றான்:

“விசுவாசிகளே! உங்களையும் உங்கள் குடும்பத்தார்களையும் நரக நெருப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுங்கள்.”

இறைதூதர் (ஸல்) அவர்கள் வெளியில் சன்மார்க்க சட்டதிட்டங்களைப் போதிக்கவும் கற்பிக்கவும் எவ்வாறு தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்களோ அவ்வாறே தமது வீட்டிலும் அதே பணியைத் தொடர்ந்தார்கள். இதனைச் சுட்டிக்காட்டும் வகையில் புனித திருக்குர்ஆன் ரசூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் மனைவிமார்களைப் பின்வருமாறு விளிக்கின்றது:

“மேலும் உங்கள் இல்லங்களில் வைத்து உங்களுக்கு உணர்த்தப்பட்ட அல்லாஹ்வின் திருவசனங்களையும் மதிநுட்ப விவகாரங்களையும் நினைவில் வைத்திருங்கள்.”

இறைதூதர் (ஸல்) அவர்கள் வாயிலாகப் புனித திருக்குர்ஆன் விசுவாசிகளுக்குப் பின்வருமாறு ஆலோசனை வழங்குகின்றது:

“உன் வீட்டார்களுக்குத் தொழுகையை நிறைவேற்றும்படி ஏவுவதோடு நீங்களும் இக்கடமையை முழுமையாக நிறைவேற்றுங்கள்.”

இறைதூதர் (ஸல்) அவர்கள் பகர்வதாவது:

ஒரு மனிதன் இரவில் தனது மனைவியை எழுப்பி இருவரும் சேர்ந்து இரண்டு ரக்அத்துத் தொழுகையை நிறைவேற்றுவார்களாயின், அல்லாஹ்வை திக்ரு செய்யும் (நினைவு கூரும்) ஆண்களின் வரிசையில் அந்த மனிதனையும் அல்லாஹ்வை திக்ரு செய்யும் பெண்களின் பட்டியலில் அந்த பெண்ணின் பெயரையும் பதிவு செய்யும்படி அல்லாஹ் கட்டளையிடுகின்றான்.” (அபூ தாவூத்)

இரண்டாம் கலீபாவான ஹஸரத் உமர் (றழி) அவர்கள் இரவின் கடைசி நேரத்தில் அல்லாஹ்வை வழிபடுவார்கள். பொழுது விடியும் நேரத்தில் “எழுந்து தொழுங்கள்” எனக் கூறிக் கொண்டு தன் மனைவியை எழுப்புவார்கள். பின்னர் உமர் (றழி) அவர்கள் பின்வரும் திருமறை வசனத்தையும் ஓதுவார்கள்:

“உங்கள் வீட்டாருக்குத் தொழுகையை நிறைவேற்றும்படி ஏவுவதோடு நீங்களும் அக்கடமையை முழுமையாக நிறைவேற்றுங்கள்.”

## ஒரே தரம்

7. உங்களுக்குப் பல மனைவிகள் இருப்பின் அவர்கள் அனைவரையும் சமமாக நடத்துங்கள்.

தமது மனைவிமார்களிடத்தில் சமமாக நடப்பதில் இறைதூதர் (ஸல்) அவர்கள் அதிக கவனஞ் செலுத்தினார்கள். ஒரு பிரயாணத்தைத் தொடங்குமுன் திருவுளச் சீட்டு இழுத்து அதன் மூலம் தெரிவுசெய்யப்படும் மனைவியை மட்டும் தம்மோடு அழைத்துச் செல்வார்கள். இறைதூதர் (ஸல்) அவர்கள் கூறியதாக ஹஸரத் அபூ ஹுறைரா (றழி) அவர்கள் அறிவிப்பதாவது:

“ஒரு மனிதனுக்கு இரண்டு மனைவிகள் இருந்து அவர்களை சமத்துவமாகவும், பக்கச்சார்பற்று நீதியோடும் நடத்தாதவிடத்து அவனுடைய உடலின் பாதி மரத்துப்போன நிலையிலேயே அவன் மறுமைநாளில் எழுப்பப்படுவான்.”

‘நீதி’, ‘சமத்துவம்’ என்பவற்றால் குறிப்பிடப்படுவது அவர்களை சகல விவகாரங்களிலும் சமமாக நடத்தி ஒவ்வொரு மனைவியோடும் ஒரே மாதிரியாக நடந்துகொள்வதாகும். ஒரு மனிதன் ஒரு மனைவியின் பால் விசேடமாகக் கவரப்படுவதும், அவளோடு நெருக்கமாக இருப்பதும், அவளிடத்தில் ஆழமான அன்பு செலுத்துவதும் அல்லாஹ்வினால் தண்டிக்கப்படக்கூடியதொன்றாகாது. (இன்னும் வரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(24ம் பக்கத் தொடர்ச்சி)

நன்மையான பக்தி நிறைந்த காரியங்களில் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பாக இருங்கள் பாவமும் அநியாயமான காரியங்களில் ஒத்துழைப்பாதீர்கள். (அல்குர்ஆன்)

மனிதரில் தோன்றியவர்களில் நீங்கள்தான் மிக்க சிறந்தவர்கள், மக்களை நல்லவைகளைச் செய்யுமாறு ஏவி தீயவைகளைச் செய்யாதவாறு அவர்களைத் தடுக்கிறீர்கள். (அல்குர்ஆன்)

ஒருவரைப்பற்றி ஒருவர் தீய எண்ணங்கொள்ளாதீர்கள். ஒருவர் ஒருவரின் விவகாரங்களைத் துருவித் துருவி ஆராயாதீர்கள். ஒருவருக்கெதிராக ஒருவரைத் தூண்டி விடாதீர்கள். பிறரை வெறுத்தல், பிறர்மீது பொறாமை கொள்ளல் என்பவைகளிலிருந்து விலகியிருங்கள். அனாவசியமாக ஒருவரையொருவர் எதிர்க்காதீர்கள். எப்பொழுதும் இறைவனின் அடிமைகளைப் போன்றும் அவனது சேவகர்களைப் போன்றும் இருந்து உங்களுக்கு மத்தியில் சகோதரர்களைப் போன்று வாழுங்கள் (நபிமொழி)

ஒருவனைக் கொடுங்கோலன் என்று அறிந்த பின்னும், அவனுக்கு உதவி செய்யாதீர்கள் (நபிமொழி)

சமூகம் தவறிழைத்துக் கொண்டிருக்கும் போது அதற்கு உதவிபுரிபவன், கிணற்றில் விழப்போகும் போது, எந்தவொரு கிணற்றில் விழப்போகும் ஒரு ஒட்டகத்தின் வாலில் தொங்கி நீங்களும் ஒட்டகமுமாக கிணற்றில் விழுவதற்குச் சமமாகும். (நபிமொழி)

நீங்கள் விரும்புவதையே பிறருக்கும் விரும்புங்கள். (நபிமொழி)

இவைகள்தான் இஸ்லாம் உறுதிப்படுத்திக் கூறி உருவாக்கி மாபெரும் சமூகத்தில் அது வளர்த்திருப்பதைக் காண விரும்பும் மேலோங்கிய மிக்க சமூகப் பண்புகளாகும்.

---

# பூவொன்று சிரிக்கிறது

பூ வொன்று சிரிக்கிறது,
சீதனச் சோலைக்குள்
புரட்சிக் காற்று சுழற்சியால்
பூ வொன்று சிரிக்கின்றது.

●

சடங்குத்தனியில் குந்திலிருந்த
பனித்துளியை,
இதயத்தின் அக்கினிச் சுவாசம்
பொசுக்கிவிட்டது. அதனால்தான்
பூ வொன்று சிரிக்கிறது.

●

வதுவைக்கு வரிவிதித்த
சீதனப் பேய்
அறிவுப் புரட்சியால்
அறிவதை பார்த்து-இவம் பூ
வொன்று
இதழ் விரித்துச் சிரிக்கிறது.

இஸ்லாத்தின் இனிய வழியை
இப்போதுதான்
பகைமை புரட்சி புரட்டிப்
பார்க்கிறது.
நவயுகத்தின் உயிர் மூச்சுகள்
குர்ஆனிய பூங்காவில் மலர்வதைப்
பார்த்து.
கன்னிப் பூவும் கண் விழித்துவிட்டது.

●

"மஹறு"க்குள் மூடம் புதைத்து
இதயத்தை அடகுவைத்து
இறை வாழ்க்கை வாழு—மறை
பறைசாற்றியதால் தான்
பூ வொன்று சிரிக்கிறது

● கலைப்பிரியன்

நீர் சமூகத்துடைய நெருங்கிய பந்துக்களுக்கும் அச்சமூட்டி எச்சரிக்கை செய்யும். உம்மைப் பின்பற்றிய விசுவாசிகளிடம், புஜம் தாழ்த்தி, (பணிவாகவும்) நடந்து கொள்வீராக!

ஆனால் அவர்கள் உமக்கு மாறு செய்தால், "நிச்சயமாக நான் உங்கள் செயலிலிருந்து விலகிவிட்டேன்" என்று கூறி (யாவரையும்) மிகைத்தோனும் அன்புடையோனும் ஆகிய வனிடமே நீர் (உமது எல்லா காரியங்களை) ஒப்படைத்து விடும். (214–216)

விசுவாசிகளே! நீங்கள் உங்களையும் உங்கள் குடும்பத்தினரையும், மனிதர்களும் கற்களும் எரிபொருள்களாகக் கூடிய நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதில் கடின சித்தமுடைய பலசாலிகளான மலக்குகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதில் (ஒரு சிறிதும்) மாறு செய்யமாட்டார்கள். அவர்கள் (வேதனை செய்யுமாறு) தங்களுக்கிடப்பட்ட கட்டளைகளையே செய்து வருவார்கள். (66:6)

(9ம் பக்கத் தொடர்)

எனவே ஒருவருக்கு தனது இலட்சியங்களைப்பற்றிய பூரண உணர்வுடனும் அவற்றை அடையும் வழியி லும் தன் நாட்களைக் கழிக்க முடிந்தால் அவனது வாழ்நாள் குறுகியதாக அமைந்து விட்டாலுங்கூட அவன் நீண்ட காலம் வாழ்ந்தவனாகிறான்.''

ஏழு வருடங்களுக்கு முன் இருதய சுத்தியோடு இம்முறையை மக்கள் முன் சமர்ப்பித்த ஸெய்யித் (ரஹ்) அவர்கள் அதே இலட்சியதாகம் கடமை உணர்வு அயராத முயற்சி என்பவற்றுடன் உலகில் நீண்ட காலம் வாழ்ந்துவிட்ட மனத்திருப்தியோடு மரணதண்டனைத்தீர்ப்பை புன்முறுவலோடு ஏற்றுக் கொண்டார்கள். தானும் குர்ஆனின் நிழலில் வாழ்ந்து மற்றவர்களையும் அவ்வாறு வாழ வருமாறு அழைப்பு விடுத்து வழியும் காட்டிய ஸெய்யித் குதுப் (ரஹ்) அவர்களிடம் இத்தத்துணிவு காணப் பட்டதில் அதிசயமிருக்க முடியாதல்லவா?

## தொடரும் போராட்டம்

',முஸ்லிம்கள் அல்லாஹ்வுக்கு கீழ்ப்படிதல் என்ற தங்களது வாழ்க்கை முழுவதையும் மாற்றியமைத் துக்கொள்ள வேண்டும். இதன் மூலமே அவர்கள் ஜாஹிலிய்யத்திலிருந்து விடுபடலாம், அவர்கள் தங் களின் ஈமான் நம்பிக்கை இஸ்லாமிய வாழ்வு என்ற ஆதாரங்களைத் தாங்கி அனைத்துவிதமான ஜாஹி லிய்யத்களுக்கும் எதிராகத் தொடர்ந்து போராடிக் கொண்டே இருக்கவேண்டும், இதில் அவர்கள் சோர்ந்து விடக்கூடாது.

ஏனெனில் ஜாஹிலிய்யாச் சமூகங்கள் இஸ்லாத் தை விரும்பும் மக்களோடு பொருதுவதை ஒருநாளும் கைவிடமாட்டா. ஒருவேளை அவை சமாதானம் செய்து கொண்டு தலைதூக்க முயலலாம். அல்லது தொடர்ந்தும் போராடி இஸ்லாத்தை ஒழித்துக் கட்ட முற்படலாம்' எப்படியும் இஸ்லாத்துக்கும் ஜாஹிலிய்யத்துக்குமிடையிலான போர் தொடர்ந்து செல்லுமேயன்றி ஓய்ந்துபோவதில்லை. ஆகவே நவீன ஜாஹிலிய்யா சமூகங்களுடன் நேருக்குநேர் பொரு தும் ஆற்றலை முஸ்லிம்கள் தங்களிடம் வளர்த்து கொண்டு துணிவுடன் முன்னேறிச் செல்லவேண்டும்.

அல்லாஹ்வைத்தவிர வேறு எவருக்கும் எந்தச் சக்திக்கும் அடிபணியக் கூடாது. அல்லாஹ்வுக்குரிய நமது அடிமைத்துவம் முஹம்மத் (ஸல்) அவர்கள் காட்டிய வாழ்க்கை வழியிலேயே அமையவேண்டும். இதுவே லா இலாஹ இல்லல்லாஹ் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் என்ற கலிமாவின் தத்துவமாகும்''4 இவ்வாறு தனது சிறந்த இஸ்லாமிய நூல்களின் சாரமாக அமைந்த மஆலிமு பித்தரீக்கில் எழுதிய ஸெய்யித் குதுப் (ரஹ்) அவர்களின் வாழ்க்கை அவர்க ளின் போதனைகளுக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்தது.

## ஷஹீதானார்

1966ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22ம் நாள் உலக இஸ்லாமிய இயக்கத்தினர்களும் முஸ்லிம் அல்லாத பலரதும் வேண்டுகோளையும் பொருட் படுத்தாது அக்கிரமத்தின் உருவான நாஸிரின் கொடுங்கோலர்கள் பேரறிஞர் ஸெய்யித் குதுப் அவர்களைத் தூக்கிலிட்டனர். அவரைக் கொல்வதால் அவரது கொள்கைகளும் அவர் வளர்த்த இஸ்லாமிய இயக்கமும் இருந்த இடம் தெரியாது மறைந்து விடும் என்று தாங்கள் பகற்கனவு கண்டார்கள்.

அல்லாஹ்வின் நேசர்களுக்கு எவ்வித பயமு மில்லை அவர்கள் கவலைப் படவுமாட்டார்கள் (10:62) என்று குர்ஆன் கூறுவதுபோல அன்னாரின் ஆவி நிம்மதியாக ஷஹாதத்தை ஏற்றுக் கொண்டது. இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன். ஆனால் அன்று முதல் அவர்களின் கருத்துக்களும் அவர்கள் வளர்த்த இயக்கமும் முன்னொருபோதும் இல்லாத அளவு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று மிக வேகமாக வளர ஆரம்பித்தன. இன்று இஸ் லாமிய இயக்கத்தில் ஆர்வமும் ஈடுபாடுமுள்ள எவரும் ஸெய்யித் (ரஹ்) அவர்களைப்பற்றி நன்கு அறிந் துள்ளார்கள். அன்னாரின் கருத்துக்களின் தாக்கம் இல்லாத இஸ்லாமிய இயக்கங்களே இல்லை என்று துணிந்து சொல்லக் கூடியஅளவு அவர்களின் கருத் துக்கள் இஸ்லாமியர்களுக்கு வழிகாட்டி நெறிப் படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆகவே 1966-8-22ல் இலட்சியத்தலைவர் ஷஹீதான போதிலும் அவரது கருத்துக்கள் நவீன இஸ்லாமிய இயக்கங்களின் வளர்ச்சிக்கு அவற்றின் ஏனைய பங்களிப்பைக் கொடுத்து அவற்றுக்கு வழிகாட்டிக் கொண்டிருக் கின்றன.

'பிரபோதய'
இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின்
மாதாந்த
சிங்கள வெளியீடு
தனிப்பிரதி ரூபா 5/-- மட்டுமே

தமிழ் நாட்டிலிருந்து மாதமிருமுறை
வருகிறது
“சமரசம்”
தனிப்பிரதி ரூபா 10/--
ஜமாஅதே இஸ்லாமி புத்தக நிலையம்
77, தெமட்டகொட வீதி,
கொழும்பு-9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமாம்கள் ஆற்றிய மகத்தான பணிகள்

## கோடிக்கணக்கான முஸ்லிம்கள் நான்கு இமாம்களையே பின்பற்றுகின்றனர்

### ஷரீஅத்தைப் புரிய வைத்ததே இமாம்கள்தான்

மௌலானா மவ்தூதி அவர்களின் விளக்கம்

''மௌதூதி மத்ஹபுடைய இமாம்களை மதிப்பதில்லை. அவர் மத்ஹபைப் பின்பற்றுவதுமில்லை.' இவ்வாறு கூறி பூச்சாண்டி காட்டி மக்களை ஏய்ப்போர் இருந்திருக்கிறார்கள். இத்தகையவர்களுக்கு மறுப்பாக இந்தியாவில் ஜமாஅதுல் உலமா என்ற உலமா சபையின் ஏப்ரல் 1990ம் இதழில் பிரசுரமான ஒரு கட்டுரையை இங்கு பிரசுரிக்கிறோம். ஆயினும் பூச்சாண்டி காட்டுவோர் விடுவார்களா? இனிமேல் வேறு பல குறைகளை கற்பனை பண்ணக்கூடும்.

''நான்கு இமாம்கள், இஸ்லாத்திற்காக ஆற்றிய அரும்பணிகளை அறியாமையால் மறுத்து, 'முஸ்லிம்களையே இமாம்கள் வழி கெடுத்து விட்டார்கள். எங்களுக்கு இமாம்கள் தேவை இல்லை, எவர்களையும் நாங்கள் பின் பற்றமாட்டோம்?' எனக்கூறிக் கொண்டிருக்கும் சிலர் ஜமாஅத்தே இஸ்லாமியின் நிறுவனர் மௌலானா மவ்தூதி அவர்களின் தெளிவான விளக்கத்தை ஏற்பார்களாக. இமாம்களை எதிர்ப்பவர்கள் முஸ்லிம் சமுதாயத்தை சின்னாபின்னமாக்க முனைபவர்களே யாவர். இவர்கள் எவராக இருந்தாலும் இந்தக் குழப்பவாதிகள் விஷயத்தில் எல்லா முஸ்லிம்களும் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். குழப்பவாதிகளை விட்டும் இந்த சமுதாயத்தை அல்லாஹ் பாதுகாப்பானாக. நான்கு இமாம்களைவிட தாங்கள் பெரிய அறிஞர்கள் என எண்ணும் இவர்களுக்கு முஸ்லிம்கள் நல்லறிவு புகட்டுவார்களாக (ஆசிரியர்).

குர்ஆன், ஹதீது கட்டளைகளைப்பற்றி நன்கு சிந்தித்த மார்க்கப் பெரியார்கள் பொதுமக்களின் சௌகரியத்திற்காகத் தெளிவாகவும், விரிவாகவும் மார்க்கச் சட்டங்களைத் தொகுத்து அளித்திருக்கிறார்கள். அவையே ''பிக்ஹு'' எனும் பெயரால் அழைக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் குர்ஆனில் உள்ள நுட்பங்கள் அனைத்தையும் புரிந்து கொள்ள முடியாது. சுயமே ஷரீஅத் கட்டளைகளைத் தெரிந்து கொள்ளும் அளவு ஒவ்வொருவரிடமும் போதிய ஞானம் இல்லை. இதனால் எந்த மார்க்கப் பெரியார்கள், பெருங் கவனத்தோடு உழைப்பு, சிந்தனை ஆராய்ச்சிக்குப்பின் பிக்ஹுச் சட்டங்களை தொகுத்திருக்கிறார்களோ அவர்களுடைய நன்றிக் கடனிலிருந்து உலக முஸ்லிம்கள் ஒருபோதும் விடுபடவே முடியாது. அவர்களுடைய உழைப்பின் விளைவாகத்தான் இன்று கோடிக்கணக்கான முஸ்லிம்கள் சிரமம் இல்லாமல் ஷரீஅத்தைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். யாருக்கும் இறைவன், இறைதூதர் ஆகியோருடைய கட்டளைகளைத் தெரிந்துகொள்வதில் எத்தகைய கஷ்டமும் ஏற்படுவதில்லை.

ஆரம்பத்தில் மார்க்கப் பெரியார்கள், தத்தம் முறைகளின்படி பிக்ஹு சட்டங்களைத் தொகுத்திருந்தார்கள். ஆனால் காலக்கிரமத்தில் நான்கு பிக்ஹுகள் முக்கியமாக உலகில் எஞ்சி நின்றன. இன்று உலக முஸ்லிம்கள் பெரும்பாலும் அவற்றையே பின்பற்றுகிறார்கள்.

(1) இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்கள் தொகுத்த பிக்ஹுவும் இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களுடைய பிக்ஹு தொகுப்பில் இமாம் அபூ யூசுப் (ரஹ்) இமாம் முஹம்மத் (ரஹ்), இமாம் ஸுபர் (ரஹ்) மற்றும் அவர்களைப் போன்ற சில பெரிய பெரிய மார்க்க அறிஞர்களின் ஆலோசனைகளும் அடங்கியிருக்கின்றன. இதுவே பிக்ஹு ஹனபி என்று அழைக்கப்படுகிறது.

(2) இமாம் மாலிக் (ரஹ்) அவர்களுடைய பிக்ஹு:- இது பிக்ஹு மாலிகி எனும் பெயரால் பிரசித்தி பெற்றிருக்கிறது.

(3) இமாம் ஷாபி (ரஹ்) அவர்களுடைய பிக்ஹு:- இது பிக்ஹு ஷாபியீ எனப்படுகிறது.

(4) இமாம் அஹ்மது இப்னு ஹம்பல் (ரஹ்) அவர்களுடைய பிக்ஹு:-

இதை பிக்ஹு ஹம்பலீ என்பார்கள். (1)

இந்த நான்கு பிக்ஹுகளும் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப்பின் இருநூறு வருஷங்களுக்குள் தொகுக்கப்பட்டுவிட்டன. இவற்றில் காணப்படும் கருத்து வேற்றுமைகள், முற்றிலும் இயற்கையானவையாகும். சிலர் ஏதாவது ஒரு விஷயத்தைக் குறித்து ஆராய்ச்சி செய்தால், எவ்வளவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்துகொள்ள முயற்சி செய்கால் அவர்களுடைய ஆராய்ச்சியிலும், அவர்கள் புரிந்து கொள்வதிலும் ஏதாவது சில கருத்து வேற்றுமைகள் ஏற்படுவது சகஜமே. ஆனால் அவர்கள் அனைவரும் நன்னோக்குடையவர்களாகவும், உண்மை விரும்பிகளாகவும், முஸ்லிம்களின் நலன் நாடுபவர்களாகவும் இருந்தார்கள். ஆகையால் முஸ்லிம்கள் எல்லோரும் இந்த நான்கு சிந்தனாத் தொகுப்புகளையும் உண்மையானவை என்று நம்புகிறார்கள்.

ஒரு விவகாரத்தில் ஒரே வழிமுறையைத்தான் பின்பற்ற முடியும். நான்கு மாறுபட்ட வழிமுறைகளைப் பின்பற்ற முடியாது என்பது வெளிப்படையான உண்மை. ஆதலினால் மார்க்க அறிஞர்களுள் பெரும்பாலோர் ''முஸ்லிம்கள் இந்த நான்கில் ஏதாவது ஒன்றையே பின்பற்ற வேண்டும்'' என்று கூறுகிறார்கள்.

---

(1) மத்ஹபுகள் தோன்றிய காலங்களும்; அவற்றின் இன்றைய நிலையும் வருமாறு:

'இமாம் அபூஹனீபா நுஃமான் பின் தாபித்' அவர்கள் ஹிஜ்ரி 80 (கி.பி. 699) ஆம் ஆண்டில் பிறந்து ஹிஜ்ரி 150 (கி.பி. 767) ஆம் ஆண்டில் காலமானார்கள். இன்று உலகில், இந்த மத்ஹபைப் பின்பற்றுவோர் ஏறத்தாழ 34 கோடி உள்ளனர். அவர்கள் துருக்கி, பாகிஸ்தான், பாரதம், ஆப்கானிஸ்தான், ஈரான், ஜோர்தான், இந்தோனேசியா, சீனா, சோவியத் ரஷ்யா ஆகிய நாடுகளில் பெருவாரியாக வாழ்கின்றனர்.

'இமாம் மாலிக் பின் அனஸ் அஸ்பாஹி' அவர்கள் ஹிஜ்ரி 95 (கி.பி. 714) ஆம் ஆண்டில் பிறந்து ஹிஜ்ரி 179 (கி.பி. 798) ஆம் ஆண்டில் காலமானார்கள். இன்று உலகில், இந்த மத்ஹபைப் பின்பற்றுவோர் நாலரைக் கோடி உள்ளனர். இவர்கள் மொரோக்கோ, அல்ஜீரியா, துனீஷியா, சூடான், குவைத், பஹ்ரைன் ஆகிய நாடுகளில் பெருவாரியாக உள்ளனர்.

'இமாம் முஹம்மது பின் இத்ரீஸ் அஷ்ஷாபியீ' அவர்கள், ஹிஜ்ரி 150 (கி.பி. 767) ஆம் ஆண்டில் பிறந்து ஹிஜ்ரி 240 (கி.பி. 854) ஆம் ஆண்டில் காலமானார்கள். இன்று உலகில் இந்த மத்ஹபைப் பின்பற்றுவோர் ஏறத்தாழ 10 கோடி உள்ளனர். அவர்கள் பாலஸ்தீனம், லெபனான், எகிப்து, ஈராக், சவூதி அரேபியா, ஏமன், இந்தோனேசியா, பாரதம் ஆகிய நாடுகளில் பெருவாரியாக வாழ்கின்றனர்.

'இமாம் அஹ்மது பின் ஹன்பல்' அவர்கள் ஹிஜ்ரி 164 (கி.பி. 780) ஆம் ஆண்டு பிறந்து ஹிஜ்ரி 241 (கி.பி. 58) ஆம் ஆண்டில் காலமானார்கள்; இன்றுலகில் இந்த மத்ஹபைப் பின்பற்றுவோர் ஏறத்தாழ 30 லட்சம் பேர் உள்ளனர். அவர்கள் சவூதி அரேபியா, லெபனான், சிரியா ஆகிய நாடுகளில் பெருவாரியாக வாழ்கின்றனர்.

— நன்றி-ஜமாஅதுல் உலமா ஜூன் 90

---

(28ம் பக்கத் தொடர்)

தொழுவதற்கெல்லாம் மிகவும் சிறந்த முறையில் வசதிகளையும் செய்து தந்தார்கள்.

இன்று வெறுமனே ஏட்டுப்படிப்புக் கற்பித்தலுக்கே பிரதான இடமளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களின் பொது வாழ்க்கைக்கு அவசியமான விடயங்கள்பற்றி பயிற்றுவிக்கப்படுவதில்லை. இதனை நிவர்த்திக்கவே மறைமுகமான பாடவிதானம் (Hidden curriculam) அவசியமாகின்றது. ஏனெனில் செயற்கிரியான வழிகாட்டுதலின்றி வெறுமனே உபதேசங்களால் மட்டும் மாணவர்களை நல்வழிப்படுத்த முடியாது. ஆகவே எமது முஸ்லிம் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் தலைவர்கள் யாவரும் பூரண இஸ்லாமிய நெறிநின்று முன்மாதிரியாகத் திகழ வேண்டும். இத்தகைய வழிகாட்டுதல் மாணவர்களை இயல்பாகவே நல்வழிப்படுத்தும்.

● ஜமாஅதே இஸ்லாமியின் இஸ்லாமிய குடும்ப ஆய்வுத் திட்டம் பற்றி உங்கள் கருத்தென்ன?

● இது ஒரு சிறந்த திட்டம். இத்திட்டத்தின் குறிக்கோளை அடைவதற்கு நாம் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். நாம் இதன் தேவையை உணர்ந்து, அதாவது குடும்பங்களுக்குள் இஸ்லாமிய சட்டதிட்டங்களை செயற்படுத்துவதற்குரிய சூழலை உருவாக்குவதைக் கருத்திற்கொண்டு எமது பாடசாலையில் விசேட நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை தயாரித்து 1989ம் ஆண்டிலிருந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இதன்கீழ் தாய்மார்களுக்கான பாசறையொன்று நடாத்தியுள்ளோம். இப்பாசறையில் பங்கு பற்றிய பெண்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க நல்ல விளைவுகளை ஏற்படுத்தியிருக்கிறது. இனிமேல் வருடாந்தம் இத்தகைய 6 பாசறைகள் நடத்துவதென முடிவுசெய்துள்ளோம்.

மேலும் இதன் கீழ் மாணவர்களுக்குப் பாசறைகள், வேலைத்திட்டங்கள் என்பவற்றை நடாத்தி சன்மார்க்க விடயங்களில் விசேட பயிற்சியளித்து வருகின்றோம்.

உண்மையில் இத்தகைய நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் தாய்மார்கள், பெண்பிள்ளைகள் முதலானோருக்கு உபதேசமும் பயிற்சியும் வழங்குவது ஜமாஅத்தின் இஸ்லாமிய குடும்ப ஆய்வுத் திட்டத்தின் நோக்கங்களை அடைய பெருதவியாக அமையும் என நினைக்கிறேன்.

(30ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மௌலவி மஜீதும் அவர் மகனும்

# கடத்திச் செல்லப்பட்டனர்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் நீண்டகால உறுப்பினர்களில் ஒருவரும் பலவருடங்களாக ஜமாஅத்தின் கிழக்குப் பிராந்திய நாஸிமாகப் பணிபுரிந்தவருமான மௌலவி ஏ.எல். அப்துல் மஜீத் அவர்கள் கல்முனையிலிருந்து காத்தான்குடிக்குப் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தபோது தீவிரவாதிகளால் கடத்திச் செல்லப்பட்டார்.

ஜூலை மாதம் 13ம் திகதி ஒந்தாச்சிமடம் என்ற இடத்தில் இது நடந்தது. பலநாட்களாக விசாரித்தும் பல இடங்களில் தேடியும் அவரைப் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. எனவே அவர்கள் படுகொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்களது குடும்பத்தார் நம்புகிறார்கள்.

இதற்கு சில மாதங்களுக்கு முன் மௌலவி அவர்களின் ஆண்மக்களில் ஒருவராகிய ஏ.எம். அக்ரம் என்பவரும் கடத்திச் செல்லப்பட்டார். அவரைப் பற்றிய தகவலும் இதுவரை கிடைக்கவில்லை. மௌலவி அவர்களுக்கு கடத்தப்பட்ட தனது மகன் காத்தான்குடிப் பகுதியில் இருப்பதாகச் செய்தி கிடைத்ததால் அவரை விசாரித்துவரச் சென்றபோதே மௌலவி அவர்களும் கடத்தப்பட்டார்கள் என்பது வேதனையுடன் குறிப்பிடத்தக்கது.

இந்தப் படுகொலைகள் கல்முனைப் பிரதேசத்தில் மட்டுமல்லாது மௌலவி அவர்களின் சேவையால் பயனடைந்த மக்கள் யாழ்ப்பாணம், மேல் மாகாணம் போன்ற பகுதிகளில் வாழும் முஸ்லிம்கள் மத்தியிலும் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது.

மார்க்க பக்தியும், சாந்தகுணமும் தாராளத் தன்மையும் படைத்த மௌலவி அவர்கள் கபூரிய்யாவில் பட்டம் பெற்று வெளியேறிய காலம் முதல் இஸ்லாமியத் தஃவாப்பணியில் ஈடுபட்டு வந்தார்கள். சுமார் நாற்பதாண்டுகளுக்கு மேலாக அவர்கள் செய்த மார்க்கப்பணிகளால் ஏராளமான மக்கள் நல்வழிப்படுத்தப்பட்டனர். மௌலவி அவர்கள் ஒரு சிறந்த பேச்சாளராகவும் எழுத்தாளராகவும் விளங்கினார்கள். கிழக்கு மாகாணத்தில் ஜமாஅத்தின் வளர்ச்சியில் மௌலவி மஜீத் அவர்களின் பங்களிப்பு மகத்தானது.

மௌலவியைப் போலவே அவரது மகன் அக்ரம் அவர்களும் இஸ்லாமிய வாழ்க்கை வாழ்ந்த ஓர் இளைஞர். கல்முனைப் பகுதி முஸ்லிம்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மௌலவி மஜீத் அவர்களும் அவர்களது மகன் அக்ரம் அவர்களும் படுகொலை செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று அவர்களது குடும்பத்தாரும் நெருங்கிய உறவினர்களும் நம்புகிறார்கள். இதனால் அவர்களின் அருமை மனைவி கணவனை இழந்ததற்காக இத்தா அனுஷ்டித்து வருகிறார்.

அடுத்தடுத்து இரண்டு ஷஹீதுகளை இழந்துவிட்ட [illegible] மௌலவி அப்துல் மஜீத் அவர்களின் குடும்பத்தார்களுக்கும் உறவினர்களுக்கும் ஜமாஅத்தே இஸ்லாமியும் அதன் உறுப்பினர்களும் ஆதரவாளர்களும் தங்களின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறார்கள். இவ்விரு ஷஹீதுகளின் இழப்புக்களையும் உரிய முறையில் அறிந்து அவர்கள் இருவரும் பாடுபட்ட இஸ்லாமிய இலட்சியங்கள் தழைக்க அருள் புரியுமாறும் அவர்களை இழந்துவிட்ட அவர்களின் குடும்பத்தாருக்கு மன ஆறுதலையும் பொறுமையையும் கொடுத்து துன்யாவிலும் ஆகிறத்திலும் அவர்களுக்கு அந்த பொறுமைக்காக நற்பயன்களை நல்கி அருள் செய்யுமாறு ஜமாஅத் சகோதரர்கள் அல்லாஹ்விடம் பிரார்த்திக்கிறார்கள்.

---

குடும்ப மட்டத்தில் இஸ்லாமிய நிர்வாகத்தை மேலும் கூட்ட நீங்கள் கூறும் ஆலோசனைகள் யாவை?

● பொதுவாக ஒவ்வொரு பெற்றோரும் தமது பிள்ளைகள் இஸ்லாமிய நெறியில் வாழ வேண்டும் என்றே விரும்புகின்றனர். அதற்கு முதற்கண் தாய்மார்கள் தமது பேச்சு, நடத்தை, பழக்க வழக்கங்களில் இஸ்லாமிய வழிநடந்து சிறந்த வழிகாட்டியாகத் திகழ வேண்டும். அத்துடன் வீட்டில் பூரண இஸ்லாமிய சூழலை உருவாக்க வேண்டும். சினிமா நிகழ்ச்சி பற்றி பேசாமல் பாடல்களைப் பின் இனிமையான கிராஅத் கசெட்டுக்களை ஒலிக்கச் செய்து வீட்டுத் தம் பாட்டில் ஏனைய அனுபவங்களை கவனிப்பதாலோ அல்லது பெரிய பேச்சாளர்களின் சொற்பொழிவுகளைக் ஒலிக்கச் செய்துவிட்டுக் கேட்பதாலோ மாத்திரம் வீட்டில் இஸ்லாமிய சூழல் உருவாகி விடாது நடைமுறையில் காட்ட வேண்டும். ஏனெனில் இளவயதிலேயே பிள்ளைகளிடம் நல்லொழுக்கங்களைப் புகுத்துவது இலகுவானது. பிள்ளைகளுக்கு நல்வழியுரைகளை, நற்பழக்க வழக்கங்களை அல்லது தொழுகை முதலான மார்க்கக் கடமைகளை பயிற்சிக் கொடுக்க முன் பெற்றோர் அவற்றை தாமும் கடைப்பிடிப்பவர்களாக இருக்க வேண்டும்.

மேலும் முக்கியமாக நாம் மார்க்க விடயத்தில் மேலானவர்களுடன் அதிகம் உறவு வைத்துக் கொள்ள வேண்டும் அத்துடன் இபாதத்துக்குப் பங்களிக்காது நடப்பவர்களுடன் அதிகம் நட்பு வைக்க இடமளிக்கக் கூடாது. இது குடும்பத்தினரில் பாதிப்பை ஏற்படுத்தும்.

● அல்லாஹ், மற்றும் பெண்களுக்கு அழகிய பணிகளை மேலும் விஸ்தரிப்பது பற்றியும் உங்கள் கருத்துக்களைக் கூற விரும்புகிறீர்களா?

● அல்ஹஸனாத் அனைவரும் படிக்கும் பயன்பெறக்கூடிய தரமான ஒரு சஞ்சிகை. வாசகர்களின் சிந்தனையைத் தூண்டக் கூடிய பல வேறு தலைப்புகளையும் உள்ளடக்கிய விடயங்கள் இடம் பெறுகின்றமை இதன் சிறப்பை எடுத்துக்காட்டாய் அமைகிறது.

பெண்கள் பகுதியில், அவர்களின் அன்றாட வாழ்வுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு விளக்கம் அளிக்கக்கூடிய கட்டுரைகளை சேர்த்தால் இதில் இன்னும் இடம்பெறச் செய்வது பயனுடையதாக இருக்கும் என நினைக்கிறேன். மேலும் வரலாற்றுப் பெண்மணிகள், மற்றும் ராபியா பஸரியா போன்ற தலைவர்களுக்கு உதாரணமாகத் திகழக்கூடிய மாதர்களின் வாழ்க்கை வரலாறுகளைத் தொடர்ந்து ஒவ்வொரு மாதமும் பிரசுரித்தால் அது பெண்கள் தம் வாழ்வை சீர்திருத்தி அமைத்துக் கொள்ள உதவியாக அமையும் என்றும் கருதுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(19ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டு செயற்பட்டதன் விளைவாகவும்; கம்யூனிஸம், பாத் சோஷலிஸம், அரபு தேசியவாதம் போன்றவற்றைப் பின்பற்றி தமக்கிடையே இணக்கமின்றி வாழ்ந்ததாலும் தான் இந்த கெடுகெட்ட நிலை உருவானது என முஸ்லிமல்லாத வெளிநாட்டவர் கருத மாட்டார்கள். மாறாக, 'இவர்கள் முஸ்லிம்களே' என்றும், இவர்களால் தான் எமக்கு துன்பமும், துயரமும் ஏற்பட்டன என்றும் கருதுவர். இக்கருத்து நாளாகப்பரவுவதை விட வேகமாக இஸ்லாத்தின் எதிரிகளால் பரப்பப்படக் கூடியதாகவும் அமையலாம்.

எனவே தற்போதைய இவர்களது நிலை இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்திவிடலாம்; அத்தகைய நாடுகளின் இஸ்லாமிய தஃவாவுக்கும் இடைஞ்சலாகவும் அமையலாம். இது வெறும் கற்பனையன்று.

உதாரணத்திற்கு, நம் நாட்டவர் மத்திய கிழக்கில் வேலை செய்வதனால் பல கோடி ரூபா வெளிநாட்டு செலாவணி கிடைத்து வரும்போது சிற்சில வேளைகளில் ஓரிரு அசம்பாவிதங்கள் நடந்தாலும் கூட, இன்றுள்ள பொதுவான தொடர்பு சாதனங்கள் முஸ்லிம்களால் செய்யப்பட்ட தீய செயல்களாக அவற்றை சித்தரித்துக்காட்டத் தவறவில்லை. இந்நிலையில் இப்படியொரு பாரிய பிரச்சினை உருவாகி மக்கள் கூட்டங்கூட்டமாக அலைந்துறும் நிலை தோன்றுமாயின் எத்தகைய தீய பிரசாரங்கள் இடம்பெறும் என எண்ணிப்பார்க்கலாம்.

## சோதனை

மூன்றாவது விபரீதம், சர்வதேச ரீதியாக எழுச்சி பூர்ந்து வரும் இஸ்லாம் புதுவிதமான பல சவால்களை சந்திக்க நேர்வதாகும். உண்மையில் எந்த எதிர்ப்பும் இஸ்லாத்தை எதுவும் செய்துவிட முடியாது. எனினும் எதிர்ப்புகள் யாவற்றை சந்தித்து அவற்றைத் தவிடு பொடியாக்கிக் கொண்டு முன்செல்லும் இஸ்லாமிய அலைகள், இஸ்லாத்தை ஏற்ற முஸ்லிம்களின் சீர்கெட்ட செயல்கள் காரணமாக பல புதிய பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப் படுகின்றது.

பிரதானமான இந்த விபரீதங்களுடன் இன்னும் பல துணை விபரீதங்களும் இருக்கின்றன. எல்லாமாகச் சேர்ந்து முஸ்லிம்களால் சுமக்க முடியாத பாரிய விளைவுகளை ஏற்படுத்தி விடும். அவை முஸ்லிம் உலகை-குறிப்பாக மத்திய கிழக்கு அரபு நாடுகளை இன்னும் பல வருடங்களுக்குப் பின்னுக்குத் தள்ளி விடுவதுடன் இஸ்லாத்தின் எதிர் சக்திகள் பெரும் பயனடையும் சூழ்நிலையும் உருவாக்கிவிடும்.

இந்த உண்மைகளை எல்லாம் கவனத்தில் கொள்ளாது சில கட்சியினர் ஈராக்குக்கு ஆதரவாகவும் வேறு சிலர் குவைத்துக்கு ஆதரவாகவும் குரல் எழுப்பத்தக்க கட்டிக்கொண்டு களத்தில் குதித்திருப்பது கவலை அளிப்பதாகவுள்ளது. தம் கட்சிக்கு ஆதரவு திரட்ட ஈராக்கிய ஆக்கிரமிப்பை சரிகாண்பவர்கள் தாம் வாழும் நாட்டை மற்றவர் ஆக்கிரமிக்க முயல்வதானாலும் சரிகாண்பார்களா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

## தீர்வு

எனவே, தற்போதைய பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்படுவதற்குக் கீழ்க்காணும் நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்;

1. ஈராக் தனது படைகளை குவைத்திலிருந்து முற்றாக வாபஸ் பெற வேண்டும்.
2. அமெரிக்கா உட்பட சகல மேற்கத்திய நாடுகளின் படைகளையும் வெளியேற்ற வேண்டும்.
3. வெறும் இஸ்லாமிய கோஷங்கள் எழுப்பாது உளப்பூர்வமாகவே சகல முஸ்லிம் நாடுகளும் இஸ்லாமிய அடிப்படையில் ஒன்றுபட வேண்டும். தமக்கிடையேயுள்ள பிணக்குகளை அம்சங்களைவிட்டும் பேசித்தீர்க்க முனைய வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம்தான் அமைதி பிறக்க முடியும்; இணக்கமான வாழ்வுக்கான அடித்தளங்களை அமைத்துக் கொள்ள முடியும்.

அல்லாஹ் கட்டளை பிறப்பிக்கின்றான்,

"நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கு கீழ்ப்படியுங்கள். அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். மேலும், உங்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் (கீழ்ப்படியுங்கள்). பின்னர் ஏதேனும் விவகாரத்தில் நீங்கள் கருத்து வேறுபாடு கொண்டால்; அதனை அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் திருப்பி விடுங்கள், நீங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமை நாளின் மீதும் நம்பிக்கை கொண்டோராயின் இதுதான் சரியான வழிமுறையாகும், இறுதி விளைவின் கோணத்திலிருந்து பார்த்தாலும் இதுவே சிறந்தது." (அல்குர்-ஆன் 4:59)

வெளிவந்துவிட்டது

**1991 ஆண்டிற்கான பிறைக் கலண்டர்**

- கண்ணைக் கவரும் பல் வர்ண அரபு எழுத்தணி
- தரமான கடதாசியில் (Art Paper) ஒப்செட் (off set) முறையில்...

இலங்கை ஜமாஅதே இஸ்லாமியின் தஃவா நிதிக்காக அழகு பெற அச்சாகியுள்ளது

தொடர்பு கொள்ளுங்கள்

செயலாளர்
இலங்கை ஜமாஅதே இஸ்லாமி
கொழும்பு நகரக் கிளை,
77, தெமட்டகொடை வீதி
கொழும்பு-9.
தொலைபேசி 687091, 685030, 692760
698771



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(18ம் பக்கத் தொடர்ச்சி)

கட்டளை. நமது படை சமாதானப் படையே; இது அமெரிக்கர்களையோ மற்றவர்களையோ எதிர்த்துப் போராடச் செல்லவில்லை. ஆனால் ஆக்கிரமிப்பாளர் எவராயினும் அவர்களை எதிர்த்து நிற்கும் கடமை இதற்குண்டு. இவர்களையும் இவர்களைப் போன்ற இஸ்லாமிய இராணுவத்தினரிடமும் வளைகுடாப் பாதுகாப்புப் பிரச்சினையை விட்டு விட்டு அந்நிய படைகளை வெளியேறச் செய்வது நமது முக்கிய நோக்கமாகும்.

ஸஊதி அரேபியாவும் அத்தப்பிராந்தியத்தின் ஏனைய நாடுகளும் ஏனைய முஸ்லிம் நாடுகளின் முயற்சிகளுக்கு ஆதரவு காட்டினால் இஸ்லாமிய நாடுகள் பலனுள்ள நல்ல முறையில் ஒத்துழைக்கும். இதனால் ஸஊதி அந்நிய படைகளின் தங்கியிருக்க வேண்டிய தேவையில்லாமல் போகும் என்பது எனது நம்பிக்கை.

**பேராசிரியர் புர்ஹானுத்தீன் ரப்பானி**

ஜம்இய்யதே இஸ்லாமி

### பிரச்சினைகளுக்கு இஸ்லாமிய தீர்வு காணுங்கள்

பிலேச்சத்தனமான நிலைமையுத்தம் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பலவீனப்படுத்தி மீண்டும் அடிமைகளாக்குவதற்கு பயங்கரமான இரகசிய மான சர்வதேச திட்டம் என்ற ஆபத்துக்களை இஸ்லாமிய அரபு நாடுகளும் தவிர்ப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும் எதிர்நோக்கியுள்ள இக்கட்டத்தில் நமது வேண்டுகோள் இதுவாகும்.

1. வளைகுடாப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முதலாவது நடவடிக்கையாக அங்கிருந்து அந்நிய படைகள் அனைத்தும் வெளியேறவேண்டும். அதேவேளை குவைத்திலிருந்து ஈராக்கிய இராணுவமும் தாமதமின்றி வெளியேறிவிட வேண்டும். பிரச்சினைக்குரிய எல்லைப் பிரதேசங்களில் ஏனைய அரபு இஸ்லாமிய நாட்டு இராணுவம் நிறுத்தப்பட வேண்டும்.

2. குவைத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் உரிமையை அந்நாட்டு மக்களிடம் விட்டுவிட வேண்டும். இதில் எவரது தலையீடும் கூடாது.

3. குவைத், ஈரான் ஆகிய நாடுகளுடன் ஈராக் கிற்குள்ள பிரச்சினைகள் அனைத்தும் இஸ்லாமிய கண்ணோட்டத்தில் முஸ்லிம்களின் முயற்சியால் தீர்க்கப்படவேண்டும். இதில் எந்தக் காரணங் கொண்டும் அந்நிய நாடுகளின் நேரடியான அல்லது மறைமுகமான தலையீடும் இருக்கக்கூடாது.

—ஹமாஸ்

இஸ்லாமிய பாதுகாப்பு முன்னணி, பலஸ்தீன்

---

(15ம் பக்கத் தொடர்ச்சி)

ராமர் சென்னைக்கு பூஜை நடாத்த முடிவு செய்யப்பட்டது.

- இரண்டாவது கட்ட நடவடிக்கையாக பூஜிக்கப்பட்ட செங்கற்களை தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களுக்கு கொண்டு வந்து 'மஹாயாகம்' புரிவது.
- மூன்றாவது பூஜிக்கப்பட்ட செங்கற்களை அயோத்திக்கு அனுப்பி வைப்பது.
- நான்காவது நவம்பர் 9, 1989 அன்று அயோத்தியில் பாபரி மஸ்ஜித் வளாகத்தில் ராமருக்கு 25 கோடி ரூபாய் செலவில் கட்ட திட்டமிடப்பட்ட கோவிலுக்கு அடிக்கல் நாட்டுவது.

மேற்கண்ட நடவடிக்கைகள் ராஜீவ் காந்தி அரசின் அனுசரணையுடனும் ஆசிர்வாதத்துடனும் ஆரம்பமானது. செங்கற்கள் சேர்க்கும் "ராமசிலா பூஜை" சென்ற முஸ்லிம் பகுதிகளில் எல்லாம் இரத்த ஆறு ஓடியது. பாகல்பூர் என்ற முஸ்லிம் பகுதி கடுமையாக தாக்கப்பட்டது. இவ்வாறு நடந்தும் ராஜீவ் காந்தி அரசு ஷாபானு வழக்கை தடைச்சரியாகக் கையாளாமல் இருந்தது. அரசு வழங்கிய அனுமதியை பயன்படுத்தி 1989 நவ. 9ம் திகதி விசுவ ஹிந்து பரிஷத் பாபரி மஸ்ஜித் நிர்வாகத்திடம் கட்டப்பட்ட ஒரு பகுதியில் அடிக்கல் நாட்ட ஓர் இடத்தைத் தெரிவு செய்தது. நவ. 9ம் திகதி துவேஷமிக்க முழக்கங்கள் எதிரொலிக்க கோவிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. 1990 அக்டோபர் 30 கோயில் கட்டட வேலை ஆரம்பிக்கப் போவதாகவும் பாரதிய ஜனதா கட்சி சொல்லி விட்டது.

"இறுபான்மையினர் எனும் ஒரே காரணத்திற்காக முஸ்லிம்களின் உணர்வுகள் புண்பட அல்லது புறக்கணிக்கப்பட எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்ற உத்தரவாதத்தையும், நம்பிக்கையையும் இந்தியாவின் வாழும் சிறுபான்மை முஸ்லிம்களின் மனதில் விதைப்பது அவசியமாகும்" என்று பதவியேற்றவுடன் வி. பி. சிங் கூறியிருக்கிறார். பாபரி மஸ்ஜித் விவகாரம் எப்படி முடியுமோ? பொறுத்திருந்து பார்ப்போம்!

---

(2ம் பக்கத் தொடர்ச்சி)

## நீதி வழங்க வேண்டும்

குவைத்மீது ஈராக்கின் அநியாயமான ஆக்கிரமிப்பை காஷ்மீர் ஜமாஅதே இஸ்லாமி மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது. இந்த அநியாயச் செயலோடு ஈராக் நிறுத்திவிடாது குவைத்தை தனது 19 ஆவது மாகாணமாகவும் பிரகடனப் படுத்தியிருப்பது ஜனாதிபதி சத்தாமின் பிலேச்சத்தனமான போக்கைக் காட்டுகிறது.

எனவே ஐ. நா. பாதுகாப்பு சபையும் இஸ்லாமிய நாடுகளின் கூட்டமைப்பும் இவ்விஷயத்தில் உடனடியாகக் தலையிட்டு குவைத்தை விட்டு ஈராக் வெளியேற வேண்டும். நியாயமான கோரிக்கைகளுக்கு ஈராக் கட்டுப்படாதவிடத்து நியாயமான அரசியல் இராணுவ பொருளாதார தடைகளை விதித்தேனும் அதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் ஜமாஅத் கேட்டுக்கொள்கிறது.

ஈராக்கின் தலையீட்டைக் காரணங் காட்டி ஸஊதி அரேபியாவில் அமெரிக்கா தனது இராணுவத்தை குவிப்பதையும் ஜமாஅத் வன்மையாகக் கண்டிப்பதோடு அங்கிருந்து அந்நியப் படைகளை வெளியேறுமாறு ஸஊதி அரசையும் கேட்டுக் கொண்டது.

**பேராசிரியர் அப்துர்ரஷீத் அத்தூராபீ**

அமீர், ஜமாஅதே இஸ்லாமி ஜம்மு காஷ்மீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registred as a News paper at the G P O Sri Lanka under No QD 113/News/90

மாவனல்லையில் ..................

நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகள் ஓடர் கொடுத்து
குறித்த நேரத்தில் செய்து கொள்ள தலை சிறந்த ஒரே இடம்:

# செலக்ஸன் ஜுவலர்ஸ்

19 A, சென்றல் மார்கட்,
மாவனல்லை.



# SELECTION JEWELLERS

19A, CENTRAL MARKET,
MAWANELLA.

Published by Sri Lanka Jama ath e Islami
77 Dematagoda Road, Colombo 9

Printed at I P C Printing Press,
320, Dematagoda Road, Colombo 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org